உ

கடவுள் துணை.

மஹாமகத்துவம்பொருந்திய

# அகத்தியர் ஜனகருக்கு

உபதேசித்தவயித்தியம்-௩௱.

இவை

மதுரைபுதுவை ... ச்சங்கங்களில்

... நடாத்திய

க...

வேதகிரிமுத லியார் - ...ரர்கள்

**ஆறுமுக முதலியா... லும்**

ஆயு...ள்வேத பாஸ்கரர்

**கந்தசுவாமி முதலியார...லும்**

தெ...ன்னாட்டுப்பிரதிகளைக்கொண்...ம்

இ...த்தாட்டுப்பிரதிகளைக்கொண்டும்

ஆராய்ச்சிசெய்வித்து

இரிசப்பமுதலியார் - குமாரர்

**பரசுராம முதலியாரால்**

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு காப்பி-௧௦௦௦

௲௮௭௧ வ௵ மார்ச்சி௴.

ரிஜிஸ்டெர்ட்காப்பிரைட்.

# விளம்பரம்.

இதனா லியாவருக்கு மறிவிப்ப தியாதெனில் சென்னையைச் சார்ந்த சூளை வீரண்ணந்தோட்டம் தொட்டிக்கலை குமரப்ப முதலியார் வீதியின் (௩௯-வது) கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திராநின்ற பரப்பிரமமுத்திராக்ஷரசாலையின் தலைவராகிய தி-இ-பரசுராம முதலியாரால் தமது அச்சுக்கூடத்தில் இதாகிய அகஸ்தியமகாமுனிவர்திருவாய்மலர்ந்தருளிய ஜெனகரர்வயித்தியம்(௬௱)பதிப்பிக்கப்[...] ...ளக ம்-வருஷித்து (௨௫-வது) ...பயிலை

ஆக்ட்டின்(௨௰-வது) பிர[...] ...யச்சுக்கூடத் தலைவர்களு

பெற்றிருக்கப்பட்ட த[...]ல்லி யிருக்கப்பட்டவருடைய வநும ...ளும்,

யின்றி வேறுபாஷை[...]யல் மொழிபெயர்த்தும்அச்சிடக்கூடாது ப்படிசெய்வாராயின்கோர்ட்டின்மூலமாய்த் தண்டனைக்கு[...] திக்கப்படும், மேலு[ம்], இதையும், இன்னும் இதனடியிற்கண்டிருகிற இச்சிலவன்ன புத்தகங்களையுமல்லாமல்பெரியோர்களுக்கு மற்றவர்களுக்கு முபயோகமான வநேகவித புத்தகங்களை[...] வேண்டிநர்கள் மேற்சொல்லி யிருக்கிறவராகிய தி-இ-ப முதலியாரிடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| தன்வந்திரிசிமிட்டுரத்தினச்சுருக்கம் | ௩௬௰ |
| தன்வந்திரிகலைக்ஞானம் | ௫௱ |
| தன்வந்திரிவைத்தியசிந்தாமணி | தூ௨௱ |
| அகஸ்தியர்வைத்தியவல்லாதி | ௬௱ |
| அகஸ்தியர்பஞ்சகாவியநிகண்டு | ௮௱ |
| அகஸ்தியர்ஆயுள்வேதம் | தூ௨௱ |
| அகஸ்தியர்பாலவாகடம் | ௩௱ |
| அகஸ்தியர்குருநாடி | ௨௬௫ |
| அகஸ்தியர்ஜெனகருக்குஉபதேசித்தவயித்தியம் | ௬௱ |
| இராமதேவர்வைத்தியகாவியம் | தூ |

...து.

உ

சிவமயம்.

ஸ்ரீமான். வசகவி.

# அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியம் - ௬௱.

காப்பு.

ஆதியெனும்பராபரமாயண்டரெல்லாம்
  ஆதிஓமென்றுதித்தஅநாதிபாதம்
சோதியெனுமனோன்மணியாம்வாலைபாதந்
  துலங்குகின்றமாலரனைத்துதித்துநன்றாய்
நீதியுள்ளமுனிவனென்றமரர்பாதம்
  ரிஷிக்குள்ளானந்தகுருபாதம்போற்றி
வேதியர்கள்நான்மறையைத்துதித்துநாளும்
  வேன்முருகனைங்கரனைப்போற்றிசெய்வாம் (க)

போற்றினேன்கலைமகளைதினமும்வாழ்த்திப்
  புகழ்பெரியவயித்தியரோபுகலக்கேளீர்
நாற்றிசையிலுள்ளபலவயித்தியத்தை
  நன்றாகவடமொழியிலாய்ந்துபார்த்து
மாத்திரையுஞ்செந்தூரபற்பமெல்லாம்
  மாற்றமில்லாவகையாகச்சொல்வேன்பாரு
சாற்றியதோர்லேகியமுங்கர்க்கந்தானும்
  தயிலமுடன்கியாழவகைசார்ந்துபாரோ (உ)

## நாகசெந்தூரம்.

பாரப்பாவயித்தியரோ நாகந்தன்னைப் பண்பாகச்செந்தூரம்பகரக்கேளு, வாரப்பாயிலுப்பையெண்ணெயாவின்வெண்ணை வளமானவயக்கரண்டிதன்னிலிட்டு, சேரப்பாநாகமதை யைந்துபலமுருக்கித் திடமாகவெள்ளாட்டுப் பாலிற்சாய்க்க, ஆரப்பாவெளியர்கச் சொல்லப்போறார் ஐநான்கு விசைபாலி லுருக்கிச்சாயே. (௩)

சாய்த்திட்ட நாகமதைச்சட்டியிலிட்டுத்தருகாமலடுப்பேற்றியுருக்கும்போது, சேர்த்திடுவாய் சூரணந்தான் சுக்கு மஞ்சற்றிறமாகப் பலமொன்று வகையொன்றாக, ஆர்த்திட்ட வோமம்படியலாயுங்கூட்டி யப்பனே வெடியுப்பு பலமுநாலு, மார்த்திட்டமருந்ததனைத்தாணிடித்து வளமானநாகமேற்றூவிக்கிண்டே (௪

கிண்டியே வறுத்திடுவாய் தூவித்தூவிக் கிருபையுடன்செந்தூரமாகும்பாரு, பண்டிதரோ யெடுத்திதையும் பதனம்பண்ணு பண்பான வனுபானஞ் சொல்லக்கேளு, மண்டலத்தில் நோய்களுக்குத் திரிகடுகுகூட்டி யைமர்ந்தனே வறுத்துநன்றாய்ப் பொடித்துக்கொண்டு, பண்டுள்ள நோய்தீர வெருகடியுந்தேனும் பணவிடையுஞ்செந்தூரம்பரிந்துகொள்ளே. (௫)

கொள்ளவே யிருபதுநா ளிருநேரந்தான் கூண்டோடே போகுமடா விருமலிலை, தள்ளாமல்மந்தா:ரசுவாசகாசந் தலைடயறவே தொண்ணூற்றெட்டாறும்போகும், விள்ளவே[illegible]வுத்திரமும்மூளைமூலங்கள் விஷநீர்கள்தடில்புண்கள்சீழ்நீர்போகும், உள்ளசுத்தகெர்ப்பநூற்றிருபத்தெட்டும் ஊஷிணத்தின் செர்ப்பமுந்நூற்றுடனேபோமே. (௬)

போகுமடா பிறமேகஞ்சுக்கிலம்பதினெட்டும் பொல்லாதவிந்திரியக் கட்டுமைந்தும், தாகமுடன் பதினெட்டுக்கல்லடைப்பன் தருகாது சலதயடைப்பன் பதினாறும்போகும், சோகமில்லாப்போகம் பனிரண்டுந்தீருஞ் சுத்தமுடன் பவுத்திர நாலைந்துந்தீரும், ஏகமுடன் பதினாறு குன்மந்தீரும் ஏழைகாள் கண்காந்தலெல்லாம்போமே. (௭)

### சலக்கழிச்சலுக்கு.

எல்லாந்தான் போவதற்கு வின்னங்கேளு வேகமுடன்பஞ்சாங்கத்தயிலம்வாங்கி, நல்லதோ ரதன்வித்தைச் சூரணித்து நாட்

டுவாம்வெருகடியில் தயிலஞ்சேர்த்து, பொல்ல
ருபதும்போம் பொருக்கம்வ பணவிடை செந்தூரம
நில்லாதுநோயெல்லா மோடிப்போகும் நிச்சயமா யிருபது
ள்நீகொள்வாயே. (அ)

வாய்க்கவேமண்டலந்தான் கொள்ளவென்றால் வளமாகப்ப
ஞ்சாங்கஞ் சூரணித்து, தாக்கிடுவா யம்மூலி தயிலந்தன்னிற் றரு
காமல் வெருகடியும்பணவிடையுங் கொண்டால், சாய்க்கின்றவெ
லும்புருக்கிமே கந்தானுஞ் சலக்கழிச்சல்வெகு மூத்திரக்கிரிச்சி
தீரும், பாக்கியமாய்க் கைம்முறைநீ செய்தாயானால் படுபாவி
நோய்களெல்லாம்பாரிற்போமே. (கூ)

குன்மத்துக்கு-எலிகடிமூலத்துக்கு.

பாரியெனுங் கொடிவேலிசூரணித்துப் பணவிடையும்வெ
ருகடியுந் தேனுங்கூட்டி, நாரியே தின்றக்கால் குன்மமெட்டும்
நாடாதுவெலிகடியு மிளைப்புவிளை, வீரியமா யிருபதுநாள்தின்
றாயானால் விட்டோடிப் போகுமடாவின்னங்கேளு, வாரியெனு
ம்புரண்டைவேர் சூரணித்து வளமாக வெருகடியுந் தேனுங்கூ
ட்டே, (ய)

தேனிலேகொண்டாக்காலிருநேரந்தான் றீருமடாமூலமெ
ல்லா மைந்துநாளில், மானேகோரோசினை விடையும் ரண்டு
மகத்தான செந்தூரம் பணவிடையுங்கூட்டி, ஆனதொருமுலைப்
பாலில்மூன்றுநாள்கொள் ளாறுமடாசுரங்கள்பதினெட்டும்போ
கும், வானிலுள்ளதிப்பிலி சூரணமேசெய்து மகத்தான செந்தூ
ரம்பணமுங்கூட்டே. (யக)

பணவிடைதான் வெருகடியிற் றேனிற்கொள்ளப் பண்டுள்
ளமூலமுடன் கிராணிதீரும், மணமுடைய சாதிக்காய் கிராம்வசு
வாசி வகைவகைக்குமுக்கழஞ்சு வடிதூளாக்கி, இணங்கவே நெய்
தேனில் வெருகடியுங்கருவுங்கூட்டி யிஷ்டமுடன் பணவிடைசெ
ந்தூரஞ்சேர்த்து, வணங்கியே யிம்முறைதா னுண்டாயானால் ம
க்களேதாதுவிர்த்திமகிழ்ந்துபாரே (யஉ)

காரீயச்செந்தூரம்.

மகிழ்ந்திடவே காரீயச் செந்தூரங்கேளு மக்களே காரீயம்
பலமிரண்டு, சுகமுடனே சட்டியிட்டுப் பச்சை மஞ்சள்சூரணி

று பலமுநன்ருய், வகையுடனே நாயுருவி சமூல
மஞ்சள்தனைத் தூவியே கிண்டிக்கிண்டி, தகையில்லா
ருசாமங் கிண்டியப்பா சவர்க்காரம் பொடியுமலாப் பலமுரா
ண்டே. (௧௩)

கிண்டவேயிருகழஞ்சு இந்துகூட்டி கெடியானவடிதாரங்க
மூஞ்சிரண்டு, மண்டலத்தோர் கொண்டாட வலகக்குச்சாமம் வ
கையுடனேநாயுருவிக்காம்பாற்கிண்டி, கண்டோ செந்தூரங் க
ண்கொள்ளாது கருகாமல் வறுத்திடுவாய் நாலுசாமம், பண்டித
ரோயெடுத்துநீர் பதனம்பண்ணு பாங்கான செந்தூர மின்னங்
கேளே. (௧௪)

இன்னந்தா னிரண்டுபலங் காரீயத்தை யிதமாகச் சுத்திபண்
ணிச்சட்டியிட்டு, சொன்னதொரு மாதளை காலத் துலாமுந்தோ
ட்டைச் சுகமாகமஞ்ச ளர்த்த வீதங்கூட்டி, சன்னதமா யிரண்டு
மொன்ருய்த்தூளேயாட்டி தருகாமல் வெருகடித்துளெடுத்துத்
தூவி, அன்னமே யிருசாமம்வறுத்துநன்ரு யப்பனேவெடியுப்பு
ப்பலந்தாஞலே. (௧௫)

நாலுடனேகாரமுடன் சீனங்கூட்டி நலமாகவகையொன்று
பலமுஞ்சேர்த்து, பாலகனே மூன்றுமொன்ருய்த் தூளேசெய்
து பண்புடனே வறுத்திடுவாய் தூவித்தூவி, கோலமுள்ள செந்
நாயுருவித் தண்டால் குறுகவே வறுத்திடுவா யிரண்டுசாமம், சீல
முடன் முப்பது நாழிகையுட்குள்ளே செந்தூரமாகுமடாதெளி
ந்துசெய்யே. (௧௬)

## குட்டத்திற்கு குன்மத்திற்கு.

செய்யவே சர்க்கரையிற் பணவிடையுங்கொள்ள திரோகத்தி
ற்குட்டமெல்லாந்தீர்ந்து போகும், தொய்யுமடாபதினெட்டுநா
ளுக்குள்ளே தூளேடேபோகுமடா குட்டமெல்லாம், நையவே
வலிக்கின்ற குன்மமெல்லா நாலைந்து நாளதனில் நன்ருய்த்தீரும்,
உய்யவேசர்க்கரைசீரகமும்வெண்ணை யுருட்டியேபணவிடைசெ
ந்தூரங்கூட்டே. (௧௭)

கூட்டியேதின்றுவிடு விருபதுநாள்மட்டும் கூ.சாமல்பிரமி
யந்தூர் மாங்கிஷம்போம், வாட்டியதோளொலும் புருக்கிநீரடை
ப்பு மறிபடுமேதிரோகத்தில் மயக்கமில்லை, தாட்டிகமாய்ச் செந்

தூரம்வைத்துக்கொண்டு தருகாமலிம்முறையைச்சார்ந்துபாரு, மூட்டுவாய்செந்தூரம் பணவிடையப்பா முனிவோர்கள்சொன்னபடிமொழிந்திட்டேனே. (௰௮)

### தாம்பரசெந்தூரம்.

மொழிந்திட்டே னின்னமொரு செந்தூரங்கேளு முக்கியமாய்ச்செம்புவொரு பலமேவாங்கி, அழுந்தவேயீசலிற காகத்தட்டி யப்பனேசுத்திபண்ணி நறுக்கிக்கொண்டு, தழும்பாமல்புளியிலைபோல்தகடுதன்னிற் சாற்றுகின்றகெந்தகமுங்கழஞ்சு கூட்டி, வளம்பெறவேநொச்சியிலைச்சாறுவிட்டு மாண்டிடவேயரைத்துத்தகட்டிற்பூசே. (௰௯)

பூசிடுவாய்த்தகடெல்லாம் புனிதமாகப் புதுச்சட்டிதனிபரப்பியடுப்பிலேற்றி, பேசாமல்மேல்மூடி சட்டிகொண்டு பெலமாகவேமூமண்சீலைசெய்து, கூசாமலறுபது நாழிகைய மட்டுங் குணங்காமற்றீயெரித்துவப்பாலாற்றி, நேசமுட ணொச்சிச்சாற்விட்டரைத்து லேசாகஅடைபோலேரவியில்வையே. (௨௰)

ரவியிலேவைத்தெடுத்த மருந்தையப்பால் நன்றாகவோட்டில்வைத்துவோடுமூடி, கவியவேமண்சீலைசெய்துநன்றாய்க் களங்காமற்குக்குடத்திற்கனலைமூட்டி, தவியாமலிந்தமுறைநொச்சிச்சாற்றில் தளம்பெறவேயரைத்தரைத்துக் குக்குடத்திற்போட,அவியவேகுக்குடந்தானிருபதுக்கு ளப்பனே செந்தூர முருக்கம்பூவே. (௨௧)

பூவானசெந்தூரம் பணவிடையேகூட்டிப் புசழர்னசருப்புட்டிதன்னிற்கொள்ள, தாவியதோர்குன்மம்பதினெட்டும்போகும் தருகாமலிருபதுநாள்சாரக்கொள்ள, ஆவலுடன்திரிகடுகுசித்திரமூல மப்பனேசூரணித்துப் பூரஞ்சூதம், கூவாமற் பணவிடைதா னளாயுங் கூட்டிக் கொள்ளுவாய் சூரண செந்தூரங்கொள்ளே. (௨௨)

### குன்மத்துக்குகவிசை பெருவயிற்றுக்கு.

செந்தூரம்பணவிடைதா னளாயுங்கூட்டி சேர்த்துவொன்றாய்மண்டலந்தான் தின்றாயானால், வந்திட்ட கவிசைபிலிகையுங் குன்மம் வாடாதபெருவயிறு பக்கசூலை, மூத்தியதோர் நீராமையோனிச்சூலை முட்டோடேபோராமை மூலம்போகும், இந்தமு

ன்றசெய்தாக்காலெல்லாம்போகும் இப்படியே செய்துநீகண்டு கொள்ளே. (உ௩)

நீரிழிவுக்குக்காந்தசெந்தூரம்ரசதங்கம்.

கண்டுநீகொள்வதற்குவின்னங்கேளு காரீயம்பலமெட்டுகாந்தமெட்டு, பண்டுள்ளகெந்தகந்தான்பலமுநாலு பாரிலுள்ளயிரதமுமோர்பலமுங்கூட்டி, தண்டாமல்குகைக்குள்ளே பொடித்துவைத்து தருகாமற்செம்பருத்தஞ்சாறுழாக்கு,சுண்டாமல்வெற்றிலையில் சாறுழாக்கு சுகமாகவிட்டேமூசிலைசெய்யே. (உ௪)

சிலைபாமண்சிலைசெய்துநன்றாய்த் திகைக்கவே யொருமுழங்கால்மட்டுக்கொட்டு, காலமேமுதலாகமூன்றுசாமங் கனலாகப்புடம்போட்டுவெப்பாலாற்றி, சாலவேமருதம்பட்டைச்சாற்றாலாட்டிச் சாந்துபோலாட்டிநீ வழித்துக்கொண்டு, பாலகனே யாவரையி னல்லித் தண்டில் பதறாமற் பதித்து வர்த்து வறுத்திடாயே. (உ௫)

வறுத்திட்ட அல்லிதனைச்சூரணித்து மக்களேமருந்தையெல்லாமொன்றாய்ச்சேர்த்து, ஒறுத்திட்டுப் போகாமற் சட்டியிட்டு ஒருகொம்புஆவாரையாற்கிண்டிக்கிண்டி,கருத்திட்டுப்போகாமல் நாலுசாமங் கனல்மூட்டி யெரித்திடுவாய் செந்தூரமாகும், பெருத்திட்டநீரிழிவுவெல்லாந்தீரும் பேசாமற்பணவிடைதான் றேனிலுள்ளே. (உ௬)

(வெடிசூலைபுடைகரப்பான்பறங்கி குட்டமிதற்குச் சிந்தாமணி)

உன்னவேரசபற்பஞ்சொல்லக்கேளு வுப்புடனேசெங்கலதூளதாக்கி, கன்னவேசட்டியிட்டுவமுக்கிநன்றாய்க் கற்குழிபோல்மத்தியிலேகவிந்துகொண்டு,பண்ணுவாய்கண்டங்கத்திரிதன்னைப் பருக்கவேகுகைபிடித்துவதன்மேல்வைத்து, எண்ணுமற்சுத்திபலயிரதமிட்டு இடைவெளியில்லாததொருசட்டிமூடே. (உ௭)

மூடிவாய்சிலைமண்ணேழுஞ்செய்து முக்கியமா யடுப்பேற்றிநாலுசாமம், போடுவா யனலெரிக்கப் பற்பமாகப் பூத்திருக்குமேற்சட்டிதன்னிலுள்ளே, தேடுநீபற்பத்தை யெடுத்துவப்பால் சிமிழ்தனிலேயடைத்துநீ வைத்துக்கொண்டு, வாடுகின்றவெடிசூலைபுடைகரப்பான்மகத்தானபறங்கிகுட்டமாண்டுபோமே (உ௮)

மாண்டுபோம் பணவிடைதான் வெல்லத்திற்கொள்ள மக்க ளேமேகமென்றதெல்லாம்போகும், ஆண்டுநீபற்பத்தைக்கொண் டபோது அலகுகட்டுக் கருவேலஞ் சாற்றால்மாட்டு, மேண்டும் போதுனக்குவந்துகிட்டாதப்பா மேன்மையுள்ளபற்பத்தைவே ண்டிச்சொன்னேன், தாண்டிடுமே நோயெல்லா மைந்துநாளில் தருகாமல்பத்தியந்தான் வைத்துக்கொள்ளே. (உக)

காந்தசெந்தூரம்பாண்டுசோகைநீரிழிவுநீராமைக்கும்.

வையடாகாந்தமொரு மூவுறதானப்பா வரியானகற்றாழஞ் சோறுதன்னில், பையவேகாந்தமோரு பலமேவைத்து பதருமு ல்வேகவைத்துக்கழுவிப்போட்டு, நையவேபொடியாக்கிக்கையா ன்சாற்றில் நாளேழுதானரைத்துச்சட்டியிட்டு, உய்யவேகுக்குட த்திற்சீலைமண்தா னுத்தமனேயரைத்தரைத்துப்புடந்தானேமீழ.

புடமாகக்குக்குடத்திற்போட்டெடுத்துப் பொல்லாத வீக் கமொடுபாண்டுசோகை, அடர்ந்திட்டநீரிழிவுநீராமைக்கும் அப் பனேபணவிடைதான்றேனிற்கொள்ள, தொடர்ந்திட்டநோயெ ல்லாமோடிப்போகுஞ் சோலியில்லையிருபதுநாள்சுறுக்கைப்பா ரு, மடங்குமடாசெந்தூரங்கண்டபோதே வயித்தியரோ வாலைத னைவணங்கிக்காரோ. (௱க)

சனகசிந்தாமணிமாத்திரை.

கார்நிறமேனிகொண்ட கண்ணன்மால்மருகன்தும்பி
சீர்பெறுபாதம்போற்றிதீர்ந்திடும்வியாதிகேளு
கூருடனிருநூற்றன்பர் வியாதியுங்குடிபோமென்று
பாரிநீர்சனகன்சிந்தாமணியெனும்பகருவோமே (௱௨)

வேறு.

பகருவோம்பச்சைநாபிபாஷாணகாந்தகந்தாரம்
நிகரிருவிஷம்வெண்காரம் நெறிவிஷமக்கிருகாரம்
புகருகுங்குலியந்தான்றி பொற்றிரிகடுகுநெல்லி
தகரிலாமருந்தைச்சுற்றித் தனித்தனிப்பலமூம்வாங்கே, (௱௩)

வாங்கியமருந்துக்கெல்லாம் வாளமுஞ்சமனுய்ச்சேர்த்து
பாங்குடன்சுத்திசெய்து பருப்பினில்முளையைப்போக்கி

தீங்கிலாமருந்தையெல்லாஞ் சேரவேயொன்றாய்க்கூட்டி
ஆங்குள்ளலகையான்சாறு வரைத்திடுபத்துநாளே. (௫௪)

பத்துநாளரைக்குஞ்சாறு படியொன்றுநாளொன்றாக
நித்தலுமரைத்துநன்றாய் நீசிறுபயறதாக்கி
சுத்தமாய்நிழலுலர்த்தித் துலங்குநெற்பானைவைத்து
கத்தனைநினைந்துநீயுங் கிராணிக்குமோரிற்செய்யே. (௫௫)

செய்யவேயிருநேரந்தான் செலுத்தொருவுண்டைநீயும்
தையலாபீக்கிராணிக்கெல்லாந் தயிருடன்செய்யமுன்போல்
உய்யவேவயிறுவிட்டா லோமமும்பழச்சாறீய
நையவேவாய்வுகுன்ம நாட்டிடுமோவினீரே. (௫௬)

உப்பிசகாமாலை கிராணிவயிறுகழிந்தால்

வாய்வுகுன்மத்துக்கு.

ஆவலாமுப்பிசங்க ளடித்திடுமேனிச்சாறு
போவதுபழக்காமாலை புளியிலையிறக்கிச்சாறு
மேவியவண்டவாதம் விட்டிடுமோவின்பாலில்
பாவதுபலவியாதிபறக்குமேதேனிற்கொள்ள (௫௭)

கொள்ளவேவாதமெல்லாங் குங்குமச்சாற்றிற்றீரும்
மெள்ளவேபமரமெல்லாம் விளங்குசீரகத்திற்போகும்
உள்ளநெஞ்செறிவுகண்டா லுகந்தசர்க்கரையிற்கொள்ளு
தள்ளியசத்திக்கெல்லாந் தாக்கிடப்பழச்சாறீயே. (௫௮)

சாற்றுகாலிசுப்புக்கெல்லாந் தன்றுஞ்செற்தொட்டிச்சாறு
ஆற்றிடுமம்மான்பச்சை யரிசிச்சார்நரையைமாற்று
மேற்றிடுகுன்றுமுத்து விலைச்சாறுசன்னிக்கெல்லா
மாற்றுசர்க்கரையுமாகும் வற்றிடுந்தினைச்சோறுண்ணே (௫௯)

உண்டிடுபிரமியந்தானு கந்தசெம்பருத்திச்சாறு
பண்டுள்ளதுளசியாகும் பழமுடன்சாறுமாகும்
நண்டிடுதக்காளிச்சார் நல்லெண்ணெய்தலைக்குத்தேய்த்து
கண்டுநீமுழுகும்போது கழன்றிடும்ரோகந்தானே (௬௰)

S.136



கழன்றதோர்வாதத்திற்குகணிதூதுஆவினெய்யில்
வளம்பெறப்பாலுஞ்சோறும்வைத்திடும்பத்தியத்தில்
உழன்றிடுவாதமெல்லாமோடிடுநொச்சிலைகயான்
தழன்றிடுமாவினீரிற்றள்ளுருப்புபுளியுந்தள்ளே. (சக)

தள்ளிடுகிறுப்புவாதமிளகுடன்வாதடக்கி
உள்ளமுமுடம்புநொந்தால்பருத்திலைமிளகுகூடு
வள்ளலேவெப்பிருமல்மாறுந்தோடைதுளசிலைகயான்
அள்ளவேயிடித்துப்புட்டாவிடுத்தரும்பிணிகள்போமே. (சஉ)

வேறு.

நோயாமதனைத்துளசிச்சாற்றுறுக்குஞ்சர்க்கரைநெய்கூட்டி
தோயாதூஷிணவாய்வுக்குசுகருக்கியாழம்பாலுஞ்சோறும்
பேயாமுசலின்கண்டவலிபிசகாதோடும்நிலவேம்பின்
பாயும்பண்ணிலத்திதனைப்பரியநீரில்நசியமிடே. (சரு)

இடுநீமூலவியாதிக்குவேற்குஞ்சாதிக்காய்பொடியில்
கொடுநீமூலவாசனத்தில்கொள்ளவெள்ளாட்டெருப்புகையில்
விடுநீயாவினெய்தூவிவெதும்பப்புகையையதிற்காட்ட [யே
படுமேமூலவியாதியெல்லாம் பறக்கும்புகையைப்பறிந்துசெய்

செய்யும்நோய்கடானறிந்துசெலுத்தநான்மூன்றைந்தேழில்
உய்யுமாத்திரையோரொன்றுவுசிதமாகவிருநேரம்
நையும்வியாதிபோவதற்குநன்றாய்வைப்பாய்பத்தியந்தான்
தையவிதுவேமருந்தெரன்றுசாந்தமாகப்பரிந்துசெய்யே.(சடு)

பெரும்பாடுஇரத்தபித்தம்எலும்புருக்கிமேகத்துக்குநாவல்நெய்

வேறு.

பரிந்துநீசெய்வதற்குவின்னங்கேளு பண்பாக குன்மமொருகிருதஞ்சொல்வேன், வருந்தியேயலாத்துலாம்நாவற்பட்டைவளமாகவுலர்த்தியிடித்தூளதாக்கி, சொரிந்திடுவாயத்தூணிநீர்முடாவுக்குள்ளே தூள்போட்டுக்காச்சியிறவெட்டொன்றாக, மருந்துதான்புளியாரைச்சாறுநாழி வடிகொண்ட தயிர்தண்ணீர் நாழிகூட்டே. (சகு)

கூட்டுவா யாவினெய் படிதானென்று கூவிளம்பூபச்சைய
ரைப் பலமுஞ் சேர்த்து, நாட்டியேயதிமதுரமேலங்கோஷ்டம்
நன்றானவி லவங்கம்வெள்ளிலோத்திரம்,நீட்டியதோர் தாமரையி
ன்வளையங்கூட்டி நினைவாகமுந்திரிகை வெட்பாலோடு, தாட்டிக
மாயிலவம்பிசின்பேரீச்சோடுசந்தனமுஞ்சிறு நாகமாத்திப்பூவே

பூவானமாதளையின்பிஞ்சுங்கூட்டி போற்றுவாய்நிலப்பனை
யின்விழர்வரிசி, தாவிலாவறட்சுண்டிவகைக்குவரைப்பலமுந்தனி
த்தனியேகியாழமிட்டு வரைத்துப்போட்டு, பாவகமாயடுப்பேற்
றித்தீயைமூட்டிப் பதங்கண்டுவடித்திடுவாய் நெய்தானப்பா, ஆ
வலுடன கரண்டிநிறையிருநேரந்தானப்பனேயருந்திடினோயக
ன்றும்போமே. (௪௮)

அகன்றுவிடுமிரத்தபித்தமதிசாரங்களடுத்தபெரும்பாடுவெ
ள்ளைநீர்க்கடுப்பு,நகன்றிடுமேயெலும்புருக்கிமேகந்தீரும்நாட்டி
லுள்ளநீர்ப்பெருககுவுழலைவீக்கம்,தகன்றிடுமேமதமூர்ச்சைபிர
மிவாதம்தழலானநீர்க்கடுப்புதாகமூர்ச்சை அகன்றிடுமேநோயெ
ல்லாம்பறந்துபோகும் மக்களே யிம்முறையை வகையாத்தி
ன்னே. (௪௯)

கிராணிஅஸ்திசுரப்பீளை வயிற்றுநோய்க்குக் கோடாசூரி குளிகை

வேறு.

தின்னவேகுளிகைதானுந்திறமுடனசொல்லக்கேளு
இன்னவேகெந்திசூதமிருவீசநாபிசுக்கு
வன்மையாயக்கராகாரமனோசிலைமிளகுநெல்லி
உண்மையாவெள்ளையுள்ளியுடனிருவீசங்கூட்டே. (௫௰)

கூட்டிடுகடுக்காய்தான்றிக்கொட்டையைப்போக்கிநன்றாய்
வாட்டிட மருந்துசுத்திவகைபலமரையுமொன்றாய்
நீட்டியவாளம்பத்துநிரைசெம்புப்பொடியும்பத்து
ஊட்டியரசமுஞ்செம்புமொக்கவிட்டரைத்திடாயே (௫௧)

அரைத்தபின்கெந்திகூட்டியரூந்தவேமெழுகுபோல
உரைத்திடுமருந்தையெல்லாமொக்கவேயொன்றாய்க்கூட்டி
நிரைத்திடுகையான்சாறுநெருகவிட்டரை நாளேழு
முறைப்படியனுபானத்தில்மாத்திரை கடுகுமுத்தே (௫௨)

றுத்திபேகிராணிசுக்குசாதிக்காயாவின்மோரு
அத்தியினிளைப்பிருந்தால்வெண்ணெயுமுருங்கைச்சாறு
நித்தனுய்வயிற்றும்நாவும்பொருமலும்மகவுப்பில்
பத்தியாய்தடவிச்சுட்டுபச்சைநீர்தன்னிற்கொள்ளே. (௫௩)

கொள்ளவேபித்தமாறுஞ் சர்க்கரைகொள்வீர்சீனி
அள்ளியபஞ்ச குன்மமரிதையின்சாறதாகும்
வள்ளியின்சிறுகிழங்குவளர்நொச்சித்தாதுவிர்த்தி
உள்ளுறுவுஷ்ணரோக மோடிடுங்கழுநீர்கொள்ளே. (௫௪)

ஓடிடுங்குன்ம மெல்லாமொழிந்திடும்பிரமிச்சாற்றில்
வாடுநீரடைப்புக் கம்மாற்வெற்றிலை வளமதாகக்
கூடுதலில்லாப் பெண்ணுங் கொழுனனைப்பற்றிவாழ்க
நீடுயர்கருப்புக்கட்டிப்பிலாவிரைவெல்லம்நீரே (௫௫)

குன்மம்வெள்ளோக்காளம் எலிகடிக்கு,

நேரேவெள்ளையோக்காளம்நீள்சந்தன மரைக்கடிக்கு
பாரேசீரம்வெள்ளாட்டுப்பாலுங்கூட்டுநீரடைப்பு
கூறுப்வேதிபிக்காகக் கூட்டேவிளக்குச்சித்தென்னை
தீராய்விசம்பழச்சாற்றில்தேனுமிஞ்சிச்சாற்றில்வையே (௫௬)

வைநீர்வெள்ளைச்சந்தனத்தில்வளர்சாலெரிவுசீரகத்தில்
உய்யுமெலிகடிகொத்துமல்லியுடல்மேல்நாற்றமுத்திராட்சம்
தையல்குணமாஞ்சாம்பிராணித்தயிலங்கொடுத்துமேற்பூசில்
நையுநெஞ்சுக்கனைப்புக்குநாட்டுநன்றாய்வெற்றிலையில் (௫௭)

இலைதான்குன்மம்பிரமியிலையெந்தச்சுரமுங்கொத்துமல்லி
துலையுஞ்சாறுசெறிமாந்தந் துலங்குப்பழச்சாற்மாதளையும்
மலையாஞ்சேத்துமபித்தமுடன்வையசீனிசர்க்கரையில்
பலநோயல்லாஞ்சிரகத்திற்பறக்குந்தாகநொச்சிலையே. (௫௮)

நொச்சிசீதவாதபித்தம்நோகவடிக்குங்கொத்தமல்லி
கொச்சியோமங்கொத்துமல்லி கொள்ளேசுக்குவிஷசுரம்போம்
பட்சம்வைத்தவிடாச்சுரமும்பறக்குமோமக்கிபாழமதில்
அச்சமில்லாச்சந்நியிஞ்சியடங்காவியாதிக்கிதுவொன்றே. (௫௯)

ஒன்றேபோதுமிதுவெல்லாமோடித்திரியும்வயித்தியரே
நன்றேகோடாக்குளிகையிதுநயந்துபாரும்வையகத்தில்

சென்றேநோய்கடீர்வதற்குத்திறமாய்க்கிருதநெய்சொல்வேன்
அன்றேயரனுருளைத்தபடியனலையவிக்கும்படிகேளே. (௬௰)

மேகத்திற்குவல்லாரைநெய்.

அவிக்குமாவினெய்படிதானதற்குச்சமனுய்வல்லாரைச்சாற்
புவிக்குள்மதுரமிளகேலம்புகழுஞ்சீரகம்வால்மிளகு
தவிக்குமரத்தைப்பலவிதமாய்த்தளராதனைப்பாயாவின்பால்
கவிக்ககலக்கிச்சார்நெய்யில்கனலில்மூட்டிநெய்வடியே. (௬௧)

வடித்துச்சட்டிதனிலேதான்வளமாஞ்சாதிக்காய்பத்திரி
நடித்துதேக்குப்பரங்கியுடன்நவிலுநன்னூர்மதுரமுடன்
பொடித்துக்கிராம்புவலைப்பலமாம்பொடியைத்தூவிநெய்வடி
த்து,துடிக்குஞ்சீனியிரண்டுபத்துத்தூளார்கூடப்பலம்போட்ட

வேறு.

போட்டுநீநெய்வடித்துக்கடுகுதள்ளிப் புசழாகலேகிப்பாய் நெய்யின்சீனி, தாட்டிகமாய்ச் சாதிக்காய்ப் பொடியைக்கூட்டி தளும்பாமற் கைம்முறையெல்லாங்கூட்டி, மூட்டுவாய்மண்டல ந்தான்கரண்டிவீத புசியாமலிரு நேரமுக்கியமாக, ஒட்டுவாய் ம்மகமென்ற தெல்லாம் போகும் ஓகோகோ வெள்ளை யெல்லா மொழிந்துபோமே: (௬௫)

சூதகவாய்வுக்குதும்மட்டிகாய்லேகியம்.

ஒழிந்துவிடயின்னமொருலேகியந்தா னுதிரத்திலேய் தீர வுறுதியாக, அழுந்தா துரும்மட்டிக்காய்ச்செம்பருத்தி யானமுவ ள்ளைநொச்சியிஞ்சிவெள்ளைப்பூண்டு, தெளிந்துநீலயந்துவகைச் சாறும்வாங்கித் தெளிவாகவைந்துபடிச்சாறுமொன்றாய், கொழு ந்துவிடத்தீயெரித்துவடுப்பிலேற்றிக குறுகவேகாய்ந்தபின்பு ம ருந்துகேளே. (௬௬)

மருந்துரசஞ்சாதிலிங்கங்காந்தஞ்சுக்கு மாசில்லாயிந்துடனே வாளங்காயம், வருந்தவேமிளகுமஞ்சள்வெந்தயமுங்கூட்டி வள மாகச்சடாமாஞ்சிலூமத்தோடும், பொருந்தவேவகைமூன்றுவரா கல் வாங்கிப்புசழாகவிளவறுப்பாய்வறுத்துக்கொண்டு, திருந்தவே

பொடிப்பண்ணிக்கூடப்போட்டுத் திறமாகலேகியத்தைச் செய்துபாரே. (௬௫)

செய்திட்டமருந்துதன்னையுண்ணக்கேளு செலுத்துவாய்த் தூதுளங்காயளவுகொண்டால், நையுமடா குன்மமெட்டுஞ் சுவுசிவாய்வு நாடாதுபெருவயிறுமகோதரங்கள், உய்யுமடாநீராம்பலுதிரவாய்வு வோடிவிடுந்திசைவாய்வுசோகைபாண்டு, பையவ்வளா மாலைவிக்கந்திரப் பாரமுள்ளவயிற்றும்நாய்பறந்துபோமே ()

கண்டாத்திரிலேகியம்

பறந்துபோம்கண்டாத்திரிலேகியந்தான் பண்பாசவிஞ்சிபலம்பத்துவாங்கி, சுரங்காமற்றூற்றுப்போகச்சிவிகைகொண்டு சுத்தாவினெய்வார்த்துப்பொடியதாக்கி, சிறந்திட்டயிலவங்க மோமங்கூட்டித் திரிகடுகுவதிமதுராஞ்சிற்றரத்தை, பொறந்தபேரிலவங்க நறுக்குமூலம் பொற்கடுக்காய்ரோகணியும்புனிதமாக்கே (௬௭)

புனிதமாய் வகையொன்று வராகன்மூன்று பொடியாச்சி யொன்றாகப்புலைக்கேளு, இனிதானசக்கரைதான்பலமுமொன்று இயல்பானநெய்தேனுமுரியுங்கூட்டி, கனியவேபாகுபோற்கிண்டிக்காய்ச்சிக் கலந்திடுவாய்பொடிதூவிக்கிண்டிக்கிண்டி, தனித்தணிமியபாக்களவு தின்றாயானால் சகலபித்தவாயும்போம் பசியுண்டாமே. (௬௮)

உளமாந்தைக்குமருந்துசூரணம்.

உண்டானசயமிருமலிளைப்புவிளை யுளமாந்தைபோவதற்குறுதிகேளு, பண்டானதிரிகடுகுசிற்றரத்தைப் பாங்கானவெண்காரம்பரங்கிச்சக்கை, தண்டாதவால்மிளகுநறுக்குமூலந்தடையறவேவகைக்குவரைப்பலமுங்கூட்டி, மூண்டாமற்றுளிசைதானிரட்டிகூட்டிமுசியாமலிருநேரமுழுங்கிடாயே. (௬௯)

முழுங்கவேசூரணித்துவைத்துக்கொண்டு முசியாமற்றேனிஞ்சிபாலிற்கொள்ளு, அழுந்தானோவிவையெல்லாங் குளிர்ச்சியாகுமப்பனேசயகாசமெல்லாம்போகும், பழந்தேங்காய்புளிபகையுமிறைச்சிவிட்டு பத்தியநீகாத்துண்டாற் பலனுமுண்டு, கலங்காமற்றைலம்வைத்துமுழுகிவந்தால் காந்தியுண்டாம்மேனியெல்லாங்கதிக்குமென்னீர். (௭௰)

## தலைமுழுகத்தயிலம்.

வெண்ணீர்தான்விழுகாமல்முழுகநன்று வீறுனபுளிதயிர்பா
ல்புகையும்விட்டு, தண்ணீர்போல்நோய்களெல்லாம்விட்டேபோ
கும் சாற்றுகின்றேன்மந்தாரகாசத்தயிலம், பன்னீர் போல்தெளி
வதற்குக்கியாழக்கர்க்கம் பாடுகிறேன்புலத்தியனே பகரக்கேளு,
நன்னியதோர்குறுந்தோட்டிப்பொன்னாங்காணி நல்லவட்டத்து
த்திவேர்சீந்திற்றண்டே. (௭௧)

சீந்தியொருமுடக்கொத்தான் சிறுசெங்கழுநீர் சிறந்ததிலப்
பனைக்கிழங்குநீர்வள்ளிக்கிழங்கு; பூந்தஅல்லித்தாமரைவேர்லாமி
ச்சம்வேர் புகலாலம்விழுதுமாவரசம்பட்டையோடு, சேர்ந்தம
லைதாங்கிவேர்நீர்ப்பூலாம்வேர் திருகிடுவாய்வகைமூன்று பலந்தான்
மூன்று, சேர்ந்திடித்துச்சலங்குறுணிதானும்விட்டு செலுத்து நீ
முடாவிலிட்டுத்தீயைமூட்டே. (௭௨)

தீமூட்டியெட்டொன்றாய்க்காய்ச்சிவாங்கிச் சீலைவடிகொண்
டபின்புசெப்பக்கேளு, நெயமுடன்மருந்தையெல்லாங் கர்க்சஞ்
சேர்க்கநிகழ்த்துகிறேன்மேலமிலவங்கமதுரம்,மாயமரமஞ்சளுட
ன்சாத்திரம்பதி வாய்விளங்கங்கச்சோலநாகந்கோஷ்டம், நாயமு
ள்ளிசதகுப்பைவெந்தயஞ்சாதிக்காய்நல்லசிறுதேக்கரத்தைச்செ
வியங்கூட்டே. (௭௩)

செவியமொடுசெண்பகப்பூத்தேவதாரந் திசைத்திடவேவளை
யொன்றுகழஞ்சுமூன்று, ருவியமுள்ளிநெல்லிசெந்தகங்கஸ்தூரி
மஞ்சள்கூரறியபுண்ணாக்குவேர்சாதிபத்திரி.நலியமூறு கோதும்
பைகிராம்புநாற்கழஞ்சு நல்லசந்தனமுடனேகொத்துமல்லி, ப
வியவேசமன்கூட்டி மருந்தையெல்லாம் பண்பாகவரைத்து நீ இ
யாழத்தோடே. (௭௪)

ஊட்டியபின்னடுப்பேற்றியெண்ணெய்ப்படிவிட்டு ஒறுக்கா
மற்றீமூட்டிவற்றக்காச்சி, நீட்டிடதோர்மெழுகுபதமானவாறே
நீயிறக்கிவடித்திடுவாய்கலசத்துள்ளே, தாட்டிகமாய்க்குங்குமகஸ்
தூரிபழுகு சட்டமுடன்ரோசினையுஞ் சமன்கழஞ்சு, நாட்டியே
நறுக்கிடுவாய்தயிலந்தன்னில் நலமாகநெற்புடநீவைத்து மூழ்கே

முழுகடாசியபக்காயவாட்புவெண்ணீர் மோசமில்லைபுளிபுகை
பால்தயிர்மோர்தள்ளு, முழுகடாமுறையோடே மறுநாள்தான்
கூட்ட முறுதியுண்டாங் குமரியுண் ணுந்தயிலத்திற்கு; முழுகடா

தலைக்கண்ணோயுதிரமூர்க்கமுள்ளவேவுட்சூடுகொந்தல்தீரும்,முழுக
டாதேகமொடுகாந்தங்காணு மூத்திரநீர்ச்சிறுப்புமும் பலம்போ
ங்காணே, (௭௬)

### மண்டூரம்.

காணவேகலிக்கமொன்றுசொல்லக்கேளு கறிமிளகுமுக்கழ
ஞ்சுகலவத்திட்டு, ஊணவேதிப்பிலிமுக்கழஞ்சுகூட்டி வரப்பான
சுக்குமோர்கழஞ்சுகூட்டி, பூணவேசமுத்திராப்பழங்கழஞ்சு புக
ழ்சுத்திவாளமொருகழஞ்சுகூட்டி, தோணவேசாரணைவெற்றிலையி
ல்சாற்றால் துவளவேகுளிகையது துலங்குவாயே. (௭௭)

துலங்கவேசூரணந்தானின்னங்கேளு சுக்கோமஞ்சீரகமுமி
ளகுமிந்து, மலங்காமல்வசம்புவிடம் புரியும்வலப்புரியும் மறுகு
சிறுதிப்பிலியுஞ்சாதிக்காயும், பிலங்காணும்பத்திரியும் பாபாடக
ம் பெரியதோர்சதகுப்பைமதுரங்கோரோசினை, கலங்காமல் வி
ழாவரிசிகரப்பான்பட்டை கைம்முறையாய்வகைகயொன்றுபலமு
ஞ்சேரே. (௭௮)

சேர்த்திட்டமருந்தையெல்லாந் தூளதாக்கிச் செந்நாயுருவி
கையான்கழுதைமுள்ளி, போத்திடவேகாட்டுமல்லிகையுங்கூட்டி
ப் புரிசமுடனுலுபிடிவறுத்துச்சாம்பல், கார்த்திடவே யிரண்டு
மொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு காணகத்துச் சிட்டமைந்து பல
முந்தேடி, வார்த்திடுவாய்மேதைபசுஆட்டுநீரு மறுகாமல் மோர்
கூடமதிப்பொன்றாமே. (௭௯)

மதிப்புடனேமோர்நீரும் பானைசேர்த்து மறுகாமல்சிட்ட
மதற்குள்ளேவைத்து, கதிப்பாகப்பத்துநாளூறவிட்டுக் காயவை
த்தெடுத்துநன்றாய்த்தூளதாக்கி, விதிப்படியே மூன்றுமொன்றா
ய்ச்சேர்த்துக்கொண்டு வெருகடிதானிருபதுநாள் தின் பாயானால்
புதுப்பானை யீயதுபோல் நோய்கள்போகும் பொய்யல்லபுளி
புகையுந்தவிர்த்திடுமோ. (௮௰)

### மண்டூரக்குளிகைகாமாலைக்கு.

தவிர்த்திடவேமண்டூரக்குளிகைகேளு தனிநூறு வருஷமதா
இட்டங்கொண்டு, அவித்திடுநீபொடியாக்கியுருக்கக்கொல்ல னன்
றுக்காச்சசுருக்கியாவிநீரில், கவித்திடுவாய்நாலுதரங்காய்ச்சிக்காய்

ச்சிகலங்கர்மல்கோமயத்தினன்றாய்த்தானும் அவித்திடுநீயாவினீர் தனிற்கலாத்து அடிபற்றாக்கரணடியினாற்குறுகக்காய்ச்சே. (௮௧)

காய்ச்சியதோர்மருந்ததனை வெயிலில்வைத்துக் கலங்காமற் கிண்டியேயுலரவைப்பாய், தாட்சியில்லாச்சீலைவடிகொண்டு நன்றாய்த் தருவானசீரகமோரண்டுமித்து, பாய்ச்சிடுவாய் திரிகடுகுதிரிபலாதிபகர்ந்திடுவாயோமம்பெருங்காயங்கூட்டி, மாய்ச்சிடவேவகையொன்றுபலமொன்றாகவறுத்துநீபொடியாக்கிமுன்பொடியுங்கூட்டே. (௮௨)

கூட்டியேகரந்தைச்சாற்சாரணைச்சாற் குறையாமல்துளசிச்சாற்கையான்சாறும், வாட்டமில்லாநாளொன்றுசாறொன்றாக வகைவகையாய்த்தானரைத்துவுலரவைத்து, தாட்டிகமாய் நாலுநாள்சாறுநாலு தனித்தனியேயரைத்தரைத்து வுலரவைத்து, மூட்டுவாய்தேன்வார்த்து அரைத்துச்சேர்த்து முசியாமற் சுண்டைக்காயளவுகொள்ளே (௮௩)

கொள்ளுவாயிருபதுநாளிருநேரந்தான்கூசாமற் சோகைகாமாலைபாண்டு, தள்ளுபடாநோயெல்லாநுறுக்கிப்போடுந் தருகாமலிருநேரஞ்சார்ந்துபாரு, வள்ளலேபுளிபுகையுமுப்புந்தள்ளுமாகில்லாமேனியெல்லாம்வச்சிரமாகும், முள்ளபடி சொல்லிவிட்டேன் குளிகைதன்னையுத்தமமாமென்றுசொல்லியுகந்துபாரே(

மண்டூரக்கடுகுவிக்ககாமாலைக்கு.

உகந்துநீபார்ப்பதற்குவின்னங்கேளு உறுதியாங்கிருதவகை சாந்தஞ்சிட்டம், லோகமிகுந்துபகுத்திடவேவகையொன்று பலமைந்தாகப் பதறாமல்மாவாக்கிவைத்துக்கொண்டு, தகர்ந்திடவே திரிகடுகைகடுக்காய்ப்பூடு சமைத்திடுவாயோமம்நேர்வாளஞ்சுத்தி, அகந்தனிலேசீரகந்தானிரண்டுங்கூட்டி யப்பனேவகையாகப்பலமும்வாங்கே: (௮௫)

பலம்வாங்கிமூன்றையுமொன்றாய்ச்சேர்த்து பதறாமற்கையான்சாற்றன்னிலாட்டி, மலையாமற்பிச்சம்பழமிரண்டு பத்துவாய்கீறிப்பிளந்துநன்றாய்வைத்துக்கொண்டு, துலையவேமருந்தையதற்குள்ளேவைத்து வட்டிடவேநல்லெண்ணெய்கூடவிட்டு, அலையாமற்சட்டியிட்டுவடுப்பிலேற்றி யவித்துநீயெண்ணெயுடன்கடுகுதின்னே: (௮௬)

தின்னவேயிருபதுநாள் பத்தியந்தான் றினந்தூதுக்காயிலை யும்பூவுங்கூட்டி, சொன்னதொரு முருங்கையிலைக்காயுமாகுந் துலங்கவேமுளைக்கீரைத்தண்டுமாகும், வண்டியிலேயுப்பதனைவறுத் துக்கூட்டி மகோதரங்காமாலை பித்தப்பாண்டுதீரும், மன்னவே வியாதியெல்லாமற்றுப்போகு மையமில்லையிந்தமுறை யறிந்து பாரே, (௮௭)

சஞ்சீவிக்குளிகை.

வேறு.

பார்க்கும்வகைக்குவின்னமொருபகருங்குளிகைவகைகேளு
ஊர்க்குமுள்ளவியாதிகளுக்குறுதியாகமருந்தொன்று
தீர்க்கும்வியாதிக்கனுபானஞ்செலுத்தவேறவேறாகு
மார்கமுங்குளிகைசஞ்சிவியாமலையாதிருந்தவதனேட் (௮௮)

நாவிதாரங்கெந்திருவிநல்லயிரதம்வெண்காரம்
மேவுங்கழஞ்சிவகைமூன்றுவிளங்குந்திப்பிலிமிளகுசுக்கு
காவில்கடுக்காய்த்தான்றியுடன்கணத்தவகைக்குநாற்கழஞ்சு
தாழ்வில்லாமற்சுத்தியுடன்சமனாய்வாளஞ்சரியிடையே (௮௯)

இடைதான்சேர்த்துநொச்சிச்சாறேகியொன்றாய்த் தானரைத்து
அட்வாய்முருக்கின்சாறொருநாளப்பால்குப்பைமேனியொன்று
தொடுநீலகையான்சாறொருநாள்தொடையிலைச்சாறொருநாளே
இடைதான்விடாமலைந்துநாளிளகவரைத்தேமிளகளவே (௯௰)

அளவாயரைத்துநிழலுலர்த்தியாகுங்கபாலசூலைக்கு
புளகமாகவாவின்பால்போட்டுக்கரைத்துவுள்ளருந்த
தளமாமேலுந்தான்பூசித்தவிர்க்கவுப்புப்புளிபுகையும்
நளமாமண்டைக்கரப்பனுக்குநாட்டுமேனிச்சாற்றிலிடே. (௯௧)

இடவேமேலுந்தான்பூசியெல்லாக்கரப்பன்செருப்படிச்சாற்
தொடுமேகபாலகுட்டமெல்லாந் துலங்கும்வேலிப்பருத்திச்சாற்
அடவாங்காலுவிப்புருதிக்காகுமுத்தாமணியிலைச்சாற்
படுமேநோவுவொருதலைக்குப்பாங்காய்நார்த்தப்பழச்சாறே ( )

பழகும்படலமணலிச்சாற்பறக்குங்காசங்காக்கணஞ்சாற்
அளவாம்நீலகாசத்துக்குமாகும்வெள்ளைக்காக்கணப்பூ

குலையும்பித்தகாசத்துக்குக்கொடுநீர்கூட்டித்தக்காளி [வையே
தலையாங்கண்ணீர்ப் பூவுக்குத்தாக்கும் வேப்பெண்ணெய்தன்னில்

வையேகண்ணில்விதிக்கெல்லாமாதர்முலைப்பால்தன்னிலிடு
செய்யுமக்காஞ்செஞ்சந்தனஞ்செலுத்தும்போகபசுவினெய்
பையுஞ்சுக்கிற்படுவனுக்குப்பகரும்புள்ளடிச்சாற்றிலிட
ஐயமுடையகண்ணமாமாகும்வேப்பிலைச்சாற்றிலிடே (௧௪)

இடுநீயிரணசுக்கிரனுக்கேகுமமத்தஞ்சாற்றிலிட்டு
தொடுநீரத்தப்படுவனுக்குத்துலங்கும்வேப்பம்பட்டைச்சாற்
கடுகிகண்ணிற்பூவெட்டுகாய்ச்சிமுருக்கிலைச்சாற்றிலிட்டு
முடுகுங்கண்ணுமுழிப்பதற்குமூத்திரந்தன்றிலிடப்போமே: ()

போமேசேர்த்துமக்கரப்பனுக்குப்புராளுப்பிரண்டைச்சாற்றிலி
ட, ஆமேபித்தகரப்பனுக்குவாகுங்கஞ்சாதன்னிலிடு
காமக்கிரந்திபுள்ளதெல்லாங்காணுதோடைச்சாற்றிலிட
தாமேவாய்வுக்குத்தலரும்தனியாம்வெற்றிலைதனிற்பகரே. (௧௬)

பகரும் வெந்தயம்வாய்வுக்குப்பறக்குஞ்சேட்டுமங் கொள்ளுப்
பொடி, தகரில்லாமல்வயிற்கழிந்தால்தாக்குமத்திப்பட்டைச்சா
றகமேகிராணிக்கெருவைமவெண்ணெயாகுஞ் சீதக்கிராணிரத்தந்
துகையாம் வாய்வுக்கிராணிக்குத் துலங்குப்பா வட்டைச்சுரதம்
வையே. (௧௭)

சுரதமெட்டிக்கிராணிக்குத்துலங்குமெருவைமத்தயிராகும்
விரதவிரோசனமிளகிலிட விளங்குங்குன்மமெருமைநீர்
பாதவலிக்கும்வலிகுன்மம்பகருமுருங்கைச்சாற்றிலிட
இரதகுன்மவாய்வுக்குமேகுமுமியின்கருக்கில்வையே (௧௮)

கருக்குஞ்சத்திகுன்மத்திற்குக்கியாழம்வில்வச்சாற்றிலிட
உருகும்வயிற்றுவலிவந்தாலோடுமாவிலிங்கச்சாற்
பருக்குமேலிங்கக்கவிசைக்குப்பகருந்தகரையிலைச்சாறும்
பெருக்குப்பித்தவாய்வுக்குப்பேசுநீலிச்சாறுமே (௧௯)

நீகலிரலி துகழிச்சிக்குநெகிழ்கிழ்நெல்லிச்சாறுகும்
ரல்வாதமும்வெடக்கொத்தான் கழறுந்தானுவாதந்துடரியிலை

சூலிவிரணவாதமெல்லாந்துலங்குநொச்சியிலைச்சாறு
ம்மேலிலந்தவாதம்போம்விளங்கும்வம்பினெண்ணெயிடே (௱)

## சந்துவாதம்.

எண்ணைசந்துவாதமெல்லாமேவுஞ்சாரணையிலைச்சாறு
பெண்ணேபல்லடிவாதமெல்லாம்பெருகுஞ்சுக்குநீரிலிடக்
கண்ணேதுடிப்புவாதமெல்லாங்கழறும்பழச்சாற்றன்னிலிட
அண்ணேயூதுவாதமெல்லாமகலவடிக்குமற்றிடுமே (௱௧)

## நடுக்குவாதம்-ஆசனப்பிளவை-தண்டிற்பிளவை.

ஆதநடுக்குவாதமெல்லாமடிக்குங்களச்சிப்பருப்புச்சாற்
பாதங்குறுதியின்வாதமெல்லாம்பறக்குமூவரிமண்ணிலிட
நீதமுடனேயாசனத்தில்நெருக்கும்பிளவைப்பசுவின்பால்
சூதந்தண்டிற்பிளவைக்குந்துலங்குபொன்னுங்காணிச்சாறே (௱௨

சாறேயுச்சிப்பிளவைக்குத்தாக்கும்பசுவினெய்யுடனே
வாறேபித்தசுரமூலைப்பால்வாங்குசன்னிமூசுறுமுட்டை
சேரோவாதசுரத்திற்குச்செலுத்துநொச்சிச்சாற்றிலிட
பாரோபித்தசன்னிகண்டால்பறக்குறுணுயிலைச்சாறே (௱௩)

## அலட்டுசன்னி-பாம்புகடிக்கு.

இலையேயலட்டுசன்னிக்குவேகுந்துவளையிலைச்சாறு
துலையாதிருக்கும்நடைசன்னிதுலங்குசாரணையிலைச்சாறு
மலைக்கும்பாம்புகடித்தாக்கால்வாரோபாகையிலைச்சாறு
அலையுமஞ்சனவெற்றிலையாமாகுநசியஞ்சிறுவழுதல் (௱௪)

வழுதிலைப்பனைசையூமத்துவழங்கும்விரியன்சித்தகத்தி
தொழுகும்பூரான்பாகையிலைதுடிக்குந்தேளுவிலுப்பையிலை
நழுவுமூஞ்சூறுபெருங்காயநாய்கள்கடிக்குதும்பையிலை
புழுகும்பயின்னரிகடித்தால்புகட்டுமுடக்கொத்தானிலையே ()

## முதலைகடிக்கு.

முடக்குமுதலைகடித்தாக்கால்மீறும்பன்றிநெய்யதனில்
நடக்குமனிதர்தான்கடித்தால்நாட்டும்பருத்தியிலைச்சாற்றில்

தொடுக்குஞ்சூனியம்பேய்க்கரும்புதலங்கும்பூணைப்பாலையிலை
யடக்கமானபெருச்சாளியாகும்பேயின்பாகிலையே (௱௬)

பல்லசைவுக்கு.

பெயும்பூச்சிக்காதில்வந்தால்பெருக்குமெருக்கிலைச்சாற்றில்
ஓயுநாசிகாபுடமுமுற்றவாவின்கோமயத்தில்
வாயில்வளருமுள்ளுக்குமறிக்குமாட்டினெய்யிலிட
ஆயுப்பல்லுமசைவாளுளாகும்வலம்பட்டைச்சாற் (௱எ)

பட்டையானவொட்டிப்புண்பறிக்குமாவாங்கோதும்பை
அட்டவாதசூலைக்குமாகும்வெண்வெங்காயச்சாறு
முட்டுபக்கச்சூலைக்குமோதுங்கோடகச்சாலைச்சாற்
றட்டுசந்துவிப்புருதிதாக்குமாட்டினீர்தன்னில் (௱அ)

யோனிக்கட்டுக்கு.

ஆட்டுங்கெர்ப்பவிப்புருதிக்காகும்பழஞ்சோற்தன்னிலிட
மூட்டும்பற்றுக்கரப்பனுக்குமூளும்பழச்சாற்தன்னிலிட
ஈட்டுமருந்துவிடுகுணநகசும்பவுங்கோவையிலைப்பசும்பால்
மேதட்டும்யோனிக்கட்டுக்குத்திரண்டபிரண்டைச்சாற்றிலிட்டே ()

சாற்றேயோனின்கட்டுக்குத்தாக்குமுருங்கைப்பூச்சாற்றில்
ஏற்றுமகோதரமாம்பொடியாமேகுப்பித்தப்பாண்டுவுக்கு
போற்றுஞ்சூலைக்கட்டுக்குப்பொருந்துமிசுவுவாய்வுக்கும்
மாற்றுஞ்சங்கிலைசோகைக்குவளருஞ்சீரகந்தன்னிலவையே (௱௰)

வையேசோகைகாமாலைமாற்றுமேலமரிசியிட
உய்யும்வறட்காமாலையெல்லாமோடுங்கடுக்காய்ச்சாற்றிலிட
செய்யுநாவுதாணறிந்துசெலுத்துமாத்திரையனுபானம்
ஐயமின்றிக்கொடுத்தாக்காலமுந்துநோய்களகன்றிடுமே (௱௰௧)

தாபசுரக்குளிகை.

வேறு.

அகன்றிடவேதாபசுரக்குளிகைகேளு வதிமதுரஞ் சந்தனஞ்
கிராம்புநன்னாரி,புகன்றிடுகோரோசினையுஞ்சுக்குமேலம் புரிசமு

டன்முந்திரிகைபேரீச்சோடும், தகர்ந்திடும்லாமிச்சுடனே வெட்
டிவேருந் தளம்பாமல்ரோகணியுந்தேவதாரம், நெகிழ்ந்திடும்வெங்
காளபச்சைதண்ணிமிட்டான் நோரானவிலுப்பைப்பூபலமுமொ
ன்றே. (௱௰௨)

ஒன்றானவகையெல்லாம்பலமொன்றாக வுறுதியா யிளநீரில்
விட்டுஆட்டி, நன்றாகத்தேற்றுங்காயளவுவுண்டை நல்லவிளநீரிலு
ளாத்துக்கொள்ளும்போது, சென்றதொருதாபசுரஞ் சன்னிவா
தந் தெறிக்குமடாகெர்ப்பசுரமெல்லாந்தீரும், வெலறதொருசு
ரங்களெல்லாந்தீருஞ்சொன்னோம் வீதமுடன் வேறொன்றாவிய
நங்கேளே. (௱௰௩)

## கோரோசினைக்குளிகை.

கேளுங்கோரோசினையின் குளிகையப்பா கெடியான மிள
கோமம்லவங்கப்பூவும், தாழ்வில்லாச்சாதிக்காய் பத்திரியுங்கூட்டி
த் தாக்கியதோர்மூலமுடன்திப்பிலியுங்கோஷ்டம், மாளுகருஞ்
சீரகங்கோரோசினையுநாவலதின் றளிரு மாந்துளிரும்வேம்பின் க
ருவேம்பிர்க்கு, மீளுராசக்கற்பூரம்வகைக்கழஞ்சு மீருமற்றங்கரோ
க்கனாக்கழஞ்சு (௱௰௪)

அனாக்கழஞ்சுதன்னுடனேமருந்தையெல்லா மாட்டவேவ
கைகேளுசெண்பகப்பூ, குறையாமல்மிளகுகா வட்டம்புல்லு கு
ணமுடனேவகையொன்றுபலமொன்றாக, நிலாயாகக் கியாழம
தைவிட்டுஆட்டிநினைவுடனேயிருசாமமநேராகஆட்டி,பனையாம
நிழலுலர்த்திப்பதனம்பண்ணிப் பண்புடனேயனுபானமறிந்து
செய்யே, (௱௰௫)

அறிந்துநீசெய்திடுவாய்வாதபித்த மையமுடனேயறிந்துவ
தற்குச்சாந்தி,முறிந்திடாசசீரகஞ்கொத்துமல்லி மிளசோயங்கொ
டிவேலியரத்தைசுக்கு, தெரிந்துகொண்டுவனுயானைங் கியாழத்தி
ற்செய்யத் திக்கிலுள்ளநோயதுதான்தெறிக்கும்பாரு, பொருந்
தவேநாண்மூன்றுஐந்துஏழு போகுமடா பத்தியமாத்திரை நா
ளொன்றே. (௱௰௬)

## கிராணிக்குக்கியாழப்-சூரணம்.

ஒன்றானகிராணிவகையெழுவகைக்குமுறுதியாமனுபானமு
டன்மருந்துகேளு, வென்றான தென்னம்பூ முத்தக்காசு விளங்க

வேவாழைசிறுமொட்டுப்பூவும், பன்றுடையகாட்டாத்திப் பூவும் பட்டைப் பதருமற்கு றுக்கத்திப்பட்டைகூட்டி, சென்று பங்கம் பாழ்வேர்கிளுவைப்பட்டை சேரவே சமனெடையாய்த் தூள தாக்கே. (௱௰௭)

தாக்கிட்ட தூளதனிற்சிறுகெடுத்துத் தனிநாழிநீரிலிட்டுவெட்டொன்றாக்கி, மார்க்கமுடன்மறுசட்டிகாயவைத்து வளமாகவதிலிட்டுமுறித்துக்கொண்டு, ஏர்க்கவேவெள்ளாயுள்ளி தனைத்துளைத்து இதமாகவாரகன்கால்காயம்வைத்து, சேர்க்கவே வேப்பம்பூவரைத்துக்கட்டிச்சிவக்கவேயுமிப்புடநீசெலுத்துவாங்கே (௱௰௮)

செலுத்திருந்தபெருங்காயந்தனையெடுத்து தேய்த்துரைப் பாய்க்கியாழத்திற்கிராணியுண்டை, பலித்திடவேரண்டுமொன்றுயுரைத்துக்கொண்டு பண்பாகமேதைதயிர் வடித்துச்சேர்த்து, கலித்திடவேவசம்புசுட்டுப்பொடித்துக்கொண்டுகனம்பெறவேமேற்றூவிக்குடிப்பீர் நன்றாய், துலித்திடவே மூன்றுநா ளருந்தும்போது சுகமாகப்புளிபுகைகலயத்தூரத்தள்ளே (௱௰௯)

## கிராணியுண்டை.

தூறுகின்றகிராணிதனக்குண்டைகேளு சுத்திசெய்தசஞ்சாவுங்கூடவகநீரும், சேறுகின்றகருவேம்பசழுஞ்சு வகையையந்தும்சேர்த்திடுவாய்குருசாணிவிடையமூன்று, மீறுகின்ற சாதிக்காய் வராகன்ரண்டு விதமானவபினென்றுவிரைந்துகூட்டி, கூறுபடவாழைப்பூச்சாற்றரைத்துக்குன்றமுத்தாமுன்மருந்தோடுரைத்துக்கொள்ளே. (௱௨௰)

## இரத்தபித்தத்துக்குக்கியாழம்.

உரைப்பான வுட்காச்சு விரத்தபித்த முழலையுடன்பயித்தியத்தால்வந்தநோவு, சிறப்பாகவிருக்மூஷிண காந்திதன்னைத் திறமாகவேவார்பிடியு முற்றக்காசு, மறைப்பான மிளகுவொரு கழஞ்சுயோடு மறக்காமற்சீரகமுமுடிந்துபோடு, விரைப்பாகக் காச்சியுண்ணுசீரகமுஞ்சேர்த்து விதமானரத்தபித்தக்காச்சல்தள்ளே ()

## சதாவேரிக்கிருதம்நீர்ச்சுருக்குலேபனம்.

தள்ளாமற் சதாவேரி நெய்யைச்சொல்வேன் றருகாமலத ன்கிழங்குச்சாறுவாங்கி, வெள்ளரிக்காய் நெல்லிக்காய் பூசனிக்கா

ய் விளங்கவேயிளநீர் பால்கருப்பஞ்சாறு, கொள்ளவே வகைக்கி
ருநாழிச்சாறு குறையாமல்நாழுழி நெய்யைவிட்டு, மெள்ளவே
திரிகடுகுதிரிபலையுங்கூட்டி மீறுமற்கொத்துமல்லியேலங்கூட்டே

ஏலமுடனிலவங்கமதுரங்கோஷ்டமின்பமுடனிரண்டுபலவீ
தம்வாங்கி, கோலமுடன்வங்காளப்பச்சைநாமங்குறையாமற் சீர
கமோரண்டுங்கூட, சாலவே செங்கழுநீர் கோஷ்ட முந்திரிகைத்
தருகாமற்கொட்டியுடகிழங்குகூட்டி, ஆலயமாம்பேரீச்சுகற்கண்
டுசேர்க்கனா யப்பனேயிந்துப்புவோமங்கூட்டே. (௱௨௩)

## தண்டுறுதிரத்தபித்தம்போகமருந்து

கூட்டுவாய் கோரையுட வரிசிமேதை குறையாமல்மகாமே
தையெல்லாங்கூட்டி, நாட்டியதோர் வகைக்கிரண்டு பலமும்வா
ங்கி நன்றாகவேபனாத்து வதனிற்போட்டு, மூட்டுவா யடுப்பேற்
றியனலைமூட்டி முறுககாமல்மெழுகுபதங்காய்ச்சிவாங்கு, ஊட்
டுவாய் நெய்கரண்டி யிருநேரந்தா னொருத்திட்ட தண்டுதனக்கு
யிருண்டாமே. (௱௨௪)

உயிருண்டாம் பூரிக்குந் தாதுவிர்த்தி ஓகோகோரத்தபித்த
நீர்க்கடுப்பு, செயலாகமூத்திரக் கிறிச்சிபாணிதெளியுமடாவெலு
ம்புருக்கிச் சதையடைப்பு, தயிரியமாஞ் சீரமெல்லாங்காந்தியு
ண்டாஞ் சகலவெட்டைபிறமேகக்காந்தல்தீரும், பயரிட்டுப்பல
ன்கண்டவாற தொக்குஞ் பண்பாகப் புளிபுகையைப் பார்த்தி
டாயே. (௱௨௫)

பார்த்திடவேரத்தபித்தம்போகக்கேளு பதறாமற்செங்கழு
நீர்கிழங்குகொண்டு, மாற்றியதோர்சதாவேரித் தாமரையின் வளை
ய மறக்காமலமுர்தவள்ளிக்கிழங்குசேர்த்து, தோற்றிடவேகுன்றி
யிலைச்சாறுபடியிரண்டு தோன்றவே யாவின்பால் படியுமிரண்டு,
நேர்த்தியதா யாயினெய்படியிரண்டு நேகவனாகிழங்குகளைநெ
ய்யிற்சேரே. (௱௨௬)

நெய்யதனிற் சமன்கொண்டு மருந்தையெல்லா நேசமுட
ன்லேகியமா யிறக்குமுன்னே, பையவே கருப்புக்கட்டி பொடி
த்தொழுழி பதறாமல்மதுரமனாய் பலமுந்தூவி, தொய்யவே யேக
மொன்றாய்த் துஞ்சிக்கிண்டிச் சுகமாக யிறக்கிவைத்துச் சுருக்கை

கமேகேளு, ஐயமறக்கடுகுடனே நெய்யுங்கொண்டா லதிசாரரத்தபி
த்தமகன்றும்போமே (௱௨௭)

உண்டைபித்தத்துக்கு.

போமடாயிருவேலி சந்தனம்நன்னாரி புகழ்முத்தமதி மது
ரந்திப் பிலியுங்கூட்டி, ஆமடா முந்திரிப்பரீச்சுங் கூட்டி யப்ப
னேயிலுப்பைப்பூப்பயகமொன்றும், தாழ்வில்லா மருந்தொன்று
பலமொன்றாகத் தப்பாமலிளநீர்வார்த்தரைத்துப்பின்பு, ஓமடா
கருப்பஞ்சார் முலைப்பாலுமாகு முறுதியா யரைத்த துண்டை
குன்றிமுத்தே. (௱௨௮)

நெஞ்சிகட்டுக்குட்பித்தத்துக்குநெய்.

குன்றிமுத்துப் போலுருட்டி நிழலுலர்த்தி கொடுத்திடுவா
யிளநீர் முலைப்பாலிலொன்றை, சென்றுதான் கொடுத்திடவே பி
த்தமெல்லாந் தீருமடாவின்னமொருசேதிகேளு, பன்றுளசெ
ண்பகப்பூமிளகுதிப்பிலியும் பாவகமாய்வறுத்திநீபொடிதான்செ
ய்து, தின்றிடுவாயாவின்பால்கலக்கிக்கொள்ளு தெறிக்குமடாநெ
ஞ்சிகட்டுப்பித்தம்போமே. (௱௨௯)

வெறிபயித்தியத்துக்கு.

போச்சுதடா பயித்தியத்துக் கின்னங்கேளு புடலமுசுக்கை
கிறுகீரைபொன்னாங்காணி, வாச்சுதே நறபாலை நெல்லிக்காயும் வ
கைவகையாய்ச்சாறுரியுப் வடிநீகொண்டு, காச்சவேயதிமலாது
லங்கப்பட்டை கனியானமுந்திரிகை யிலுப்பைப்பூவும், வாய்ச்
சுதடாசீரகமும் சந்தனமுமேலம் வளர்சாத்திர பேதியுடன்மரு
ந்தையெல்லாம். (௱௩௰)

மருந்தையெல்லாஞ்சமன் கொண்டுவாவின்பாலில் வளமா
கத்தானரைத்துவாவினெய்தான், திருந்தவேயிரண்டுபடிசாறுக்கு
ள்ளே செலுத்ததுவா யரைத்துமருந்ததனுக்குள்ளே, பொருந்
தவேயடுப்பேற்றி நெய்வடித்து பொசித்திடுவா யிருநேரமைந்
துநாளும், வருந்திடவேவேண்டாமே பித்தந்தீரு மக்களேயுப்பு
புளிமந்திடமோ. (௱௩௧)

மறக்காம லின்னமொருமருந்துகேளு வயித்தியரோ தூதுவ
ளைக்கீழ்காய்நெல்லி, சிறுகுறிஞ்சானிரண்டுடனேசமூலங்கொண்

டு சேரவேயிடித்துநன்றாய்ச் சாறுவாங்கிப், பெருக்கவே பஞ்ச சாறுசமனாய்விட்டு பின்னுமுன்னு முச்சியுடன்குடோரியாடி, உருக்கவேமருந்துவிட்டுத்தேய்த்துப்பின்னு முடம்பெல்லாந்துவாலையிடவோடிப்போமே. (௱௯௨)

ஓடியேபோவதற்குமருந்துகேளு உளர்முருங்கைப்பிஞ்சுமேயிரண்டுபத்து, தேடியதோர் நெல்லிக்காய்பத்துங் கூட்டிச் சீரகமும் வராகன்ரண்டு யிளகுவொன்று, நாடியதோர் கடுகனைத்துதேற்றாங்கொட்டை நாலுடனே சீவியெல்லாமிடித்துத் தூளாய், கூடியிரு நாழிநீ ரெட்டொன்றாக்கிக் குடித்திடுவாய் விடியுமுன்னேகுணத்தைக்கேளே. (௱௯௩)

கேளுநீ ரிராவடுப்பிற் குமறக்காய்ச்சி கிருபையுடன் விடியுமுன்னேகுடிக்கும்போது, தாழ்வில்லா யகத்தி யிலைச் சாரணையின்கொழுந்து தளும்பாயற்பிரண்டை பழம்புளிமிளகு, மீளவேமிளகாய்கரிவேப்பிலையுங்கூட்டிவிரட்டிடுவாய் பத்தியம் போம்வெதியும்போகும், நீளவேபோடாயதற்குடோரியுடன்மருந்து நினைவாகத்துவாலையுநீநெகிழ்ந்திடாயே (௱௯௪)

நெகிழ்ந்திடவே யின்னமொரு மருந்துகேளு நினைவில்லா வெறிபித்தநெகிழ்ந்துபோக, பருந்திடுவாய் சுக்குசர்க்கரையுங்கூட்டிப் பழம்புளியும் புளியமரப் பொருக்குச்சாம்பல், சுகம்பிச்சம்பழமேலைத ச்சாணிச்சாறுஞ் சுத்தமுடன் மேதைத்தயிர் சாரணைபின்வேரும், உகந்திடவேசமன் கூட்டியுள்ளுங்கொண்டு வுச்சியிலுந்தேய்த்துடம்பெங்கும்போடே. (௱௯௫)

போடுவாய் நெறியிரண்டு முச்சிமேலும் பிடரியிலுங்குடோரியிட்டுரத்தம்வாங்கி, தேடியதோர் முன்மருந்து விட்டுத்தேய்த்து தெவிட்டவெலுமிச்சமாம்பழம்பத்துக்கீறி, ஓடிடவே ரத்தம்வர உனாக்கத்தேய்த்து ஒருநூறு குடசலத்தை மறுநாளூற்று, வாடாமற்கழுதைப்பால் லொன்றுசுட்டடவேர் மயக்கமறச்சமநாத்துமகிழ்தருந்தே (௱௯௬)

அருந்திடவேயின்னமோ ரெண்ணைகேளு வாள்பொன்னாங்காணிமுசுக்கைசிறு கீரைவேர், பொருந்தவேசமன் கூட்டித்தேங்காய்மட்டுப்பொருமிபடவரைத்துநீதிரட்டிக்கொண்டு, வருந்தாமலாவினெய்நாழிகூட்டி மறக்காமற்பாத்துபடிரண்டுகூட்டி, இ

ருந்தவேமதுரைப்பல மரைத்துமேதான்திறமானபால்நெய்யில் சேர்த்திடாயே. (௱௬௭)

சேர்த்திட்டமருந்துதனைப் பாண்டந்தன்னிற் சலங்குறுணி கூடவிட்டுக்கலக்கிநன்றாய், வேர்த்திட்டுப் போகாமற் கடையமத்தால் வேகமுடன்திரளுமடா வெண்ணெயப்பா, மார்த்திட்டுக்கலசத்திலெடுத்துவைத்து மறக்காமல்நெல்லுக்குளொருநாள்வைத்து, எற்றிடவேமறுநாளுமெடுத்துநன்றாய் யெலுமிச்சங்காயளவுவெடுத்தருந்தே. (௱௬௮)

## உள்ளுக்குக்குத்தடவபித்தத்துக்குத்தயிலம்.

அருந்தவே புண்ணுக்கு மருந்துகேளு வப்பனேயொட்டறையுங் கல்லுச்சுன்னம்: மருகவேயெருக்கம்பால் தனிர்குழைத்துமாசிலாதுண்ணுக்குதனிற்றடவி, குருவைநெல் லடைசுட்டுத்தின்னத்தீருங் கொண்டுநீ பத்தியந்தான் மூன்றுநாளும், விருதாவென்றெண்ணுதேமெய்யாய்த்தீரும் விருப்பமுடனீமருந்து விளம்பிடாயே. (௱௬௯)

விளம்பினேங்கபாலசன்னிமண்டைநோய்தான் வேரோடேபோவதற்குவிரும்பக்கேளு, பழமாதளம்பிச்சம்பழச் சாறுடக்குப் பத்தாசிற்றாமணக்கெண்ணெயுரியுங்கூட்டி, தளும்பாமற்குந்திருக்கமரத்தைதகுப்பை தான்கடுகுவசம்புகருசீரகமுமுள்ளி, புளங்கவேவகைகழஞ்சுபொடியதாக்கிப் பூரிக்கச்சாறுயெண்ணெ புகட்டிவெய்யில். (௱௭௰)

வெய்யலிலேவைத்துநீமறுநாளெடுத்து மீறவேதலைக்கிட்டுவேடுகட்டி, லையயவே யாமணக் கிலையாற்கட்டிப் பாங்குடனேயைந்துநாளடரவார்த்து,தையவேயாறுநாள்நல்லெண்ணெகாய்ச்சி தளும்பாமல்வென்னீருஞ்சார்முழுகு, வையகத்தில் நாசிநீர்காதடைப்பு மாறுபடாவாதண்டைச்சாறுகூட்டே. (௱௭௧)

கூட்டுடனேபல்லசைவுவிருக்கக்கட்டுக் குவட்டுவலிபோவதற்குக்கூறக்கேளு,நாட்டிலுள்ளவினைவெல்லாமகிழ்மருந்து நல்லகருவேலுடனேயிலவம்பட்டை, வாட்டமில்லாக்குறுணிநீர் வார்த்துநன்றாய் வகைப்பட்டைசமன்கொண்டுகுறுகக்காய்ச்சி, ஊட்டியேயிருநோங்கொப்பளிப்புவுறுதியடாயலநோய்வுவொளியும் பாரோ. (௱௭௨)

புண்ணுக்குகட்டுமருந்து:

பாசொன்னவெள்ளைப் பாஷாணம் லிங்கம் பாங்கான செங்க
ழுநீர்கோஷ்டங்கொண்டு,சேசொன்னபூவரசம் பூவிதழிற் சித்திரமூ
லஞ்சமன்சேர்தான்வாங்கி,வாருநீசெம்பரத்தஞ் செவ்வகத்திமறு
காலுஞ்செங்கீரை சிவந்ததாகும்,பீரவேயச்சாறுவிட்டரைத்துவி
தமான விலைக்கள்ளியிலைதான்புட்டே. (௱௪௩)

புட்டாகயிலையவித்துப் பிழிந்துபோட்டு புதுமையுள்ள ம
ருந்ததனையிலையிற்பூசி, கட்டிடுவாய்புன்னைதனிற்கட்டிவைத்து க
ட்டுமறுநாளவித்துவேலைகொண்டு, திட்டமாய்வழித்திடவேபுழு
க்களெல்லாந் திரண்டுவரு மெடுத்தறிநீ திரும்பக்கேளு, மட்டா
கப் பூவரச னிலையவித்து மாசில்லாப் புண்ணதிலே மகிழ்ந்து
கட்டே. (௱௪௪)

சிலையெண்ணைக்குப்புண்ணுக்கு.

மகிழ்ந்துநீபுண்ணறவரிசைகேளு மரமஞ்சள்கஸ்தூரி காசு
க்கட்டி, புகழ்ந்துகருங் குங்குலியந்திப்பிலியுங்கூட்டி புனிதமாய்
சாதிக்காய்சமன்றானாக்கி,தகிழ்ந்துதென்னங்குரும்பைச்சாற்நா
ழிகூட்டித் தவறாமல்நல்லெண்ணை படிதான்சேர்த்து, இசழ்ந்திட
வேகாய்ச்சிநன்றாய்வடித்துக்கொண்டுயிணைச்சிலைதன்னிலூட்டிப்
புண்ணினிற்போடே. (௱௪௫)

போடவேவகையொன்றுசொல்லக்கேளு புனிதமாங்கடப்
பிரஞ்சிமருந்துநரவல், தேடுநீகருங்காலிபாவளாயுந்தோடு திட
மாகவட்டத்துத்திவேருங்கூட்டி, வாடாமல்வகைக்கைந்து பலமி
டித்து மக்கவேளசலமாறுமரக்கால்விட்டு,கூடவேதூள்போட்டுமு
டாநாலுக்குள் குமுறவேகாய்ச்சியொருபானைசேரே. (௱௪௬)

ஒருபானைகாய்ச்சியதோர் கியாழந்தன்னை யுறுதியாயிருநா
ழிதழம்பாய்க்காய்ச்சி, பருஞ்சட்டி தனிலிறுத்து வைத்துக்கொ
ண்டு பாங்கானகாந்தம்பலமூன்றுஞ்சேரு, சிறந்திட்டவரப்பொ
டியுங் கெந்திகூட்டித் திடமாகவகைக்குப்பலமூன்றுஞ்சேர்த்து,
பொருந்திடவேயாவளாயின் விளாபடிதான்முக்கால் புகழ்பட
வேவகையெல்லாம் பொடியதாக்கே. (௱௪௭)

பிரமியநீரிழிவுக்கு.

தாக்கிடுவாய்கியாழத்திற் பொடியையெல்லாந் தழும்பாம
ற்கிண்டியேயிறக்கிக்கொண்டு, பாக்களவாய்த்தானுருட்டி நிழலு

லர்த்திப் பழமோருவதுதேனிற் பரிந்துகொள்ளே, ஆக்கமுடன் பிரமியநீரிழிவுதீரு மதனாலேவந்ததொருபிளவைதீரும், ஊக்கமுள்ளமேகமெல்லாமோடிப்போகு முத்தமமாமிம்மருந்து வுறுதி காணே. (௱௪௮)

ஒருதலைவலிக்குநசியம்.

காணவொருதலைவலிக்கு மருந்துகேளு காட்டிலுள்ள தும்பையிலைகுப்பைமேனி, தோணவேகசக்கிநீநசியம்பண்ணித் தலங்கவுள்ளிவுப்புமெள்ளுவரைத்துப்பூசு, பூணவேவேப்பிலையைவாய்பேசாமற் பிடுங்கிம்யபிழிந்திடுவாய்காதுக்குள்ளே, ஊணவே செப்புகின்ற நெருஞ்சி தன்னை யுறுதியா யொருகண்ணி லூற்றிடாயே. (௱௪௯)

ஊற்றிடுவாய்வாலைகவினை மூலைப்பால்நசிய மூர்முருங்கை நாயுருவிவினையுங்கூட்டி, நீற்றிடுவாய்நீலியுடசாறுவாங்கி நினைவாகத்தானரைத்துநல்லெண்ணைவிட்டு, சேர்த்திடவேகாய்ச்சிநீநசியம்பண்ணத் தெறிக்குமடாவொருதலைநோயுள்ளதெல்லாம், நீற்றுடனேவெள்ளெருக்கம்பாலுசேர்த்து நீநசியமிடநோவுநெகிழ்ந்துபோமே. (௱௫௰)

வார்திக்குமருந்து.

நெகிழ்ந்துபோம்லவங்கப்பூசாந்தங்கோஷ்டம் நேராகச் சமன்கூட்டிநீரரைத்து, உகந்திடவேயூக்காகக்கலக்கிக்கொண்டு வுத்தமனேபேய்ச்சுரைக்காய்தனிலடைத்து, புகழ்ந்துமருளுகையாமல்மருந்தும்போதுபுதுமையாமெதிரெடுக்குப்புகலக்கேளு, மகிழ்ந்திலுப்பைப்புண்ணாக்கும்வேருங்கூட்டிமறக்காமலாவின்பாலரைத்துக்கொள்ளே. (௱௫௧)

அரைத்துநீகொண்டுவிடுமூன்றுநாளு மாவின்மோர் கல்லுப்புகரைத்துப்பேயின், சுரைகூட்டி லூத்தினத்து மறுநாளப்பா சுகமாகவருந்திடவேசுரடெறடுக்கும், வினையவேவெட்பலகு மருந்தம்பட்டை வியன்றவகிமுருங்கையுடன்விளங்கக்கொண்டு, குறையாமல்நாழிநீராழாக்காக்கி குடித்திடுவாயெலிவிஷங்கள் குடிபோங்காணே. (௱௫௨)

இந்திரியக்கட்டு.

குடிபோனவிந்திரியக்கட்டுவிழக் குமிழமடா நிலப்பனையில்தண்ணியிட்டான், அடியாகநெருஞ்சிவேர் சமனீகொண்டு துல

க்கமுடனாயின்பாலரைத்தருந்த, விடியுமுன்னேபெண்மயச்சமிக
வுண்டாகு மேவினுப்லைபப்புண்ணுக்குக்காசுக்கட்டி, பொடியாக்
கியருந்துநீயிருந்தாயானால்பூரித்துப்பொங்கிவிடும்புதுமைசொ
ன்னேன். (௱௫௩)

## கழல்வாதம்-அண்டவாதம்.

புதுமையாய்க்கழல்வாதமண்டவாதம் போவதற்குமருந்து
நான்புகலக்கேளு, கதுமையாநன்னாரிபேய்மிரட்டிநெரிஞ்சிசதி
க்கின்றவேலியிலைகுப்பைமேனி, மெதுமையுள்ளகொழுந்துவளை
பிடிதானொன்று மேவுசுக்குதிப்பிலியுங்காயமிந்து, அதுமையுள்ள
கடுகுவிருகழஞ்சுவீத மப்பனேவெள்ளுள்ளிப்பூடுமூன்றே. ()

பூடுடனேமருந்தையெல்லாமெரியாலஞ்சாற்றாற் புனிதமா
யரைத்துமேநல்லெண்ணைகுத்தி, தேடுகழற்கொடிப்பருப்புபொ
டித்துத்தூவி திரும்பவேகோழிமுட்டையுடைத்தூற்றி, மூடுநீச
ட்டிதனிலூற்றியப்பா முக்கியமாய்ப்பொரித்துநீ வைத்துக்கொ
ண்டு, வாடிடவேவெலுமிச்சங்காயளவுதின்னமாறுமண்ட வாதங்க
ழல்வாம்போமே. (௱௫௫)

வாதம்போமாவிலிங்கைவசப்புகொடிவேலி மறக்காமல்வெ
ள்ளுள்ளி யாவின்பாலால், நீதமுடன்றானரைத்து மூன்றுநாள்
கொள் நினைவாகவுப்புபுளிபுகையுமாற்று, போதவேயிதுவிரக்கரு
ப்புக்கட்டி புனிதமாயரைத்துருட்டிப் பொருந்தக்கொள்ளு, கு
தானவேலியிலைமுடக்கொத்தானுந் துலங்குகழற் கொடியிலையும்
புங்கிலையுங்கூட்டே. (௱௫௬)

## களவுகெர்ப்பம் விழமருந்து.

புங்கிலைபோ டிவையெல்லாமிடித்துநன்றாய்ப் புனிதமாய்
வறுத்தொத்தப்போகும்வீக்கம், அங்குகழற்கொடிப்பருப்புவெ
ள்ளாட்டுபாலு மப்பனே கொடுக்கவினாவாதம்போகும், மங்கா
தமிளகு காய்ப்பழமரைத்து மருகுசழற் கொடிப்பருப்பு வறுத்
தரைத்து, பங்கமில்லாவுரிய வெந்நீர்தண்ணீர்கொள்ளு பறக்கும
ண்டவாதங்கழல்வாதம்போமே. (௱௫௭)

போகுமடா களவுகெர்ப்பம்விழுகக்கேளு பொய்யல்லகடு
கிந்துகாயங்கூட்டி, வேகமுடன் பழங்காடி மிகவருந்த விழுகும
டாகடுகுநல்லெண்ணெயுங்கொண்டால், தாகமுடன் மிளகுசெம்

பருத்திப்பூவுந் தப்பாமற் காடிபுண்ணைப் பிள்ளையில்லை, சோக முடன் பெரும்பீர்க்கன்விரையரைத்து துலங்குமூன்றுநாளரைத் துக்குடிக்கக்கெர்ப்பம்போமே. (௱௫௮)

கெர்ப்பம்போ மருக்காரை விரைமோரிலூறி கிரிகையுடன னதையரைத்துக்குடிக்கப்போகும், செப்பமுடன் கீழானின்நெல்லி வேரைத்திறமாகநல்லெண்ணைதன்னிற்கொள்ள, ஒப்பறவாய்க்கெ ர்ப்பமெல்லாமொழிந்துபோகுமுறையுடனீமருந்துவுகந்துசெ ய்தால், தப்பாது விம்மருந்து வப்பனே சொன்னேன் சீரத்து க்கொருநாளுந்தாழ்வராதே. (௱௫௯)

நீரடைப்புக்குமருந்துதுவாலையிட

தாழ்வில்லைநீரடைத்தால் மருந்துகேளு தரணியுள்ளவோரி தழ்வேர்காடித்தண்ணீர், கூழாகத் தானரைத்துச் சீரமெல்லாங் குமுறவேதான்றடவநீர்தெறிக்கும், பூளைசிறு பூநீர்வேர்பொன்னு ங்காணி புகழாலந்துளிர்ப்பாலிற் பொசிக்கத்தீரும், நாளான பல கரையைச் சுட்டசாம்பல் நல்லதோர் பாண்டத்திற் றண்ணீர் வையே, (௱௬௰)

சதையடைப்புக்கு.

வைத்துமே பழச்சாறு மேனிச்சாறு மதிப்பாகவதில்விட்டு மறுநாள்வாங்கி, உத்தமமாமிறுத்துக்கு வாலின்பாலி லுடனருந் தக்கல்லுவிழுமுறுதியாக, மெத்தெனவே வெள்ளரிக்காய் சீவித் தோலை விதமாகத்தரிசியதில்மேலேபூசி, சுத்தமுடனதையெடுத் துவருந்துநீரில் துலங்கவிருமூன்றுநாளிருந்தருந்தே. (௱௬௧)

காதுக்குநெய்.

அருந்துவாய்வட்டதுத்தியிலைதான்மூன்று ஆவின்பாலரைத் துநீகுடிக்கத்தீரும், பொருந்துவெள்ளாட்டுநெய்யாவினெய்யும் போதநல்லெண்ணெய் சமன்கஞ்சித்தண்ணீர், வருந்தவேகுடித் தாக்கால்கல்லுவீழு மறுகாலுஞ் சோற்றிலுண்ணத்தீருங்கண்டா ய் திருந்திளநீரேலமுடன்தேற்றுங் கொட்டை திரளரைத்துச்சர் க்கரையும்பாலிற்கொள்ளே. (௱௬௨)

கொள்ளுவாய்கற்றாழஞ் சோறுவாங்கிக் குண்டுசட்டிதன்னி லிட்டு அத்திப்பட்டை, மெள்ளவேயிடித்ததிற்பிசைந்துசேர்த்

து வெய்யில்வைக்கத்தெளிவு வருமிறுத்துக்கொண்டு, தள்ளாமற்
சர்க்கரையுஞ்சமூஞ்சியிந்து தவறாமல் வெள்ளரிக்காய் காடிகூட்டி,
கொள்ளவேரத்தமுடன்கல்லுஞ் சீயுங் கூண்டோடே சதையடை
ப்புகுதிக்கும்பாரோ. (௱௫௫)

குதிக்குமேகாதிலுள்ள தண்டுநொந்தாற் குன்றிமுத்துக்காய
ன்றிசொத்தான்வேரும், மதிப்பாக வெருமைப்பால் தனிலரைத்
துமறக்காமலுறையூற்றிக்கம்படவெண்ணெ, துதிப்பாகநீயெடுத்து
க்காதிற்றண்டு துவாலையிடவள்ளைத் தண்டுதுலங்கும்பாரு, விதிப்
படியேசொல்லிவிட்டோ மொளிக்கவில்லை விறுமாவிற்றனக்கிட்
டால்மீறுங்காணே. (௱௫௬)

## கைவிலக்கமில்லாதப்பெண்களுக்கு.

மீறுமற்றூரமில்லாப் பெண்களுக்கு வேலியிலைப் பசுவின்
பாலில்மிகவருந்து, கூறுன தூதுவளைச் சாறுவாங்கிக் கொடை
கொடையாக்கிக்கிடக்குங்குளத்துப்பாசி, எருமைற்புன்னைக்காயள
வுகூட்டியிதமாகச்சர்க்கரையு மேகமொன்றாய், பேறுபட்மூன்
றுநாளருந்தும்போது புறப்படுமேசெங்குருதிசிவப்பதாமே. ()

## ஆண்கட்டுக்கு.

தாமென்றவாண்கட்டுதடையாய்ப் போனாற் சங்கம்வேர்நீர்
முள்ளிவிரையுங்கூட்டி, போமென்ற சோகிதனைச் சுட்டசாம்பல்
புகழாலப்விழுதுடனே முத்தக்காசு: ஆமென்ற வாவின்பால் தன்
னிலாட்டி அதனுடனே சர்க்கரையுங்கலந்துகொள்ள, எமென்றவி
ந்திரியக்கட்டுவிட்டு இஷ்டானுபோகமிசைந்துபண்ணே. (௱௫௫)

## மலடிக்குகெர்ப்பமுண்டாக

இசைந்ததொருபெண்மல டெங்குமில்லை எறினல்மலடான
செய்திகேளு, அசைந்திருக்கும் பேயினல் பத்தர்றாலு மடிவயி
றுநொந்துவரும்வாய்வுவாலும், பிசைந்து கெர்ப்பப்பூச்சியினற்
கிரகத்தாலும் பிணிநோவுமேகத்தால்உகூரியாலும், துசங்கட்டி
க்கலவியினாற்பூவொதுங்கித் துலங்காமற் கெர்ப்பமில்லைசொல்ல
க்கேளே: (௱௫௭)
கேளுநீகெர்ப்பந்தான்வாழ்வதற்குக்கெடியான நாளுங்கள்ளி
வேரு, ஆளவேயலாத்துப்புன்னைக்காய்போலே ஆவின் வெண்ணை

பாக்களவுகலந்துகொள்ள, நீளநீகுளித்தமுதல் மூன்றுநாளும் நி
லைவாகத்தானருந்தக்கெர்ப்பமுண்டாம், கோளறவேபத்தியந்தா
ன்புளிபுலைகயுமுப்புங் கொள்ளாமலாவின்பால் சோறுமுண்ணே.

## மலட்டுப்பூச்சிக்குமருந்து.

உண்ணுவாய் வேப்பலகு சீந்திற்றண்டு வுடன்முத்தக்காசுட
னேயொக்கத்தட்டி, கண்ணமேவ சாறுரியும் நெய்யுழக்கு கலந்து
நீகொதிப்பித்துக்சாலைமாலை, திண்ணமாய்க்குளித்தமுதல் மூன்று
நாளுந் திடமாகவருந்திடவே கெர்ப்பமுண்டாம், இண்ணுகமரச்
சீந்திவேர் நாளுங்கள்ளி யிதமாக வேரரைத்துநெய்யிற்றூக்கே. ()

தாக்குவாய்பெருங்காயமிர்துவுப்பு தறுகாமற் புளியமரப்
பரணிகூட்டி, ஆக்கமுடன்கற்றாழை வேரின்சாற்று லரைத்துநீயு
ருட்டிடுவாய்புன்னைக்காய்போல, ஏர்க்கவேகுளித்தமுதல்மூன்று
நாளு மிதமாகநீயருந்து கெர்ப்பமுண்டாம், கேழ்க்கவேவாயுவ
றுப்பூச்சிவீழுங் கெடியானதோஷிமுடன் விஷக்கிரகம்போமே.

விஷப்பாலைவெட்பாலைவாலுழுவை கடுக்காய் வேண்டுநெல்
லித்தான்றிக்காய்கொன்றைபட்டை, நிஷப்பான கொடிவேலியிற்
சுக்கு நிறையாகவகைமூன்றுகழஞ்சி வாங்கிக்கூட்டி, அஷப்பா
மற்பிரமிச்சாராவின்பாலு மப்பமென வகைக்கிருநாழிகூட்டி, பிச
காமல்முன்மருந்துச் சாற்றரைத்து பின்னையுமோ ராவினெய்நா
ழிகூட்டே.
(௱௭௧)

நாழிநெய்யுடன்மருந்தெல்லாங்கூட்டி நன்றாகக் கொதிப்பி
த்துமெழுகுபோல, தாழியாங் கலச்சாற்றில் வடித்துக்கொண்டு
தருகாமல்முமுக்குவந்த மூன்றுநாளும், ஊழியாமிருபோதுகர
ண்டியுண்ண வுத்தமமாங் கெர்ப்பமுண்டா மூறுதியாகும், காளி
யெனுஞ்சாமுண்டிபசாசுமேநாய்கள் கடந்தோடும்பத்தியநீகலந்து
கொள்ளே.
(௱௭௨)

கண்டுதான்சொல்லுகிறேனின்னங்கேளு கானகத்திலெருக்
கிலம்பாலரப்புக்கட்டி, தண்டாமல்மெழுகுபோலரைத்துருட்டி
த் தனியேழுஞாயிறுதனக்குவெந்நீர்கொள்ளு, முண்டியேயெடு
த்திடாமல்மோருஞ்சோறு முக்கியமாய்த்தயிராகும்வெருகேளு
பண்டுகைகாலெரிவுக்குநீர் மூள்ளியும் பாலுடனேயருந்திடவே ப
றந்துபோமே.
(௱௭௩)

## கண்டமாலைக்கெண்ணை

பறந்துபோங்கழுத்தில் வருங்கண்டமாலை பாங்கான சிறுகுறிஞ்சான்பலந்தானைந்து, பறந்துபோம் பொடியாக்கி வசம்புவன்னி பாங்கானநல்லெண்ணை தன்னிலிட்டு, பறந்துபோமெரியிட்டுப்பதமாய்க்காய்ச்சிப் பாங்கானபுண்ணிலிட்டுமண்டலநீகொண்டால், பறந்துபோம்டண்ணூறும்பத்தியமில்லாமல் பண்பாகவுள்ளருந்துபலிக்குமின்னே. (௱௭௪)

## அந்திரவாய்வுக்கெண்ணை.

மின்னேகேளந்திரவாய் வேழும்போக வெட்டுபெருங்குமிழ்வேருசளச்சிவேரும், சொன்னதோர்கிலுகிலுப்பைவழுதலைகாக்கணான்முருங்கை துலங்குசாறணைசிவதையருக்கருவும், வண்ணமாய்க்கொடிவேலிவகைப்பலமுமிரண்டு மிடாவிலிட்டுத் தூணிநீர்மருகக்காச்சி, பொன்னே நீயெட்டொன்றாய் வடித்துக்கொண்டு போடுவாய்வெள்ளுள்ளிபலந்தான்பத்தே, (௱௭௫)

பத்துநீர்போட்டிடுவாய் பதக்குநீரிற் பதறாமலெட்டொன்றாய்க்காய்ச்சிக்கொண்டு, வற்றினபின்னிரண்டுமொன்றாய்ச்சேர்த்துநன்றாய் வகையான வாதமடக்கி படிதான்ரண்டு, சுத்தமுடன்கழற்பருப்புப்பலந்தானைந்து சொல்லிரதக்காந்தங்கெந்திகாயமிந்து, வெற்றிபெறுஞ் சவுர்க்காரம் வளையலுப்பு வெருவாலுழுவை சீரகம்வசம்பே. (௱௭௬)

வசம்பாகமாயமைப்பாய் கியாழமிட்டு மறந்துசிற்றாமணக்கெண்ணைபடிதான்ரண்டு, நிசப்படவேயகமொன்றாயலாத்துக்கொண்டு நினைவாகவடுப்பேற்றி வடித்துநீதான், மிசகாமற்பத்தியமாயருந்தும்போது பிணியில்லை வாய்வில்லை வாதமில்லை, துசங்கூட்டியிதையுண்டு துலைப்பாயானால் தூரத்தேயந்திரவாய்வுதுலைந்தும்போமே: (௱௭௭)

## அழுக்கருக்கர்ப்பஞ்சகலவியாதிக்கும்.

துலைவதற்கின்னமோர்மருந்துகேளு சுகமானவழுக்கரு பலந்தானாறு, மலையாமற்சமூலமுடனுலர்த்தித்தூளாய் வடிகொண்டுகலசத்தில்வேடுசட்டி, அலையவே வேண்டாங்கா ணென்றைப்போது மனுபானமறிந்துநீசெய்தாயானால், மலைபோலே வந்ததோர்வியாதியெல்லாமக்களேவிட்டோடுமோதிச்செய்யே (௱௭௮)

மாறியேமெலிந்தவுடல் நெய்யிற் கொள்ளு மயக்கமாய்ப் பெருத்திருந்தால்தேனிற்கொள்ளு, மீறியேவரும்பித்தப் பாண்டெருமைமோரும் விஷமானவெலிக்கடிக்கோமயமுமாகும், பூறியதார்விரியனுக்குவெந்நீர்கொண்டு பூசுவதுமதுவாகுஞ் சிறங்குக்கெல்லாம், நாறியவெள்ளாட்டுநீரிற்கொண்டு நலமாகமேற் பூசநன்றாய்த்தீரும். (௱௭௯)

நன்றானபிள்ளைதானினைத்திருந்தால் நலமான வாவின்பால் கலக்கிக்கொள்ளு, சென்றானகுன்மவலிநார்த்தம்பழமாந் தேவிமார்கைமசக்குப்பசுவின்வெண்ணெ, ஒன்றானமிளகுத்தூள்கூடவிட்டு உடனருந்தக்கைமசக்கோடிப்போகும், வெல்றம்தார்குட்டமெல்லாம்விட்டேபோக வேப்பெண்ணெய்நாடோறும்விதமுங்கிடாயே. (௱௮௰)

விழுங்குவாய்வாதமிட விளக்கெண்ணெய்க்குள் மேலுநீபூசிடுவாய்குழப்பிக்கொண்டு, களங்கமறத்தூரமதுகாலுவிட்டால்காட்டுப்பிலிச்சாறுகாயங்கூட்டு, விளங்குசன்னிகமோமயமு நல்லெண்ணைகூட்டி மிகவருந்திமேற்பூசவிட்டேபோகும், புழங்குகின்றவிப்புருதிவெந்நீர்கொண்டு பூசிடுவாய்விக்கத்திற்புகலக்கேளே.

புகலுவேனீர்விரியனீரிற்பூசு பிள்ளையளனேயக்குவான் பச்சைப்பாலில், அகலவேமேற்பூசக்காமாலைக்கு அப்பமனவேம்பின்பட்டைச்சாற்றிற்கொள்ள, தகவில்லாதிம்முறையளபாகந்தான் தப்பாமற் பத்தியங்கள் தாட்சி போகா, வகைவகையா யனுபானமருந்து கொண்டால் மக்களே வியாதி யெல்லா மாண்டு போமே. (௱௮௨)

பித்தத்திற்குக்குமரித்தயிலம்.

மாண்டுபோம்பித்தமெல்லாங்குமரியாலே மதுரமுடன்சந்தனமுநாகப்பூவும், வேண்டுமடாசெண்பகப்பூ கஸ்தூரிமஞ்சள் விளங்குமிருவேலியுடன்சிவந்திபுன்னை, தாண்டுமடாசெங்கழுநீர்க்கோஷ்டமெல்லாந் தருகாமற்கடுகுரோகணியுங்கூட்டி, மீண்டு நீதிரிபாலையஞ்சனக்கல்வங்க மிரிதானதக்கோலஞ்சாதிக்காயே ()

காயானசரக்குடனகிலுமாஞ்சில் கனமானதாமரைப்பூ முன்பூவுங்கூட்டி, ஏயானமருந்தையெல்லாஞ் சமனதாக்கி யெடுத்

ஐ ரப்பாய் குமரிவேர்நீரினாலே, பாயவே நல்லெண்ணெய் நாழி

விட்டுப் பதறுமலடுப்பேற்றிப் பதமதாக்கி, மாய்மேல மெழுகுப
தம் வடித்துக் கொண்டு வாசனையாய்ப் புழுகுடனே பூரம்
போடே. (௱௮௪)

பூரமுடன்ரோசினையும்போடுபோடு பூரித்த தயிலத்தில்கலச
த்துள்ளே, வாரமாஞ்சனிபுதனுமுழுகிவந்தால் மகத்தான பித்த
மெல்லாமாய்ந்துபோகும், தாரமுடனிருவோரு முழுகவேண்டு
ஞ்சகலமணிமேகமெல்லாந்தவறிப்போகும், வீரமுடன் சரீரமெ
ல்லாம்புஷ்டியாகும் வெகுசுறுக்குத்தயிலமதுவேண்டிப்பாரோ ()

## கெர்ப்பஸ்திரீகளுக்குமருந்து.

வேண்டியேகெர்ப்பமாயிருந்தபேர்க்கு வெடிப்பாகவயிற்
கழிந்தால்மருந்துகேளு, ஆண்டிருந்தமுதல்மாதம்வயிறுபோனா
ல் அப்பனேமுண்டாகப்பூகொத்தமல்லி, மீண்டதோரிருவேலி
ச்சமனுநீரில் மிகவரைத்துப்பாலருந்த மிதமாய்நிற்கும், பூண்டி
ருந்தமறுமாதம்போக்குண்டானால் புகழ்நெய்தற் கிழங்குநாயுரு
விவேரோ. (௱௮௬)

வேருடனேசந்தனமுநீரரைத்து விதமானயாவின்பால்தனி
லருந்து, பாருநீமூன்றானமாத்திரைக்கப்பா பகர்நெருஞ்சியாம்
பற்பூவாழைக்கட்டை, நீராலேதானரைத்துப்பாலிற்கொள்ளு நி
சமாகநாலுமாத்திரைக்கிலாமிச்சோடு, ஆருக்காஞ்சந்தனமுந்தாம
ரையின்வேரு மதில்நீரிற்றானரைத்துப் பாலிற்கொள்ளே (௱௮௭)

பாலானமாதமைந்தில்மருந்துகேளு பகருகச் சோலமுட
ன்விலாமிச்சோடு, மாலையாநெய்தல்வேரம்பற்பூவும்அப்பனேநீ
ராட்டிப்பாலிற்கொள்ளு, கோலமா மாறுதனிற் சீந்தில் நாக்கு
கொழுந்துசீரகம்நெய்தல்முந்திரிகையோடு, காலமே சிறுதிப்பி
லிநீரிலாட்டிக் கலப்பிலாய்ப்பாலிலுண்ணக்கழிச்சல்நிற்கும் (௱௮௮)

## கெர்ப்பத்தில்வயிற்கழிஞ்ச கிராணிக்குவடகம்.

நிற்கவேயெழுதிங்கள்சந்தனமிலாமிச்சு நிசமான தக்கோல
ந்திப்பிலியுநெய்தல், பக்குவமாய் நீரரைத்துப் பாலிற்கொள்ளு
பகரொட்டுத்திங்களிலேவிளாங்காய்ச்சாறு, தக்கநெய்த லரியுடனி
லுப்பைப்பூவுஞ் சர்க்கரையுங்கற்கண்டுந் தானரைத்து, மெய்க்க
வேபாலிலுண்ணவியாதிபோகும் விதமானவொன்பதாந்திங்கள்
தேளே. (௱௮௯)

திங்களாமுந்திரிகையிலுப்பைப்பூவுந் திறமானதாமரைப்பூ பாலிற்கொள்ள, பொங்கமுடன்பத்தாண்டில் வயிறுபோனால் புதுமையுள்ளகுலதெய்வம் போற்றிசெய்து,மங்காமற்காத்திடவே வடித்துக்கொண்டு முக்கியமாயிளநீரும் பசுவின்போல, கங்குலூர்க்கவலனுஞ்சமயத்தெய்வம் காக்கவொன்ளுக் காற்பணமுங் கையிற்போடே. (௱௩௰)

கைப்பலனுமின்னமொருமருந்துகேளு காரிலழயாள்கெர்ப்பமுடன்கிராணிக்கெல்லாம், மெய்ப்பான யிஞ்சிச்சாற்படிதான்ரண்டு வெந்தயமோகுருசாணிகிராம்புகூட்டி, வைப்பானசாதிக்காய்வராகன்ரண்டு வகைவகையாய் வாங்கியே விடையமூன்று, தொப்பறவேயிளவறுப்பாய்ச்சூரணித்துச் சுகமாகவிஞ்சிச்சாறடுப்பிலேற்றே. (௱௩௧)

ஏற்றியதோர்சாறதனையடுப்பிலேற்றி யிதமாகச்சுண்டிவரப்பொடியைத்தூவி, பார்ந்திவாய்கற்கம்போ லப்பதந்தான் கண்டபாங்கானமறுசட்டிதன்னிலப்பா, ஊற்றிடுவாய்கற்கந்தான் வடகம்போலுருட்டிவெய்யில்தனில்காய்ந்தபின்புபதமதாக்கி, நேர்த்தியதாய்க்கலசத்திலெடுத்துவைத்துநிதமாகவோருண்டை தயிரிற்கொள்ளே. (௱௩௨)

தயிரானமேதிபுடதயிரேயாகுந் தப்பாமலொருவுண்டைதயிரகாத்து,உய்தமுடன்தயிர்குழப்பியுள்ளேகொள்ளு உண்பது சோர்தயிராகுமற்றதாகா, கயரானபுளிபுகையு முப்புத்தள்ளி காலமேயோர்வடசங்கவிஞ்சுக்கொள்ளு, இயரான கிராணியெல்லாமெங்கேபோச்சு இதைவிட்டால்மருந்தேதுவெற்றீராமே (௱௩௩)

முசல்நெய்.

வெற்றீராந்தொடையிலைபலந்தானூறுவிதமாகவிடித்துதன்றுப்பதக்குநீரில், நன்மையமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கி நலமானமுசல்தலைக்கால்குடலைப்போக்கி,பண்ணியதாய்க்கண்டதுண்டம்பகுத்துவெட்டிப் பாகமாய்க் குறுணிநீர் தன்னிலிட்டு சென்ணியதாய்க்குறுகவேகாய்ச்சிக்கொண்டு சேர்த்திடுவாய் முன்சாற்றிற்சேரக்கூட்டே. (௱௩௪)

கூட்டுவாய்மதுரம்வெண்கோஷ்டமேலங் கூறியதோர்லவங்கப்பூகடுக்காயோமம், வாட்டியதோர்சீரகம்லவங்கப்பட்டை மக

த்தானகற்கண்டுசாதிக்காயும், தாட்டிகமாய்வெள்ளுள்ளி நாழிகூட்டி தனித்தனியேமருந்தையெல்லாங் கழஞ்சிரண்டு, மூட்டிய யிடித்துநீலவத்துக்கொண்டு முக்கியமாயிளநீருய்பசுவின்பாலே

பாலிளநீர்நாழிநெய்யும்நாழி பகரு சிறுகீரைபொன்னாங் காணிச்சாறு, கோலமுடன்கடைமருந்தெல்லாமொன்றாய்க் கூட வேபோட்டுநீகுமுறக்காய்ச்சி, சாலமெழுகுபதமாய்வடித்து தறுகாமலாழாக்குநெய்குடிப்பாய், எலவேரத்தபித்தமெல்லாந் தீரு மின்னமோர்வயித்தியந்தானியம்பக்கேளே. (௱௩௬)

மூத்திரக்கிரிச்சினத்திற்கு:

கேட்பதற்குமூத்திரக்கிரிச்சிபோகக் கெடியான சிறுபூளை நெருஞ்சிவேரும், பார்ப்பதென்ன சிராசெங்கழுநீர்வேரும் பகருசெப்புநெருஞ்சிவேர்யரிந்துகூட்டி, வார்ப்பதுதா ளுவின்பாலரைத்துக்கொண்டு வளமாகவதிற்குழப்பிமருந்துகொள்ள, தீர்ப்பதுதான்மூத்திரக்கிரிச்சிபோகுந் தேகத்திலுள்ளகாந்தல்தெளிவதாமே. (௱௩௭)

நடுக்குவாதத்துக்கெண்ணை.

தாமென்றுநடுக்கியதோர் வாதந்தீரத் தனிமுருங்கைச்சிவதையுடன்குப்பைமேனி, வாமென்றவெண்ணொச்சி மாவிலிங்கை மறக்காமல்விடத்திலையும்வெள்வேலாவும், போமென்றகருவேலு முப்புறண்டிவேரும் புகழ்வேலிமூக்குறட்டை வாதடக்கி, ஆமென்றகொத்தானுங்கொஞ்சித்தும்பை அப்பனே சாறுவகை நாழி கூட்டே. (௱௩௮)

நாழியுடனதன்வேருஞ்சமனாய்க்கூட்டி நன்றாகச்சாறுவிடுவரைத்துக்கொண்டு, ஊழியாமெண்ணைபடிரண்டுவிட்டு உறுதியாயேகமொன்றாய்க்காய்ச்சிக்கொண்டு, தாழியாஞ்சட்டியினிற் பதம்நீகண்டு தருகாமல்வடித்திடுவாய்தயிலந்தன்னை, நீழியதோர்கரண்டியுண்டுமேலும்பூசிநிலவரமாம்பத்தியம்வைநிவர்த்தியாமே()

விப்புருதிக்கெண்ணை.

நிவர்த்தியாம்விப்புருதிக்கெண்ணைகேளு நெருஞ்சத்திச்சாறணைவேர்கிலுகிலுப்பைவேர், பவுத்தியாம்வசம்புள்ளிதண்ணியிட்டான் பாகமாய்நீலிவேர்சமனதாக, தவிர்த்திடாதரைத்து விரா

கனிரண்டுகோயஞ் சாந்தமாயாவினெய்தன்னிற்காய்ச்சி, குவித்தி டவேயிருநேரமெட்டுநாளுங் கொண்டிடுவாய் காசிடை பத்திய முங்காணே. (௨௱)

## பூசமருந்து.

கார்ப்பதுதான்மேற்பூசுபுங்கங்கொட்டை காராட்டுப்புழுக் கையுடன்கலந்தரைத்து, வார்ப்பதுதானீர்வார்த்தரைத்துப்பூ சு மறக்காமற்கவிழ்தும்பைபுளியுங்கொட்டை, ஏர்ப்பதுவே புற் றுமண்ணு எலைதான்பூலா இதமாகச்சிறுநீராலரைத்துப்பூச, தேர் ப்பதுதான்வாதமெல்லாங்கதிகெட்டோடும் தெறிக்குமடாவீக்க மெல்லாந்தெரியும்பாரே. (௨௱௧)

## இளைப்பிருமலுக்குநெய்.

### வேறு.

தெரிந்தவர்மணக்கெண்ணையுரி சேருங்கோசினைவிராகன்ரண்டு
குருந்வசம்புவொருபலமுங் குறையாதுள்ளியிருபலமும்
கழுந்தும்பூலாகொழுஞ்சியிலை கறுத்தசீரகமரைப்பலமும்
அழுந்தப்பொடித்துவெயில்வைத்து அருந்தவிருமலகன்றிடுமே.

கரிசலாங்கண்ணிச்சாறு காவேளைநொச்சிச்சாறும்
பெரியதோர்வில்வச்சாறும் பேராடைதோடைச்சாறும்
அரியதூதுளையின்சாறு மருக்குருச்சாறுஞ்சுக்கு
எரியவேநெய்யிற்காய்ச்சி யெழிலுடனருந்துவாயே. (௨௱௫)

## கணைக்குஎண்ணை.

### வேறு.

திருமடாகல்மதங்கல்நாருபற்பம்சமூர்த்திப்பிலிமதிவிடையங்கடுகு ரோணி, பேறுபடத்தாளிசையுஞ்சீரகமுமரண்டுபெருவோமம் அ க்கிராஞ்சாதிக்காயும், பாருஅதுபத்திரியுங்கஸ்தூரிமஞ்சள் பஞ்ச திரவியகுங்குமப்பூசணிசிங்கி, வாருங்கஸ்தூரிகோசினையும்பூரம் வ ளமானசலாசத்துநாயுருவிசேரே: (௨௱௬)

நாயுருவிகிரந்தி நாயகமுங்கூட்டி நன்றாகச்சமன்கொண்டு துளசிச்சாறு, ஓபாதகரிசலாங்கண்ணிச்சாறு வுற்றவெள்ளைநொ

ச்சிச்சாற்கஞ்சாங்கோரை, பாயுமேயிஞ்சிச்சாற்கற்றாழஞ்சாறும்
பாயவிட்டு அரைத்துநீகடலைபோல, மாயமாய்வந்ததொருநோய்
கமர மக்களிஞ்சிப்பால்தேனுங்கலந்துவுண்ணே. (௨௱௫)

மாந்தயிசுவுக்கு.

உண்ணவேயாவினெய்யுரிக்கிக்கொண்டுயுத்தமா யிச்சாறும
ருந்துசேர்த்து,கண்ணவேகாய்ச்சிநீதட்டிடையே கொண்டால்க
டல்புக்குநோயெல்லாங்கமறிப்போகும், பண்ணுசிற்றாமணக்கெ
ண்ணெய்முப்சாறுகூட்டிப்பெருந்திடுவாய்கலடமருந்து கூடச்சேர்
த்து, திண்ணமாயெரித்துநீஉள்ளுக்கொண்டால்தீருமேநோயெ
ல்லாந்தெளிந்துபோமே. (௨௱௬)

உட்காச்சல்அஸ்திவெட்டைக்கு.

தெளியவேமாத்திரையுநெய்யுமெண்ணெ செலுத்தியே வெ
வ்வேறுகொள்ளும்போது, ஒழிகிறதோர்வியாதியெல்லாமுறைக்
கக்கேளு உறுதியாமகாமாந்தமெட்டும்போகும்,பழியானவுட்கா
ச்சல்சுரங்களெல்லாம் பட்சிபடதோஷவகை பாலதோஷம், துளி
வானபிரமிகெர்ந்ததாளியிசுவுதலங்கு குடல்வாய்வுகுண்டலியிரை
ப்புதீரும். (௨௱௭)

தீருமே யத்திசுரக் கைகாலெரிவு திகைட்டு வோடிவிடுங்
குளிகைகண்டால், வாருநீ யெண்ணெநெய்யொன்றை விட்டொ
ருநாள் மக்களேநோயெல்லாமாய்ந்துபோகும், கூறிந்திந்தமு
றைமூன்றிலொன்றுகுழந்தைகள்நோய்தீர்ந்துவிடுங்குளிர்ச்சியா
கும், வேறின்னஞ்சூரணந்தான்சொல்லககேளுவெகுநோய்கமர்
ந்திடுமேலாதிகேள். (௨௱௮)

ஏலாதிச்சூரணம்.

வேறு.

ஏலங்கோஷ்டமிலவங்கப்பட்டை யிலங்கும்பத்திரிதிரிகடுகு
கோலமுத்தங்கொத்தமல்லி குலவுஞ்சீரகம்நாகப்பூ
வாலசந்தனங்கர்ப்பூரம் வைக்குங்கிராம்புதாழிசையுஞ்
சாலச்சமனாயிடைகொண்டு சரியாய்ச்சர்க்கரையிடைகூட்டே ()

கூட்டியிடித்துயிளநீரில் குலைநோயெரிவுகாலெரிவு
நாட்டிடமிகுத்தலந்திகுணம் நல்குமிரத்தபித்தமுடன்
ஈட்டின்பெருத்தவிளைப்பிருமலிருகண்சுழற்றல்தலைவலித்தல்
வாட்டம்பெருத்தமேகமெல்லா மாறிப்போகுங்கண்டமே (௨௱௰

## அமுர்தாதிக்குளிகை

## வேறு,

கண்டதொருகுளிகையொன்று சொல்லக்கேளு கசடறவே
யமுர்தாதிகவியாய்ச்சொன்னேன், மண்டலத்திலெல்லோர்க்கும்
வியாதிகட்குமகத்தானகுளிகையிடமார்க்கங்கேளு, பண்டுள்ளவி
யாதியெல்லாம்பற்றறுக்கும் படுபாவி மேகமெல்லாம் பறந்து
போகும், மண்டலத்திலுயிர்போனாலுடனேமீழ்க்கு மப்பனே
யிம்மருந்தையறிந்துசெய்யே, (௨௱௰௧)

## சகலவியாதிக்குசித்தகுளிகை.

அரிதாரந்திரிகடுதிரிபலையு மானகெந்தியிருவிரசம்நாபிமு
த்தம், பொரிகாரஞ்சீரகமுங்கஸ்தூரிமஞ்சள்பொன்கருஞ்சீரகமு
ம்வில்வவேரும், தேரியம்வமரமஞ்ச ளக்கிராகாரஞ்சேர்த்திடுவா
ய்விளங்கஞ்சந்தனமுங்கூட்டி, பெரியதொருமுருங்கைவட்டத்தி
ருப்பிவேரும் பேர்கண்டங்கத்திரியும்வேருஞ்சேரே, (௨௱௰௨)

சேர்த்திடுவாய்வேர்வகையுங்கடைமருந்துந் திறமாகவகைக்
கொருவிராகன்விதம், ஆர்த்திட்டவாளஞ்சுத்திவிராகன்பத்து ஆ
ணதோர்மருந்தெல்லா மொன்றாய்ச் சேர்த்து, கோர்த்திடவேக
டைமருந்துசுத்திபண்ணி குழிககல்லிலரைப்பதற்குக்கூறுகேளு,
வார்த்திடுவாய்மஞ்சச்சாற்பிழிந்துகொண்டு மகிழவரை கையான்
சாற்முருங்கைப்பட்டை.
(௨௱௰௩)

பட்டையின்சா றொரு நாளுங் கையான்சாறொருநாள் ப
தறுமல்நாளொன்றுசாமமொன்று, எட்டுநாளிப்முறையாயரைத்
துமையா யிதமாகமிளகதுபோல்நிழலுலர்த்தி.திட்டமாய்கைபா
ர்த்துமுகத்தைப்பார்த்து திறமானம்நாயறிந்துகுளிகையொன்று
கட்டளையாய்நாளைத்துஎட்டுஎழு கணமானநோய்களுக்குப் பத்
துநாள்செய்யே.
(௨௱௰௪

## சகலவியாதிக்குமருந்து.

### வேறு.

செய்திடுவியாதிக்கெல்லாந் தீர்ப்பதுவனுபானத்தில்
ஐயிதுவியாதிவெவ்வே றருந்துவதொவ்வொருண்டை
தையமேலயிருநேரந்தான் றுக்கிடநோய்கடீரும்
பையவேசங்கிருணி பறக்கும்பாதிரியின்பட்டை. (௨௱௰௫)

பட்டையையரைத்துமோதை யிளந்தயிர்குடிக்கத்தீரும்
திட்டமாம்கழிச்சலுக்குச் செலுத்துமுண்டையமும்மோரில்
நட்டமாம்விக்கல்வெந்நீர் நாட்டுநெல்லிக்காய்ச்சாறு
வெட்டுமாவாரைதன்னில் விளம்பும்நிம்பப்பழச்சாறெண்ணே ()

சாரும்விரையுமுண்டையுடன் தாக்குநசியங்கண்ணிலிடு
மீருமெருமைச்சாணிச்சாற் வேண்டுநொச்சிச்சாற்நெய்யாம்
கூறுமாஞ்சிநிலைச்சாறு கூட்டுவந்தோருண்டைதனை
ஏறும்விஷம்போம்நீரருந்த வெல்லாவிஷமுமிகழ்ந்திடுமே ()

இகழுமிரத்தமண்டலிக்குஇடுநீபாக்குவெற்றிலையும்
நகழுஞ்சன்னியிஞ்சிச்சாற்நாட்டுந்திப்பிலிகூட்டியிடு
புகழும்பச்சைநாபிதின்றால் போகும்பச்சைக்கழுநீரில்
மகிழுஞ்சாதிக்காயாகு மருந்துகண்டமாலைபுண்ணும் (௨௱௰அ)

புண்ணுந்துளசிச்சாறரைத்துப் பூசவாறுமுள்ளருந்த
கண்ணவுதிரவாய்வுக்குக் காடிவசப்புபுளியிலைச்சாற்
திண்ணவாவினீராகுஞ் சேரும்நொய்யாம் வெந்நீராம்
வண்ணமருந்துமுதிரோகம்வாய்வுகையான்சாறுகும் (௨௱௰௯)

சாறுங்குளிருங்காய்ச்சலுக்குத் தாக்குமாலம்பாலாகும்
கூறுநிம்பப்பழச்சாற்றிற் கூட்டியஞ்சனமிடப்போகும்
தீரும்நாலாமுறைக்காச்சல் தெளியுமூமத்தஞ்சாற்றிலுண்ணை
வாருசீதசுரத்துக்குவாங்குஞ்சீரகஞ்சர்க்கரையே. (௨௱௨௰)

களைக்குஞ்சோபசுரத்துக்குக் கையான்றுளசிச்சாறுகும்
நிலைக்குந்திரிபலைக்கியாழமு நேரோவெந்நீரதுவாகும்
மறைக்குந்துளசிநிம்பழத்தின்சாற்றிலுரைத்துக்கண்ணிலிட [கை
இலைக்கும்வேறுகும்ரோகமெல்லா மேவும்வசம்பா வரைமுருங்

முருகுதிரிதோஷசுரவாய்வு முழங்கும்பயித்தியமிவையெல்லம்
ஒருகுநிம்பழச்சாற்றாற் கக்கவுலாத்துக்கண்ணிலிட [தில்
பெருக்குஞ்சுக்கிலதம்பனம்போம் புளியவிரைத்தோல்சூரணத்
உருகுமுயர்கண்வலிப்புக்குவுலாத்துவஞ்சணங்கையான்சாற் ()

வேறு:

சாற்றுகிறேன்வாய்வுசுரம்வயிறுவுப்பல் தவறுமற்பாகலிலைச்சாற்றிற்கொள்ள, போற்றியதோர் முருங்கைப்பட்டை நெய்யரைத்துப் பொருந்தவே யுண்டிடுவா யின்னங்கேளு, கார்த்திட்ட சீரகமுஞ் சர்க்கரையுங்கொள்ளக் கலமான நெல்லிக்காய்ச் சாறுமாகும், வீர்த்துக்கட்டுச்சூலைக்குவமூரிகூட்டி வெண்காரம்பொரித்துண்ணவிட்டுப்போகும். (௨௨௩)

போவதட்டவியாதிக்குவாட்டுப்பாலிற் புகழ்ந்துநீகூட்டியே குடிக்கநன்று, ஆவதோர்காசம்போம் வெண்காரமாம் ஆண்சிறுவழுதலைவிரைச் சூரணமுந்தின்ன, கேவலமாம் சுவாசமுடன் காசமெல்லாங் கெடியானவறுகஞ்சா றெலிச்செவியின்சாறும், பாவகமாய்ச் சீரகமுங்கூட்டிக் கொள்ளு பசியெடுக்கச் சீரகமும் வெல்லமுண்ணே. (௨௨௪)

ஒன்றானமாதுபிரமேகத்திற்கு உடன்றேனுந்திப்பிலியு மாட்டுப்பாலாம், மண்ணானமேசத்துமம்போ மக்கிருகாரம் வாசமுள்ளசாதிக்காய் கூட்டிக்கொள்ள, கண்ணான வெற்றிலையுந்தின்னத் தீருங் கசடானகுட்டமெல்லாந் தேனிற்கொள்ள, எண்ணாமற்சீரகமுமாவிநீரும் இஷ்டமுடன்கொடுக்கவேகுட்டந்தீரும் (௨௨௫)

குட்டம்போஞ்சொறி சிரங்குதினவுதீர்க்கும் குழப்பியே நல்லெண்ணெயிற் பூசத்தீரும், கட்டுகின்ற சூலைக்குச் சலவைசன்னிகையான்சாற் கொடுத்திடவேகமறிப்போகும், தொட்டதோர்சூலையின்மேல் மேகமாறாற் சூரணமாஞ் சர்க்கரையுங்கொட்டைப் பாக்கும், வட்டவேகற்றாழைச் சாறுந்தேனும் வரிசையுள்ள சீரகமுமுருங்கைவித்தே. (௨௨௬)

வித்துடனேயிதையெல்லா மொன்றாய்ச்சேர்த்து விளாவியேபழச்சாற்றில்மிகவருந்த, இத்திற்றாப்பிரமேகஞ்சருவமேகம் ஏகமுடன் மேகமெல்லா மெருமைப் பாலாம் சுத்தமாமிந்திரிய

நட்டமானுற் சுருக்கானநெருஞ்சியின்சாற் சீரகமுங்கொள்ளு, நி
த்தலுமே கண்ணேவுவிசிப்புயாந்தம் நிகழவே தாதுவளை பிரமி
கொள்ளே. (௨௨௭)

கோளான வெகுமூத்திரக்கிரிச்சிரக் கொள்ளுகருந்துளசி
ச்சாறூட்டுப் பாலு, வாளுகரு ஆடதீதஞ் சாறுகூட்டி மகிழுவே
யொன்றாகக்குடிக்கத்திரு, மேளமாயுடம்பெல்லாமெண்ணைபோ
ல விசிறியேகசிந்தரசச் செம்முள்ளிச்சாறும், தாழ்வில்லாவாட்டு
ப்பால் கொம்புசந்தன முந்தான்தேனும் நோயெல்லாந் தவறி
ப்போமே. (௨௨௮)

தவறவேபிறமேகம் வெந்தயத்திற்கொள்ளு சர்க்கரையாம்
பயித்தியம்போம்நீரிற்கொள்ள, பவங்கள்விட்டுக்கல்லு விளக்கொ
ட்டைப்பாக்கு பாகமாய்ச்சூரணித்துச் சாணிச்சாறு, கவங்கவே
பூசனிக்காய் சாறுகூட்டி கடுகவே குளிகையிட்டுக் குடிக்கத்தீரும்,
நவமான மூலமென்றவியாதிதீர நாட்டிலுள்ள பிரண்டைச்சாறி
ஞ்சிச்சாறும். (௨௨௯)

இஞ்சிச்சாற் பூசனிக்காய்ச்சாறுங்கூட்டி யிஷ்டமுடன்கொ
ண்டிடவேமூலம்போகு, மிஞ்சியதோர்பீனிசமுங்கபாலக்கட்டி
விழுகின்றசீயெல்லாம்விட்டேபோகக், கஞ்சாவினிலைச்சாறுசீலை
யூட்டிக் காயவைத்துவதன்மேலே மருந்துகேளு, அஞ்சாமல்மு
ந்திரிகைப் பழத்தின்சாற்று லணத்திடுநீ பாகல்விரை யுளுந்
திருட்டே. (௨௩௰)

உருட்டியதோர்திரிபுகையைமூக்கிலேற்ற வோடிப்போம்
பீனிசமுஞ் சீயுமாறும், பிரட்டியேவயிற்றிலே யெரிவுகண்டால்
பேணியதோர்நெற்பருப்பைச்சூரணித்து, சுருட்டியதோரிஞ்சி
ச்சாற் வெற்றிலையின்சாறு சுகமாகவேகித்துத் திலங்கவுண்ணு, ம
றுபடியேபசியெல்லாமந்தமாகில் மாசற்றபொருமலுக்கு மருந்
துசொல்வோம். (௨௩௧)

சொல்லுங்கோட்டங்கரந்தையுமா யறுகம்வேறு துளிரான
புளியிலைக் கியாழம்பண்ணி, கல்லும்போற் குளிகைதனையொன்ற
ரைத்துக் கலக்கியேகுடித்திடுவாய்ரோகந்தீரும், நில்லாதபலகரப்
பான்பிரமிச்சாற்றால் நிலைக்கவேசரீரசுத்திநினைவாய்க்கேளு, வெ
ல்லவே வருஷிமது மூன்றுமாந்தம் விளங்குபட்ச மூன்றுடனே
நாளுமொன்றும். (௨௩௨)

ஒன்றுனநாளொன்றுகுளிகையொன்று வுடலீச்சத் தண்ணி தனிலுகந்துகொள்ள, நன்றாகத்தப்பனமும்வசியமுண்டாம் நா ட்டிடுவாய்குளிசத்திற்சிரசிலப்பா, பன்றுள்ள தலைதிருப்பிநமக்க மாகுல் பதருமற்பூசணிக்காய்சாற்றிற்கொள்ளு, என்றுசிறுதெச வாய்வுசந்தும்நாவு ஏகமந்திரவாய்வுடன்வாதந்தானே. (௨௱௩)

வேறு.

தானேமுருங்கைவேர்ச்சாற்றில் தளம்பத்துவாலைதானிட்டு
மானேயதுதானுள்ளுக்கு மருந்துதிரிபலைதிரிகடுகு
தேனேநிம்பம்பழச்சாற்றில் திரட்டியரைத்துவுள்ளருந்த
நானேசொன்னேன்மருந்திட்டால் நாடிமுறியுங்கோலைவயிஞ்சி ( )

வேறு.

இஞ்சியாத்திரிதோஷிஞ்சுரமுஞ்சன்னியிசிப்புக்குத்திரிபலை யுந்திரிகடுகுங்கூட்டி, அஞ்சாமர்சூரணித்துக்குளிகையொன்றுஅ ன்றாகத்தாங்கொடுக்க அடங்கநோய்கள், மிஞ்சியதோர் மிருதசன் னிதிரிதோஷிங்கள் விட்டோடுநொச்சிச்சாறசங்கஞ்சாற்றில், கொ ஞ்சியதோருப்பிசமும்பயித்தியமுந்தீரக் கூட்டுவாய்விளக்கெண் ணையில்நசியமாமே. (௨௱௫)

ஆகுமேகண்ணுக்குநசியம்பண்ண அப்பனேவேப்பிலைச்சா ற்நசியமையா, போகுமேசமுத்திரத்தின்பாலைவிரைச்சாறு பொ ய்யல்லநசியமஞ்சனமுமாகும், தாகமாய் நித்திரையைக்கொண் டபேர்க்குதவருமல்எலரிசிதன்னிற்கொள்ளு, மேகமுடனண்டத் துவாதந்தீர மிளகுபொடிகொண்டிடவேவிட்டுப்போமே. ( )

பொருந்தவே வயிற்றுக்கட்டி சங்கிலையுஞ்சாறு போட்டிடு கோரோசினையுஞ்சந்தனவசியம், திருந்தவேமுட்டில்லாஸ்திரீகள் தங்கள் தேடியதோராலவிரைதின்னத்தீரும், வருந்தியேபுருஷின் பெண்மருவவேண்டி வாழாதபெண்புருஷின் மயக்கிலைவக்க, சிற ந்ததோரறவமதுதீண்டாதற்கு தேசத்துக்கொளிவாகுந் திறக்கும் வசியம். (௨௱௭)

வசியமாமாணுக்கும்பெண்ணுக்காகுமகத்தானகுளிகைரண் டெடுத்துக்கொண்டு, ரிசிவேளைதானநிந்துதீபதூப நேயமுடன் பெலிகொடுத்துவொருபேர்தாக, பொசியாமற் கொட்டக்கரந்

னைதவேரும் பிடிங்கியேகுளிகையுடன்சேர்த்துக்கொண்டு,குசியா
னைபொன்குளிசத்தடைத்துக்கட்டு நோக்குமடா புருஷனுடன்
பெண்ணுஞ்சேரும். (௨௩௮)

பெண்ணைகள் ரிஷிபோலேமுட்டில்லாவிட்டால் போட்டிடுவாய்
பழச்சாறிலஞ்சனமுநசியம், கண்ணுனமூந்திரிகைப் பழமுநசிய
ங் காட்டுப்பன்றிலத்திநசியங்கண்ணுக்கு, எண்ணுக வொருதலைபு
நோவுகக்கப்பா ஏகிவிடுங்குன்றிமணி யிலைச்சாற்றைத்தக்க, உண்ணு
கின்றசாரணைச்சாற் ஆகாச தெர்ப்பைபச்சா றுண்ணடனீ கூட்டி
யுனாக்கத்தேயே. (௨௩௯)

தேயடாவாய்நாற்றமுருங்கைச்சாமூர்த்திராட்டால்முருங்கை
சென்பகப்பூச்சாறு, பெயானநரம்புக்கால் சிவந்துவந்தால் பிச
சாமல்நொ லிக்காட்சா திற்கொள்ளு, நாய்போலேதிரிந்துநீ ய
லையவேண்டாம் நாலாயிரத்திற்சிலவானநோவு, மாயமாய்ப்பற
ந்துவிடுங்குளிகைகண்டால் மகத்தான சித்தர்சொல்ன மார்க்கந்
தானே. (௨௪௰)

குஷ்டம்-மேகவூறல்-தடிப்புக்குச் சூரணம்:

மாசற்றசூரணந்தானின்னைங்கேளு வகையாகவெருக்கிலைவே
ர்சித்திரமூலம், தேசத்துநாய்க்கொட்டா னைஞ்சல்வேரும் செ
ம்பூரான்பட்டையுடன் வண்டுகொல்லி, பாசற்றதலைச்சுருளி வேப்
பம்பட்டை பருகாமற்பெருமரமுமுசிலம்பட்டை, வாசற்றம
லைவேம்பு பெருவாகைப்பட்டை வளமான முப்புரண்டி குப்பி
வேரும். (௨௪௧)

குப்பியுடன்வெட்பாலைபங்கப்பாளைகூசாமல்வீழிமலைவிழி
கூட்டி, செப்பியதோர்கார்போகி கடுக்காய்தான்றி சேருஞ்சீரக
முடனேயோமங்கூட்டி,தப்பாமற்சேங்கொட்டை சுக்குத்தேறு
தனிக்காட்டுச்சீரகமுஞ்சரிநிறையாஞ்சேரு, ஒப்பியேயிளவறுப்பு
ச்சூரணித்து ஒருவேளைவெந்நீரிலுகந்துகொள்ளே: (௨௪௨)

உகந்துநீகொண்டாக்கார்தீருநோய்கே ளூறலியாமேலத
டிப்புச்சிவப்புவெள்ளை, தகர்ந்திடுசெம்பூரானும்விஷங்களெல்லா
ந்தமுதனெய்யுங்குட்டமெல்லாந்தவறிப்போகும், செகந்தனிலே
சொறிசிறங்குமேகவூறல் திரோகத்திலுள்ளநோய் தெளியும்பாரு,
இகழ்ந்திடாதிம்மருந்துபுளிபுகையைத்தள்ளியிட்டமுடன் மண்
டலநீயினைசர்த்துகொள்ளே. (௨௪௩)

## கண்புகைச்சலுக்குத்தயிலம்.

இசைந்ததோர்கண்புகைச்சல்தயிலங்கேளு இளநீரும்பாலு மிருநாழிகூட்டி, பிசைந்தகாளொள்ளெண்ணை படிதானொன்று பண்பானவதிமதுரங்கோஷ்டமோமம், முசந்ததோராவின்பாலிட்டு ஆட்டி யுண்மையாயதிற்கரைத்துப்பதமதாக, நசந்ததோர் சனி புதனுமுழுகிவந்தால் தா த்திலிருக்குமருந்துதியுந்தோணும் ()

## அதிசாரக்குணம் கியாழம்.

தோணுந்தொப்புள்முறுக்குண்டாந் துவளுங்கடுப்புரத்தம்விழு
மாணுமலங்கள்கறுத்தும்பாலிளகுநுரையுமுண்டாகம்
பூணுங்குறியதிசாரமென்றுபரித்துச்சொன்னேனுமலமதக்கும்
வேணுமிதற்குக்குறிப்பறிந்துவேண்டாததிசாரப்பித்தம்யோம் ()

பித்தவதிசாரந்தானென்னபெருக்கக்குறிதான்கண்டபின்பு
உத்தகிரிகைசெய்தவர்க்குமுறைப்போம்காக்கமுண்மையென
மெத்ததிப்பிலிகொடிவேலிமிகுந்தவசம்புவெட்பாலை
உத்தமூலமிலந்தைவேருமுத்தமவிடையந்தாஞ்சேரே. (௨௪௬)

விடையஞ்செவியம்மோரணியுமிகுத்ததேக்குதிரிகடுகு
அடவேகுரும்பைவேப்பலகுமாகுங்கடுகுகருஞ்சீரந்
தொடுகீழ்நெல்லிவிளாவேருந்தொடுத்தங்காயந்திவ்வியமாம்
இடுநீசமனுப்பொடியாக்கியிதமாய்க்கியாழம்வெருகடியே. ()

வெருகடியளவதாகவெர்நீருமிகுத்துக்கொள்ள
பருகவேயுருகக்காய்ச்சிப்பரிந்துகொள்ளதிசாரம்போம்
பெருசதீபனமும்போகும்பெருவயிறுபொருமலாகும்
கருகுநாபியிலேசூலைங்கடுப்புடன்விருமல்போகும். (௨௪௮)

போகுமேமதிவிடையமிருவேலிமுத்தம் புகழானகூவிளத்தின்பழமுங்கூட்டி, ஆகுமிருகழஞ்சியிதைத்தூளதாக்கியானவிருநாழிநீருழக்கதாக, தாகுமேதிப்பிலியுஞ்சுக்குங்கூட்டிதாடாகவிடித்துமேதூவிக்கொண்டு, எசமாய்க்கலக்கிநீகியாழங்கொண்டாலே குமதிசாரமுடன்வாதசூலை. (௨௪௯)

## சூலையதிசாரத்துக்கு மாத்திரை.

சூலையாமதிசாரம்போவதற்குத் துலங்குமாமஞ்சளுடன்மஞ்சள்கூட்டி, வேலையாமதுரங் கூடவிளமும்வெட்பால் வேண்டு

நீரிருநாழியுகக்கதாக,காலமேவிடையமேலப் பொடியாய்த்தூவி க் கண்ணவேகுடிக்கவதிசாரம்போகும், நீலமாங்கிராணிவலைசயா றும்போகும்நிச்சயமாய்ப்பிரண்டைசுண்டிக்கரியாஞ்சூதம். ()

## வேறு.

சூதமேயெட்டுநாபிதுலங்கெழுகெந்தியாறு
நீதமாந்தாரமஞ்சுநிறுத்துவாளமூமீராறு
ஓதும்வெண்காரமூன் றுவுகந்ததோர்சுக்குரண்டு
ஏதமோர்மிளகுமத்தைவிளாயனாயேற்றிடாயே. (௨௫௧)

ஏற்றிடுசித்திரமூலமிசைந்தசாற்விட்டரைத்து
மேற்றிடுமிளகுபோலவிளங்கவேயுண்டைசேர்த்து
ஊத்துடன்நிழலுலர்த்தியுரைத்திளநீரிலிட்டால்
ஆத்திடுஞ்சுரங்களெல்லாமகற்றிடக்கடுகுகொள்ளே. (௨௫௨)

## இராமபாணம்.

கடுகுசுத்திநேர்வாளங் கனத்தயிரதமிசைமூன்று
இடையோரொன்றுஅய்ங்கழஞ்சியிதற்குச்சர்க்கரையிருபலமாய்
திடமாய்முலைப்பால்விட்டரைத்து திருந்தப்பயறுவளவாக
இடவேமுலைப்பாலிஞ்சியதுவிடுநீராமபாணமிதே (௨௫௩)

இதுவாங்கெந்திவெண்காரமிருக்குநாபியிரதமுடன்
அதுவாந்திப்பிலிதிரிபாலைபானமிதாவ்வோர்கழஞ்சிகொண்டு
மெதுவாஞ்சுக்குவரிதாரவேண்டுமொவ்வோர்முக்கழஞ்சு
பொதுவாஞ்சுத்திநேர்வாளம்பொறுக்கக்கழஞ்சிநிறைகூட்டே ()

## தாபசுரக்குளிகை.

கூட்டிநறுக்கிக்குழிக்கலில்கோலம்புரசனிலைச்சாறு
மிட்டசுத்திமருந்தையெல்லாம் வேண்டுஞ்சாராயந்தானரைத்து
நீட்டுந்துவரைப்பிரமாணநிச்சமாமிஞ்சிச்சாற்றிலிட
ஒட்டுங்குளிரும்பரதாபமொழியுஞ்சுரமுமோடிடுமே (௨௫௫)

ஓடும்வெண்காரலிங்கமுவந்தசாதிக்காய்மிளகு
வாடுமிரதமிந்துப்புவழங்குப் நாபிமத்தவிரை
தேடுந்திப்பிலிபலகரையுந்திரும்பச்சுக்குவரிதாரம்
நாடுஞ்சமனையவிரிச்சாற்றில்நன்றாயரைத்துக்குன்றிபோல் (௨௫௬

## வேறு.

குன்றிபோ லுருட்டியே யிஞ்சிச்சாற்றாற் கூறுகேள்பெரு வாதஞ்சேத்மவாதம், பித்தியதோர் மூத்திரக்கிரிச்சிவெக்கை வெடிசூலைபதிசாரக்கிராணிகுன்மம், அன்றியிப்பலபல வியாதியெல்லாந்தீர்ந் தோடு மாத்திரையைக் கண்டபோதே, பன்றுள்ளவாழைக்காய்சுறாவின்கண்டம் பால்மோருகூட்டியே பத்தியங்காணே

கார்போகிதிரிகடுகுகாயமோமமங் கருஞ்சீரகங்கடுக்காய் குப்பையிற்று, போரானசங்கம்வேர்சங்கங்குப்பி பெரியதோர் குருந்தவேர்சூரைவேரும், சீரானதவசிவே ரெல்லாங்கூட்டி சிறக்கவே பட்டைதட்டிச்சமனதாக்கி, கூரானவிவையெல்லாங் குழிக்கல்லி லிட்டுக் குமரிடவேவெந்நீராய்க்கூட்டியாட்டே (௨௫௮)

## கருங்கோழிலேகியம்.

ஆட்டியதோர்கடைமருந்து வொருநிறையாக அடவாகக்கருங்கோழிவயிற்றுக்குள்ளே, தேட்டியதோர் கள்ளிப்பாலாழாக்குவிட்டு திட்டமானகாடியாழாக்குக்கூட்டி, வாட்டமற வெள்ளாட்டுநீருபடிரண்டு வார்த்திடுவாய்சட்டிக்குளெல்லாங்கூட்டி, மூட்டியதோர்கோழியதையுள்ளேவைத்து மூடுவாய்சீலைமண்தான் மூடிப்பூசே. (௨௫௯)

பூசியேயெரித்திடுவாய் வைத்தமட்டும் பிறகெடுத்துலேகியம்போலிடித்துநன்றாய், வாசமிட்டுக்கலயத்திலடைத்துக்கொண்டு வயிற்றுநோய்குடல்வாதமலட்டுப்பூச்சி, காசினியிலெரிகுன்மம்பித்தகுன்மங் கழல்வாதஞ்சகலமும்போங்சழஞ்சிரஸ்டு, தேசிகனேபத்தியம்வைத்திருபதுநாட்கொள்ளு தெறித்தோடும்வியாதியெல்லாம்பஞ்சுபோலே. (௨௬௰)

## பஞ்சாக்கினிக் குளிகை.

## வேறு.

பஞ்சலவணமெவாச்சாரம்பருத்தவழிஞ்சிக்கொடிவேலி
அஞ்சாங்காட்டுங்கறணையுறஞ்ஷபிரண்டையசமோத
மிஞ்சிச்சீரகம்பெருங்காயமியன்றவாளம்விழாவரி
தஞ்சந்திரியலைதிரிகடுகுதானேயுள்ளிசமன்பொடியே. (௨௬௧)

பொடியேசமனுங்கள்ளிப்பால்பொருந்தவரைத்துக்கடலைகள்
மிடிதீர்நெய்பால்தனிற்கொள்ளமேவுங்குளிர்ந்ததண்ணீர்குடி-
படியிற்றீருப்வியாதியெல்லாம் பாகாகமசளீர்பாரிலுள்ளோர்
திடமேதீருமென முனிவன்செப்புமூத்திரக்கிரிச்சியோய்.(௨௬௨)

மூத்திரக்கிரிச்சிகுன்மமுடன்முசியாமகோதரஞ்சலக்கூராய்
றெத்தசயமுஞ்சுவாசமுடனேய்ந்தஅத்திவாய்வுபலம்
போற்றுமந்தககிராணிகளேபொருத்துப்பாண்டுகாமாலை
தீத்தேனேகுமென்றுரைத்தார்தீரும்பஞ்சாக்கினிகுளிகை. ()

## ஆனந்தத்தாண்டவக்குளிகை.

குளிகையாநாபிசூதமனோசிலைகெந்திலிங்கம்
அழிகுவெண்காரங்கூட்டிஅந்திடையெல்லாஞ்சேர்த்து
டமநிம்பச்சாறுவிட்டுப்பண்புடன்சாமநாலு
தெளியவேநரைத்துநன்றாய்த்திரட்டிடுகெடுகுபோலே (.௨௬௪)

## வேறு,

கடுத்துபோல் மாத்திரையைச் சன்னிவாதங் கண்டத்திரோ
யெல்லாம்போவதற்கு, முடுகியதோர்கொழுஞ்சியின்சாற்றன்னி
ற்கொண்டால் மோசமில்லைதீர்ந்துவிடுமுன்சியாக, படுபாவிசன்
னிக்குமுலைப்பாலுண்ணப் பறந்துவிடுஞ்சன்னியென்ற தெல்லா
ம்போகும், திடமுடனேயிந்தமுறைசெய்துபாரு செகத்திலா
னந்தத்தாண்டவன்சோதியே. (௨௬௫)

## ஆனந்தவயிரவக்குளிகை.

சாதிலிங்கமெலிகார மிளகுநாபி தற்சமனும் பழச்சாற்றில
ரைத்துநன்றாய், எதமறக்குன்றியளவுண்டைசெய்து இஞ்சிச்சா
ற்றிலுரைத்துவிடுவீராகில், பேதமுள்ளசுரமெகுஞ் சன்னிபோ
கும் பித்தேகுந்தேள்விஷமும் பேசியோடும், நாமமது பிரமா
னந்த வயிரவனு மென்றே யுரைப்பார்க ளெங்கெங்கு முறுதி
காணே. (௨௬௬)

உறுதியாந்திரிபலையுங்காத்தங்காய முகந்தலிங்கம்வெண்கார
மித்துதிரிகடுகு, பிறிதியாம்வசம்புடனேவாய்விளங்கமோமம் பி
ன்னுமொருகுருசாணிசழஞ்சிவகையொன்றா, குறுதியாய்சரக்கெ

ல்லாப்பூராணித்துக் குறிப்பாகசீலைகடி செய்துகொண்டு, அறிதி
யாமிந்துடைக்குவாளஞ்சேர்த்து அப்பனே நொச்சிச்சாறலோ நா
ள்மூன்றே (௨௬௭)

மூன்றுநாள்தானாத்துக்கடலைபோலே முழுங்கவேநிழலு
லர்த்திவைத்துக்கொண்டு, என்றதொரு விரோசனமாம் வெல்ல
மாகுமெடுத்திட்டமோருசோ றுண்ணத்தீரும், சென்றதோர்கு
ன்மமது நொச்சிச்சாறுந் தீருமேபாவின்பாலாற் சோறுநல்கும்,
வென்றசீரகஞ்சுக்குகியாழங்கொள்ள வெறுப்பான சுரங்களெல்
லாம்விட்டுப்போகும். (௨௬௮)

போகுமடாசேத்துமங்குமட்டியின்சாறு பொருந்தவேமா
துளையின்சாறுமாகும், ஏகுமேகாசமெல்லாந்தோடைசுக்கு இது
கண்டங்காலியுடன்றூதளையின்சாறும், ஆகுமேயெரிவுடனுட்கா
ந்தல்போக அப்பனேநெல்லிக்காய் கியாழங்கொள்ளு, தாகமே
யெடுத்தாக்கா லாவின் மோராந் தணியுமே நோயென்ற வாயு
வெல்லாம், (௨௬௯)

வேறு.

வாய்வுகுன்மம்வயிறுடம்பு மருவுங்கைகால்சிறுத்திருக்கும்
மேவுஞ்சிறுநீர் துளிதுளியாய் விழுமேயிதற்குப்பிரமாணம்
பேயினத்தியிலைச்சாற்றில் பெருகும்பத்தியம்மோர்சோறும்
ஓயாமந்தம்பயித்தியமு மூகர்ந்தகுன்மநெஞ்செரிவு. (௨௭௰)

நெஞ்சேயெரிக்குந்தலைவலிக்கும் நெகிழ்ந்தகுளிருமுட்காச்சல்
பஞ்சுபோலச்சந்துகள்நோம் பருகுகுருங்கைச்சாற்றிலிட
மிஞ்சுமாவின்பாலுஞ்சோற் மிகுத்தபேய்ப்புடல் முசுமுசுக்கை
தஞ்சமென்றேகுளிகையிடத் தவறுச்சோற்றிற்றயிருந்தே ()

அருந்தங்கிராணித்தோர்க்குளிகை யசனம்பண்ணும்போதுகொ
வசிறுகுன்மநீர்க்கோவை பகிழுஞ்சுக்குவெந்நீரோ [ள்ளு
பசிநீர்ச்சோறுதானுகும் பகருங்குடிநீர்சுக்குபலம்
கதிரொன்றில்லாவேப்பிலையும் கருதும்பாண்டுமிவைதீரும். ()

திருநாளுழிநீருழக் காக்கிச்சிறந்ததிப்பிலிமேற்பொடிகொள்
பாருமருந்திட்டுட னுப்பும் பசரும்வெள்ளையோக்காளம்
மாறுவனையா ரோசிக்கும் வாயாலெடுக்கு நாதள்ளும்
சேரும்நிம்பப்பழச்சாறு சேர்த்தேமோருசோறுமுண்ணும் ()

### வேறு.

உண்ணுமந்தாக்கினிக்குக்காயம்வெந்நீர் உள்நெஞ்சுதினவுக் குவாலைவேராம், திண்ணம்வெட்டிவேராகுங்கூடச்சேரு திருப்ப வேகருப்பன்சாற்குளிகையொன்று, பண்ணுபுந்தி மேற்சொறியு ங்கஸ்தூரிமஞ்சள்பகரவேபொடியாக்கிக்காய்ச்சியுண்ணு, எண்ணெ வேயுருவியுடன்மஞ்சள்தூளுங்கைம்முறையாய்க்காய்ச்சியுண்ண மூலந்தீரும். (௨௭௪)

### கருவேப்பிலைச்சூரணம்.

### வேறு.

மூலவியாதிக்கோர்குளிகை முனிகரந்தைச்சாற்றிலிடப்
சாலப்பத்தியம்பாற்சோறு தயங்குசுவாசகாசத்திற்கு
ஏலச்சிவனைப்பேரீச்சு எதிலொன்றிற்றானிடவே
பாலர்மாடாதோடையிலை பரித்துகியாழந்தனில்வையே (௨௭௫)

வையேவயிறுகற்போல் மகிழவீங்கித்தொப்புளுமேல்
ஐயசுளித்தநயமுமில்லை யானபசியுந்தாகமில்லை
நையுமலங்கள்தான்கழற நாடுநொச்சிச்சாற்றிலிட
செய்யும்பத்தியம்பாற்சோறு திருந்தக்கூட்டிநீர்கருக்கே ()

கருவேப்பிலையுமிரண்டுபலங் கனத்தசுக்குவோர்பலந்தான்
மருவநாழிநீருழக்காய் மகிழ்ந்துதிப்பிலிமேற்பொடிகள்
திருவேரணையாமுசுமுசுக்கை திகழ்ந்தவெல்லமதிற்கூட்டம்
உருவேமிக்கவொளிசிறங்கு முணர்வாம்பத்தியமுணர்சொல்வோ

சொன்னவனுபானந்தப்பாமற் சுகிக்கமருந்துதான்கொள்ள
வன்னபத்தியமீறாமல் மகிழ்ந்தேயுண்டுநடந்தாக்கால்
அன்னம்போலநடையுடையா ளலைக்கும்வியாதியடவெல்லாம்
நன்மையாகுநாளுக்குநாள் நன்றாய்த்துலங்கும்வயிரவனே ()

### கஸ்தூரிமாத்திரை சன்னிதோஷத்திற்கு.

வயிரம்வெள்ளைப்பவழமுடன் வழங்கும்ஆட்டுக்கால்சேர்த்து
அயிரமுள்ளும்பண்ணியிலா யாகுநண்டுகர்க்காந்தபற்பம்
பயிராவகைக்குயிடைமூன்று பண்ணிக்கல்லுபொற்கவடி
கயிராங்குராங்குக்கல்லுடனே கண்டதொலிச்சுவொவ்வொன்றே()

ஒன்றைப்பாம்புக்கல்லையா முயர்ந்தமுத்துப்பவழம்பத்து
நன்றேகுங்குமங்கஸ்தூரி நாட்டுகோசினைமூன்றிடையாம்
சென்றேபிராந்திதனைவிட்டுச்சேர்த்துப்பத்துநாளரைத்து
அன்றேமிளகுபோலுருட்டி யாகும்பிராந்திதனிலருந்தே ()

அருந்தச்சன்னிபதின்மூன்று மானசேத்தும்மிருபதுவும்
வருந்தும்பித்தநாற்பதுவும் வாதவகையோரெண்பதுவும்
பிருந்திடங்களற்றுப்போய்ப் பின்னு பிருந்துநோய்களெல்லாந்
திருந்துமென்றுவுணர்ந்துபோல் செய்யுங்கஸ்தூரியுண்டையிதே.

### தாளகப்பற்பம் இளைப்பிருமலுக்கு.

### வேறு.

உண்டையாந்தாளகத்தையிலஞ்சிச்சாறுவுகந்தபிச்சம்பழச் சாறுமுள்ளிச்சாறு, தண்டாதபூவரசம் பட்டைச்சாறு தருகாமல ரைத்திடுவாய்நாலுசாமம், மிண்டமேவடைதட்டிப் பூர்சஞ்சாம் பல் மிகுத்ததொருகுகைபிடித்து வுலரவைத்து, பண்டானதாள கத்தையுள்ளேவைத்துப் பதலமாங்கீழ்மேலுஞ்சாம்பலையுமிட்டே.

இட்டுநீசட்டிக்குள்மேலுமூடி யிதமாகத்தீயெரிக்கப் பற்ப மாகும்,புட்டுபோலதையெடுத்துப்பரணிவைத்துப் புகட்டிடுவா ய்சயமீளையிளைப்புத்தீரும், திட்டமொருபணவிடைதான்றிரிகடு குபொடியில்தீருமேசயகாசமீளைபோகும்,தொட்டதொருவியா தியெல்லாமுடனேபோகுஞ்சுகமாகவின்னமொருயிருவிகேள்.

### வேறு.

இருவிநாபியரிதார்ரமிரதங்கெந்திலிங்கமுடன்
வருமேதான்றிக்காய்சுக்கு மருந்துமிளகுதிப்பிலியும்
தருமேயொன்றுகழஞ்சாகத் தார்நேர்வாளமய்ங்கழஞ்சு
அருமையாகச்சுத்திபண்ணி யரைக்கவேண்டுங்கையான்சாற் ()

### சஞ்சீவிக்குளிகை.

கையாந்தகரைச்சாறதனாற் கதிக்கவேழுநாளரைத்து
மெய்யேயொருநாட்கொருசாமம் மிதமாயிராமற்றுனரைத்து
உய்யும்பயறுபிரமாண முண்டையாக்கிநிழலுலர்த்தி
ஐயாசஞ்சீவிக்குளிகையென்று வருளிச்செய்தாரகத்தியனார் ()

வேறு,

அகத்தியமாஞ்சொல்லுகிறேம்பௌத்திர மூலமாகுமேசா
திக்காய்தன்னிற்கொள்ள, மகத்தானவாய்வுக்குச் சிறுநீராகு மாச
ற்றபழச்சாறுவிஷத்துக்காகும், சுகமில்லாச்சூலைக்கு முருங்கைகட்
பட்டை சுத்தவலிகுன்மத்துக்குடிநீர்நொச்சி, எகத்திலேபிறமே
கம்பஞ்சுமேக மேகுமேநறுந்தாழிச்சாறுகொள்ளே. (௨௮௬)

கொள்ளுமடாவஞ்சியதோர்குளிரவெதுப்பு கூறுகேள்நெ
ல்லிக்காய்க்கியாழம்வெந்நீர், தள்ளுமேயிரண்டைவெண்ணைமக
க்கட்டப்பா தாங்காதயெரிகுன்மஞ்சீந்திச்சாறே, வள்ளலேசயம்
பற்றுபோகவெண்ருல் மகத்தானமேவன்ளாட்டுப்பாலிற்கொள்ள,
மெள்ளமேவயிற்றிலுள்ளகுன்மமெல்லாம் விட்டோடுந்திரிபலை
திரிகடுகுதானே. (௨௮௭)

வேறு.

கடுக்கும்வயிற்றிற்குறிப்பறிந்து கண்டுசெய்வாயனுபானம்
எடுக்கும்வியாதிகுறிப்பறிந்து வெல்லாநோவுந்தீர்ந்துவிடும்
தொடுக்கும்பேதிமாம்பட்டை துலங்குமுப்பலிஞ்சிச்சாற்
நடுக்குஞ்சஞ்சீவிகுளிகைகண்டால்நாடாதோயுங்கெந்தகங்கேள்

தேங்காய்க்கடுகு,

கெந்தகம்பன்னிருகழஞ்சுகிளர்ந்தரசமுமறுகழஞ்சு
வந்தவரைப்பொடியையைந்துமருவுமருந்துநிறைகொண்டு
விந்தைக்குமரிசசாறரைத்துமேவுதேங்காய்தனிலிட்டு
அந்தம்பெறவேசட்டியுள்ளேயடவாய்த்தேங்காய்தனில்வைவே,

சூரக்குளிகை.

சுவத்தமருந்தைமூன்றுநாள்மகிழவரைத்துப்பொடியாக்கி
நித்தநாலுபணவிடைதானிறையாநெய்யிற்றுன்கொள்ள
அத்தசோகைபாண்டுவகையானகழிச்சல்திசாரம்
இத்தனையெல்லாந்தீருமென்றுவிறையோரகத்தியரியம்பியதே()

வேறு.

இயம்பியதோர் நாபிரசங்கெந்தகமூந்தார மென்றமனோசி
லையுடனேவாளங்கூட்டி, செயம்பெறவே வட்பிரோக செந்தூரங்
கூட்டிசேருமடா லிங்கமுடன்சமனதாக,வயம்பெறவேநொச்சி
யுடன்மறுராஞ்சாறுவகைவகைச்சாற்றாலரைத்துக்குன்றிமுத்த.ந

யம்பெறவே யுருட்டி நிழலுலர்த்திநன்றாய்ச்நன்மைபெறசட்டி
யிட்டு வேடுகட்டே. (௨௯௧)

கட்டியே வெயிலில்வைத் தெடுத்துவப்பா கைபார்த்துமுக
ம்பார்த்துக்குணங்கள் பார்த்து, திட்டமுடன் மாத்திரை தானெ
ணறெடுத்து திறமானவனுபானம்வைத்துக்கொள்ள, வட்டான ஆ
லைவெல்லக்கட்டிதன்னில் வைத்தருந்த வெருவெந்நீர் சுரத்துக்கா
கும், இட்டமுடன் வாதசுரபித்தசுரமெல்லா மேகுமேசீதசுரமெ
ல்லாதிற்கும். (௨௯௨)

வேறு-கிரிவிநோதமாத்திரை.

நிற்குங்கெந்தகம்வெண்காரம் நின்றநாபிசமனாக
ஒக்கக்கூட்டிப்பழச்சாற்றிலுருளத்திரட்டிவைத்துக்கொண்டு
மெய்க்குங்கிரில்வாயில்வைத்துவேண்டும்வாலைச்சுருட்டியடைத்
தக்கபானைதன்னிலுப்பைத்தானேகொட்டிமேலைவையே (௨௯௩)

வைத்துஅதுமேற்கொட்டுவுப்பைவாயைமூடிச்சீலைசெய்து
உற்றவடுப்பினனலையிட்டுவோயாதெரிக்கநாற்சாமம்
கைத்தாழ்வில்லாத்தீயெரித்துக்கலசத்தெடுத்துமத்தஞ்சாற்
மெய்த்தார்நொச்சியிஞ்சிச்சாற்விளங்கப்பிசரியுலர்த்தியிடி. ()

சுரக்குளிகை:

உலர்த்திவைத்துச்சூரணந்தானெடுங்குஞ்சுரமுநசியமிட
பெலத்தமிடமும்வலமாகிற்பேணிச்சுரமுமிகவடித்தால்
வலத்தேநாசிதானூதமாறுமிடமுமப்படியே
நிலத்தேயோகசுரமானால்நிசமுமிரண்டுநாசியுமே. (௨௯௫)

வேறு-துத்தக்குளிகை.

நாசியே மயில்துத்தம் பலந்தானொன்று நாட்டி லுள்ளதா
ளகமும் பலந்தான்மூன்று, பேசியேகற்சுண்ணம்பலந்தானுங்கு
பிணங்கவேவாளைச்சாற்றனில்ரைத்து,தேசியாங்குகையில்வைத்து
ச்சீலைசெய்து சேர்த்துநீருக்குடத்திலெரித்தெடுத்து, ஆசியே து
ளசியிலைச்சாற்றரைத்து அப்பனேமிளகுபோலானதொக்கும் ()

ஆனதோருண்டைதனை யிஞ்சிச்சாற்று லருந்தவே சீதசுரம
கலுமப்பா, போனதோரெருக்கம்பால் கோதும்பைமாவில் புக
ட்டியே புதைத்துவைத்துப்பின்பெடுத்து, கானகத்துச்சதுரக்க
ள்ளிப்பாலிலாட்டிக் கையடைபோல்தட்டியேநெய்யிற்பூசி

ணமாமடைசுட்டு வைத்துக்கொண்டு சாப்பிடுவாய் கழல்பருப்பு
வெல்லம்நெய்யே. (௨௯௭

### சீதசுரக்குளிகை

நெய்யாகுஞ் சோறுடனே மோறுமுண்ணு நேத்தியாயப்
பாண்டுகாமாலைம்பாகும், நய்யுமே கெந்தகமுங்காட்டுப் பாகல்
நற்கிழங்குகடுக்காயுஞ்சமனாய்க்கூட்டி, கையினாற்செம்பிலைச்சாற்
விட்டுஆட்டி கதிக்கவே சோற்றுத் தண்ணீரிலாட்டி, மெய்க்கவே
யுளுந்தளவுண்டைசெய்து, வெய்யிலில்வையா தெடுத்துநிழலு
லர்த்திடாயே. (௨௯௮)

### பாண்டுகாமாலைக்குகோதும்மையிட.

உலர்த்தியதோர்குளிகைதனைத் திரிகடுகிலிட்டால் ஓடும்பதி
ன்மூன்றுசன்னிசுவாசகாசம், பெலத்திட்டபாண்டுவுடன்கிராணி
வாய்வு பேரானபுண்ணுபதினெட்டுகுட்டம், துலைத்திட்டவெழு
வகைச்சுவாசகாசம் சுருக்கான வற்புதமாய்வாதர்தீரும், மலைத்தி
ட்டுப்போகாம லின்னங்கேளு மகத்தான சுரக்குளிகைவணங்கிச்
செய்யே. (௨௯௯

வணக்கமுடன் துத்த மஞ்சு பாரதமொன்று மயிலான துரு
சொன்றுநாபிமுக்கால், இணக்கமுடன் தாரமொன்று கூடச்சேர்
த்து இயலாகப்பாசலிலைச் சாற்றரைத்து சணர்குடனே பயறளவு
வுண்டைசெய்து, கவனமாய்க் கியாழம்விஷ்ணு காந்திகொள்ள,
பிணக்கொன்று மில்லையப்பாசுரங்களெல்லாம் பேசாமலோடிவி
ட்டுப்பேணிச்செய்யே. (௩௱)

### வேறு சுராங்கிஷம்.

பேணியேயிரதமுடனப்பிரோகஞ்சேர்த்துப் பிசகாமற்சம
ன்கூட்டி மருக்கொழுந்துச்சாறு, ஏணியா யிருவேலிச் சாறுங்கூ
ட்டி யிதமாகத் தானரைத்துக் கடுகுவுண்டை, தூணியாய்விடாது
சுரம்போகவேண்டி துடியாக விருவேலி சுத்தத்தண்ணீர், ஆணி
யாமுண்டைதனை யுரைத்துக் கொள்ளு அஞ்சியிடு தோஷிசுர
மெருக்கஞ்சாறே. (௩௱௧)

### மருக்கொழுந்து-உண்டை-வேறு.

சாறுமிர்தங்கெந்தகமுந்தாக்குநாபிமனோசிலையும்
வேறேயாகவெண்காரம்விளங்கும்வகைக்குவோர்சமஞ்சு
கூறுவதற்குவெட்டிடையுங்கூட்டுமிளகுபொடிசெய்து
திரவிடித்துவடிகொண்டுதின்னப்பணவிடை சூரணமே. (௩௱௨)

## பூபதியுண்டை-வேறு.

சூரணமாம் வெற்றிலையில் மடித்துவுண்டு சுகமாகவென்னீர் தான்குடிக்கத்தீரும், காரணமாம் பாண்டுவுடன்சோகைதீருங், காமாலைகுன்மமுடன்வரட்சிதீரும் வாரணமாம்வளப்புடனேயிசுப் புதீரும், மகத்தானகுளிர் காச்சல் மாறிப்போகும் பூரணமாம்பின்னையுமோர் பித்தந்தீரும், புகழான குளிகையொன்று யிரதங் கேளே. (௩௱௩)

## கெந்தகசுரக்குளிகை.

இரதங்கெந்தகம்வெண்காரமேகுந்தாரமனோசிலையும்
மருவுந்தாம்பரபற்பமுடன்வன்மைதிப்பிலிமிளகுடனே
உரிமைநொச்சிகண்டாலியோங்குமாடாதோடையிலை [யே
பெருகஞ்சாற்றூற்றரைத்துப் பேணிப்பயறளவுண்டைசெய்

செய்தவுண்டைக்கனுபானந்தேனேசர்க்கரையிஞ்சியிற்கொள்ள
ஐயங்குழையாசுவாசம்பற்றுமாணையீளையிருமல்சுரம்
வெப்பங்குன்மம்பிரளியுடன்மிகுத்தசுரவகைதானனைத்தும்
உப்பவிடமுமில்லையென்றுவோடிப்போகுங்கண்டாயே (௩௱௫)

கண்டேயிதற்குப்பத்தியந்தான்கருதுந்துவரையலாக்கினை
அண்டர்புகழுமிஞ்சிசுண்டியாகுமென்றாகத்தியனார்
தொண்டர்புகழும்பராபரனார்சுக்கிற்றபாதம்போற்றியபின்
பிண்டிவினைபோஞ்சுருங்கிஷீந்தான்மிகுத்தவதிசாரந்தீர்ந்திடுமே

## சன்னிக்குஉண்டை,

திருநெல்லிதிப்பிலியுந்திக்கோரொன்றுமுக்கழஞ்சு
பாருகெந்திநாபியுடன்பகர்வோரொன்றுகழஞ்சாக
சேருமிஞ்சிச்சாறரைத்துதெளியுங்குன்றிப்பிரமாணம்
நேராயுலர்த்தியிஞ்சிவிடநிகழும்வியாதிபிணிகேளே (௩௱௭)

கேளீர்சுத்திபுரமேகங்கிளர்ந்தசன்னிபதின்றும்
நாளுமுடலில்வாதம்பலநன்றாய்த்தீருந்தப்பாது
ஆளுமாவின்பாலுடனேயரிசிகூடத்தான்போட்டு
மூனும்பசிக்குந்தாணகஞ்சிமுன்னேருஞாத்தமொழியிதுவே ()

இதுவேகேளுவெண்காரமிரதமனோசிலைமத்தவிலா
பொதுவாநாபிவலக்கழஞ்சுபோற்றுந்திரிகடுகுஅறுகழஞ்சு,

மெதுவாந்தேசிச்சாறனாத்துமீறங்குன்றிப்பிரமாணம்
அதுவாந்தேசிச்சார்றிலிடவானசுரங்களகல்றிடுமே. (௬௱௧)

அகன்றிரோசணிதிரிகடுகுவானவிலுப்பைப்பூவுடனே
புகன்றுமிளவுங்கொழியதற்பகழு ஞ்சட்கருவெடுத்து
அகன்றவிதுவுஞ்சரிசமனுயானமுலைப்பாலிட்டரைத்து
இகன்றசுண்டைக்காயளவுயிஞ்சிமுலைப்பால்குணமாமே (௬௱௰)

இதுவும்உண்டை,

குணமாந்திப்பிலிசுக்குடனேகூட்டுகடுகுமிளகுடனே
மணமாங்காயமோமமுடன்மறக்காதிப்பிலிக்கட்டையுடன்
தணலாமிஞ்சிச்சாறுவிட்டுத்தயங்காதரைத்துமுழுகிடவே
இணமாம்வாய்வுயிருமலறுமெல்லாச்சுரமுமவிட்டேகும் ()

கர்க்கடகசிங்கிசூரணம்.

வேறு.

ஏருமேகற்கடகசிங்கிதேக்கு இதமானதிப்பிலியுமமுர்ந்ததான்றி, போகுமேசடாமாஞ்சிசுக்குகோஷ்டம் பொருந்தியதோர் வழுதிலையுமிளகுயிந்து, ஆகுமேதூதுவளை கண்டங்காலி யடுத்த நெல்லிப்பருப்புடனே பொரியுங்கூட்டி, வாகுபெற வறுத்துநீ பொடியதாக்கி வளமாகத்தேனிலுண்ணயிருமல்தீரும். (௬௱ ௨.)

கியாழம்.

தீருமேசுக்குடன் சீந்திகூட்டிச் சேருநீ யிருவேலி லாமிச் சோடு, பாருயிருநாழிநீ ரெட்டொன்றாக்கிப் பதருமற்றிப்பிலியைவறுத்திக்கொண்டு,சேருநீகியாழத்தில்மேலே தூவிச்செலுத்துவாயிருநோங்கியாழந்தன்னை, மாறமே சுரங்களெல்லாம்விட்டேபோகு மயக்கமுடன்தாகமெல்லாமாறிப்போமே. (௬௱௰௬)

வேறு-சுரக்கியாழம்.

போமேதான்றிகடுகுநெல்லி போற்றுந்தாமலாயிலவங்கம்
ஆமேகொன்றைத்தோலுடனே யரியகழஞ்சுக்கோரொன்று
நாமேசொன்னேமிருநாழி நல்லநீரில்வெந்திறக்கி
தாமேதிப்பிலிதூவியுண்ணத் தாங்காச்சுரமுந்தங்காதே (௬௱௰௪)

வேறு.

தங்காததாமரையின்கிழங்குசாறு சம்மட்டிமதுரமுடனே மங்காயம், பங்கமில்லாநன்னாரிவேருமிந்து பகரிலுப்பைப் பூவுடனேசமனதாக,சிங்காரமான தொன்றிருகழஞ்சு சேரவேகாய்ச் சிநீயொட்டொன்றாக்கி, பங்காமில்லாத்திப்பிலிமேற் பொடியைத்தூக்கிப் பாவனையாய்க்கொள்ளச்சுரம்பாழதாமே, (௯௱௰௫)

வேறு.

ஆமேநெல்லிக்கடுகுதான்றி யாகுமழிஞ்சியிருவேலி
தாமேசொல்லுமிலாமிச்சு தமர்த்தந்தாமரைக்கிழங்குடனே
ஓமேயோரெண்டிருகழஞ்சு வொளியுநீரிலெட்டொன்றாய்
வெம்மைவெத்துகுடிப்பீரால் வெதுப்புமில்லைவிதியெனவே. ()

விதியேயெண்ணும்வெண்காரம் வேண்டுந்தண்ணீர்ப்பதக்காக
கொதியாநின்றவெதுப்புடனே கூட்டிக்கொள்ளக்கொள்ளுமதிற்
சதியாதிருந்ததெமக்கென்று தாமமதியச்சாறுடனே
பதியேயல்லக்காணுமது பாரீர்சுரமும்மையெனதே. (௯௱௰௭)

பையேசிறுகாஞ்சோரியுடன் பருத்தசீந்திற்றொடையிலையும்
செய்யுஞ்சிறியவழுதிலையுஞ் சேருஞ்சுக்குவன்னியோமம்
வையவிடிக்கவகைகழஞ்சு மறுக்கக்காய்ச்சியெட்டொன்றாய்
நையவெடுத்துக்குடிப்பீராய் நமனுஞ்சுரமுந்நாடாதே (௯௱௰௮

நாடுஞ்சீந்தில்வேப்பீர்க்கு நல்லநெல்லிக்கடுதான்றி [ன்
போடாப்புடலும்ரோசினையும் போற்றுஞ் சிறுகாஞ் சோரியுட
பாடாபகரும்பெருங்குரும்பை பதித்தபட்டைவேருடனே
கோடாதிருந்துயெட்டொன்றாய்க்குடிப்பீர்கழஞ்சிதேனுடனே

தேன்சிறுதேக்குநிலவேம்பு திப்பிலிகோஷ்டமுத்தக்காசு
வான்சிறுகாஞ்சிபற்படக மதிக்குஞ்சீந்திகத்திரிவேர்
நான்சிறுசுக்குநாழிநீர் நன்பாய்க்காய்ச்சியெட்டொன்றாய்
தானதுமூன்றுநாள்குடிக்க சகலசுரமும்வாராதே. (௯௨௰)

சுரக்கியாழம்.

வாராய்சுக்குச்சீந்தியுடன் மருவும்வழுதிலைக்கத்திரிவேர்
நாறுங்கோஷ்டமுடன்கழஞ்சா நண்பாய்த்தகத்திருநாழிநீர்

பாராய்க்கியாழமெட்டொன்றாய்ப் பருகக்காய்ச்சி குடிப்பீராய்
சீராய்வந்தசுரங்களெல்லாஞ் சிதறிப்போகுங்கண்டமே. (௩௨௧)

வேறு.

கண்டதொருசந்தன நன்னாரிவேரு காட்டில் கொட்டிக்கிழங்
குசெங்கழுநீர்கோஷ்டம், மிண்டதொரு முந்திரிகையிலுப்பைப்
பூவு மீறாமலிருகழஞ்சுகூட்டிக்காய்ச்சி, கண்டவே யெட்டொன்
றாய்க்கியாழங் கொண்டால் சுரமனைத்தும்போலதுதான் சுருக்கை
க்கேளு, பண்டுள்ளசுரங்களெல்லாம் பறந்துபோகும் பாகமாய்
க்கியாழமதைப்பருகவீரே. (௩௨௨)

வேறு.

பருகிப்பழத்தின்முந்திரிகை பருத்தவிலாமிச்சிறுவேலி
வரும்பேரீச்சுசரிசமனாய் மறுகககாய்ச்சிக்குடிப்பீராய்
குறுகிச்சுரமும்பாதாபங் குதித்துவோடிப்போவதற்கு
மறுகக்கியாழந்தனைக்கொள்ளு மருண்டுபோகுங்கண்டமே ()

வேறு.

கண்டதொருகியாழமொன்றுசொல்லக்கேளு கசடானசுரம
ற்றுப்போவதற்கு, மண்டலத்துச்சீந்திபதினெண்கழஞ்சுகூட்டி வ
லைகையானசுக்குநாற்கழஞ்சுகூட, தண்டாமலிடித்திடுவாய் துளதா
கத் தனிநீராலெட்டொன்றாய்க்கியாழங்கொண்டால், பண்டுள்ள
சுரங்களெல்லாம்பறந்துபோகும் பாவினையாந் தேன்கூட்டிப்ப
ருகநன்றே. (௩௨௪)

வேறு.

நன்றேமதுரஞ்சுக்குடனே நறுக்குமூலந்தொடையிலை
இன்றேநீர்தானிருநாழி யிடித்துக்காய்ச்சியெட்டொன்றாய்
சென்றேகுடிக்கச்சுரங்கள்விட்டுத் தெறித்துப்போகுங் கண்டமே
குன்றேமுலையாள்காந்திமுத்தங் கூட்டிக்கொள்ளக்குணமாமே ()

குணமாம்மோகணிசெவ்வியமுங் கூட்டுங்கடுக்காய்சுக்குடனே
மணமாஞ்சாரணைமரமஞ்சள் வைக்குந்தேவதாரமுடன்
பணம்போல்நீரிலெட்டொன்றாய்ப் பாக்கக்காய்ச்சித் தானிறக்கி
உணவாய்த்திப்பிலிமேற்றூவி யுகந்துகொள்ளச்சுரமறுமே ()

அறுமேமிளகுகோஷ்டமுட னன்குமிருவேப்பலகுடனே
குறுகுங்கொத்தான்முத்தமுடன் கொள்ளுந்தேவதாரஞ்சேர்

மறுகொங்காணிபெருங்குறும்பை வைக்கும்புடோல விடையமு
சிறுகாஞ்சொறிகிழ்நெல்லி சேர்த்தேகியாழஞ்சுரமகலும் [டன்

அகலுங்கொன்றைத்தாள்றியுட னருகும்ரோசினைவேப்பலகு
புகலுமுத்தக்காசுசுக்கு பொதுவாமுலசீரகமும்
வகையாய்க்கழஞ்சுதான்வாங்கி வற்றக்காய்ச்சிக்குடிப்பீராய்
தகையாதிப்பிலிம்மற்பொடியாந் தங்காதெடுத்துககுடிப்பீரோ ()

குடிக்குஞ்சுக்குமுத்தக்காசு கூட்டுசாறணைவேப்பலகு
முடிக்கக்கேளாம்யாரொன்று முருகுமெள்ளுமுக்கழஞ்சு
படிக்குப்படியேமேலிட்டுப் பையக்காய்ச்சியெட்டொன்றாய்
மடிக்கப்பொடியைம்மேலிட்டு மதித்துக்குடிசுரம்வாராதே ()

வாராய்சிவதைகண்டங்காலி வளருஞ்சுக்குமிளகுடனே
ஏராதென்னச்சொல்லுகிறேன் மிதுவுமோரொன்றுமுக்கழஞ்சு
காராய்குழலையெட்டொன்றாய்க்காய்ச்சித்திப்பிலிமேற்பொடி
யை,சீராய்மலையாயிட்டேபோதிற்றிகழப்பருகிற்றிண்ணமதே (கூய

திண்ணமதுவேதொடையிலை சீந்திற்கொடியும்வழுதிலையும்
திண்ணுஞ்சுக்குவகையொன்று தாங்கக்கொள்ளுமுக்கழஞ்சு
வண்ணம்புதியநீரிலிட்டு வற்றக்காய்ச்சியெட்டொன்றாய்
தின்னுந்திப்பிலிமேற்பொடியாய்த்தாகசுரமுந்தருகாதே: ()

சுரக்குளிகை-வேறு.

திருகாதுகடுக்காயுஞ்சிவதைவேருந் தாக்குசுக்குரோசணியுங் காந்தங்கூட்டி, முருகியதார்களிப்பாக்கு சீந்திற்றண்டு மோது கண்ணிச்சாறுடனே மொறுக்கிநன்றாய், உறுதியாய் நீரிலிட்டுயெட்டொன்றாக்கி யுடனுகத்திப்பிலிம்மற் பொடியுங்கொள்ள, திருகாதுசுரம்மகும்வயிறுபோகுந் தனிக்குளிகை கெந்தகத்தைச்சாற்றும்வாம்மே. (௫௰௨)

கெந்தகம்பச்சைநாபி கேருநீமிளகுகூதம்
வெந்தநேர்வாளந்தன்னை விஷமதுதள்ளிச்கூட்டி
பந்திபூசனிபருப்பு பொருந்தவேதானுங்கூட்டி
இந்தமாமுளுந்துதன்னை யிஞ்சியில்லாத்துறட்டே (௫௰௩)

வேறு.

உறட்டுங்குளிகைசுக்கிலிட்டு வோடுஞ்சுரங்களனைத்தினுக்கும்
இறுக்குஞ்சன்னிகள்பதின்மூன்று மெருமின்றிச்சாற்றிவிட

அறுக்கும்வயிற்றுநோயெல்லா மழுக்குற்றேதனுமிஞ்சிரசம்
குறுக்குமுந்திமலக்கூடு கோளைழயறுக்கும்விளக்கெண்ணெய் ( )

### பாஷாணக்குளிகைகுளிர்சுரத்துக்குமோரிற்கொடுக்க.

விளங்குந்துத்தம்நாலுடனே வெண்பாஷாணமூன்றாகும்
களங்கமற்றவாளப்ரண்டு காட்டுசாத்திரபேதியொன்று
பிளங்கம்மாருவிட்டரைத்துப் பேணிசகடுகுபோலுருட்டி
உளங்கள்குளிருஞ்சுரமனைத்து மோடியொளியுமோரிலிட்டே: ( )

மோராமத்துவிலாநாலு மூளிவெண்காரமஞ்சாகும்
பாராய்கெந்தகமாறுகும் பகருநாபியேழாகும்
கூராயிரதமெட்டுடனே கூட்டிச்சேர்த்துநிறைகொண்டு
வேராஞ்சித்திரவேர்ச்சாற்றில் விளங்கக்குன்றிமுத்தாமே (௫௫௬)

முத்தாமுண்ணடைதனையெடுத்து மோதுஞ்சுரத்திலிஞ்சியிடு
மத்தவலிக்கும்வலிகுன்மம் வெள்ளைபுள்ளிச்சாற்றிலிட
பித்தமிகுந்ததலைசுழற்றல் பேணிநொச்சிச்சாற்றிலிட
சுத்தவாதப்பிடிப்புக்குத் துலங்குநொச்சிச்சாறருந்தே. (௫௫௭)

### சந்தனபாஷாணக்குளிகை.

அருந்தும்வெள்ளைபாஷாண மானகழஞ்சுரண்டாகும்
பொருந்துஞ்சந்தனமுக்கழஞ்சு போதக்குழிக்கல்லதனிலிட்டு
வருந்திமுலைப்பால்விட்டாட்டி மறுகமூன்றுநாளரைத்து
திருந்தமிளகுவென்னீரு தீருப்வெண்ணைசுரமிருமல் (௫௫௮)

சுரமாந்துத்தம்பத்துடனே துலங்கும்பாஷாணநாலாகும்
வருமேயிதனையிலைகொண்டு மத்துமெருக்கஞ்சாறரைத்து
பருவமாகரண்டுநாள் பாங்காயரைத்துக்கடலைபோல்
சருவசுரமுமாவின்பால் தன்னிலருந்தச்சாந்தியமே. (௫௫௯)

சாதிலிங்கம்வெண்பாஷாணந் தானேயூமத்தஞ்சாற்றரைத்து
மேதமாகச்சாமமரை விளங்குமுளுந்துப்பிரமாணம்
போதவுருட்டிக்குளுந்தண்ணீர் பொருந்தக்குடிக்கவல்லீராய்
மாதேகுளிருஞ்சுரமாறு மன்னுவிருமாஸ்திரமிரதம். (௫௬௰)

இரசஞ்சுத்தியிருகழஞ்சு பேமத்தேசிப்பழச்சாற்றால்
திருதயாகநாளொன்று நிகழ்ந்தசத்திசாறனையும்

மரிதேசுக்குத்திப்பிலியு மதுக்குக்கழஞ்சுவகைகொண்டு
பருதுவாகவெலுமிச்சம் பழமுமிஞ்சிச்சாற்பகலே. (௬௪௧)

பிர்மாஸ்திரங்குளிர்ந்ததண்ணீரில்சுராங்கிஷம்.

பகலுமுதலாய்நாள்மூன்று பரிந்தேயளாத்துப்பயறளவாய்
எகலு மாகக்குளிகைசெய்து யிஞ்சிதேனிற்றுணிடவே
தொகலுஞ்சன்னிவாதமுடன் சொல்லுங்கைகால்குளிர்ந்தசுரம்
அகலுஞ்சன்னிவிஷமாறு மதிசாரமுமஞ்சியதே. (௬௪௨)

அஞ்சுமிஞ்சிச்சாற்றிலிட வாகுமாடாதோடையிலை
மிஞ்சும்பூசனிகொத்தமல்லி மிகுந்தகுமரிசாறுசுக்கு
விஞ்சும்பற்பாடகமிலையும் விளங்கச்சமனாய்த்தான்காய்ச்சி
அஞ்சாதோருண்டைதானிடவே யாகுஞ்சுரங்கிஷமதுசாதி ()

சாதிலிங்கம்பெருங்காயந் தாமேனநாபியெலிகாரம்
ஏதமிளகுசமனாக யென்றும்வாளமுக்கழஞ்சு
போதக்கற்றாழஞ்சாற்றிலுண்டை பொருந்தமிளகுப்பிரமாணம்
மாதேயிஞ்சியிலைவயன்றி வருந்துஞ்சருப்புக்கூட்டியுண்ணே ()

உண்ணுஞ்சுரங்கள்தான்றீரு மோடுமதிசாரமொழிந்துவிடும்
பண்ணுஞ்சீதசுரமாறும் பரதாபசுரங்கள்பயந்தோடும்
எண்ணும்வாதசுரமேகு மேகபித்தசுரந்தீரும்
திண்ணமிதுவேயனுபானஞ்செய்யக்குளிர்சுரந்தீர்ந்திடுமே ()

கிராணிக்குச்சாதிக்காய்மாத்திரை.

தீர்ந்திடுஞ்சாதிக்காய்குடைந்து திறமாமுருங்கைப்பிசினியிட்டு
சேர்ந்திடப்பின்னுங்காய்குடைந்து சீரகநிறையத்தானமுக்கி
போந்தவாழைத்தண்டுரித்துப் பொருந்தநாராற்றூல்சுற்றி
வார்ந்தமாகப்புடங்களிட்டு மறுத்தும்வாழைத்தண்டுதான். ()

வாழைத்தண்டுமருந்தோடமகிழச்சுட்டுத்தானரைத்து
மீளச்சுண்டைக்காயளவு மிகுத்தகியாழஞ்சிறுகீரை
தாளவெட்பூலாவேரிலையுந் தக்ககியாழத்தோருண்டை
ஆழவலைக்குஞ்சுரங்களெல்லா மதிரிட்டோடுமதுகேளே ()

கிராணிமாத்திரை.

கெந்தகமிரதமதிவிடையங் கிளர்ந்தகடுக்காய்மூத்தமுடன்
குந்துகற்கடகசிங்கியுடன் கூறுஞ்சவர்க்காரமில்வம்பிசின்

முந்துவசம்புசமனுக முனிந்தகஞ்சாயிலைச்சாற்றால்
அந்தம்பெறவேதானரைத்து அப்பால்சரிசால்சாறொருநாள் ()

ஒருநாளரைத்தனுமிச்ச முகந்தசாற்றிலொருநாளாம்
வருமேதேற்றான்விரைபோல மகிழவுலர்த்தியனுபானம்
மருகும்வாய்வுந்தனிலிட மங்கும்பித்தமெருமைத்தயிர்
தருமேசேட்டுமத்தன்னிலிடத் தங்குந்திப்பிலிமேற்பொடியே()

பொடியாமிந்துதிரிகடுகு புகழும்விடையநாயியபின்
விடியுங்கலமதஞ்சீரகமு மேவுமோதகம்வெண்காரம்
துடியாங்கெந்தகமுமத்து துலங்குமலிங்கமாங்கொட்டை
படியாம்புளியவிரைத்தோலும் பகருங்கூடைசநீறுமே. (௯௰)

நீறுஞ்சந்தனஞ்சாதிக்காய் நேரும்வசம்புகிராம்புடனே
போராங்காஞ்சிசொறிவாசி பின்னுநொச்சியிஞ்சிகஞ்சா
நேராய்சாத்திரக்குண்டியுண்டை நேர்ந்தசர்க்கரைதயிர்தேனில்
கூறுயருந்தக்கிராணிகடு கூட்டுவிசுளிகுடிபோகும் (௯௧)

போகுங்குறும்பைப்பாண்டுடனே புகழும்பாளையப்படியே
ஆகுங்கெந்தகமந்திடையே ஆறுங்கழஞ்சுசுக்காகும்
வாகுமுத்தமந்திடையே வளர்காரீயமாறுகும்
பாகமவாரைபலிதண்டு பாளைச்சாற்றிற்கிராணிக்கிடே (௯௨)

இடுநீயிரதநாபிகெந்தியியன்றகருவாய்த்தோல்வசம்பு
திடமாபிவைவொன்றொருகழஞ்சு தீர்ந்தயிளகுவிருகழஞ்சு
அடமாதளைப்பழச்சாற்றரைத்து அன்பாயுளுந்துப்பிரமாணம்
படுபாவிநோய்களனைத்திலுக்கும் பறக்கவடிக்குமிதுவடவாம் ()

இராமபாணக்காசத்துக்குமாத்திரை,

அடவாம்வாதசுரத்துக்கு ஆகுநொச்சிச்சாற்றிலிட
அடவாம்பித்தங்கொத்தமல்லி யானசன்னிசுரத்துக்கு
அடவாந்திரிகடுகிந்துப்பு அந்தப்பொடியிலரைத்துண்ண
அடவாங்கண்ணிநோய்கட்கு மாகுமெருக்கன்பழுப்புச்சாற் ()

சாறுநீலகாசமுடன் சாற்றுமாவினீராகும்
திராமெரிப்புக்காமாலை தீர்க்கமாவின்பாலாகும்
பாராயுதிரவியாதிகள்போம் பாலாஞ்சீனிசந்தனமாம்
சேராய்வாதம்வாயுவுடன் தீருமாமணக்கெண்ணெயிடே (௯௩)

இடுவாய்நசியந்தலைவலிக்கு யேகுமகத்திச்சாற்பகரும்
தொடும்மதிரிபலைதிரிகடுகு தூளாஞ்சேத்துமந்தான்வாதம்
விடும்மமூலசெந்தகத்லைத விளங்குங்கழஞ்சுபொடியதனில்
கொடுநீகிராணிதான்றீரக் கொள்வாய்வாழைப்பழந்தனிலே ( )

அதனமானவிசுளிக்கு ஆகுமிளகுசூரணமாம்
விதனமானவ்பிரறும்நாய் விளங்தம்வென்றுளித்தயிலமதாம்
சுதனமானசீதசுரம் தொடர்ந்தபிஞ்சிச்தணுகும்
பதனமானமாத்திரையாம் பறகுக்ராமடர்ணமிதே (௫௫௭)

இதமாயிரதமாட்டியுட னேகுங்செந்திதிரிகடுகு
பதமாந்திரிபலைவெண்காரம் பருகுந்துருசுதுத்தமுடன்
நிதமாந்தாரமோதகமு மநிசமூம்சமனும்பழச்சாற்றில்
மிதமேயொருநாள் தானரைத்துவிலங்கக்குழிக்கலதனில்வையே.

வைத்தமருந்துயிதனோடே வழங்குந்தாம்பரபற்பமதை
அத்தோடிதையுஞ்சரிகொண்டு ஆனதேசிப்பழச்சாற்றில்
மற்றநாளுந்தானரைத்து மருவமூன்றுநாள்வெய்யில்
உற்றபுசத்திற்றான்வைத்து வுகந்தகடலையளவிஞ்சி (௫௫௯)

இஞ்சிச்சாற்றிற்றானிடவே யியங்கும்வியாதிகூறக்கேள்
வஞ்சக்குன்மகாசமுடன் மருவும்பித்தசயகாசு
மிஞ்சப்பாண்டுகாமாலை மிகுத்தகிராணிபருங்குன்மம்
அஞ்சியோடுமிதுவெல்லா யலைக்கும்வியாதிபலவாய்வும் (௫௬௰)

வாய்வுபற்றும்பலநோயு மருவும்வாதமெண்பதுடன்
ஆயுங்குழலாய்தீர்ந்திடுங் காணும் ஆனபத்தியம்பகரக்கேள்
நேயம்பித்தமதனுக்கு நெய்பாலாவின்பிஞ்சுடனே
காயமென்றும்பூசனிக்காய்கருதுமென்னுமிலைவகூட்டே (௫௬௧)

ஆனந்தலைவரவன்சுர அதிசாரத்துக்கு

கூட்டேயுப்புப்புளிப்பதுதான் குலாவும்பித்தர்க்காகாது
வாட்டமில்லாச்சயரோகம்வரனுங்கைப்புவிடத்தீரும்
தீட்டும்பசுவினெய்மழஞ்சு திடமாமுருங்கைபுடலங்காய்
ஆட்டுவற்றல்தானுகு மானூர்பீர்க்கங்காயாகும் (௫௬௨)

சாயாம்பகரும்வாழைக்காய் காடையுடனேமானிறைச்சி
ஒயாதுலர்த்தியுண்டுவிடு வுகந்தபிரண்டைச்சிறுபயறு

தாயாமுள்ளங்கிப்பசுவின்பால் தாக்குங்கரணைதானுகும்
பாயுஞ்சம்பாவரிசியுண்ணப் பறக்கும்வியாதிபதினைய விட்டே ()

விட்டேசாதிக்காய்லிங்கம் விளங்குங்கிராம்புசுக்குடனே
கட்டுநாபிபொன்மத்தை கதித்தவிளையுந்திப்பிலியும்
திட்டமுத்தக்காசுடனேசேரவோர்நிறைதான்கொண்டு
தொட்டுமிஞ்சிச்சாறதுதான்துலங்குமுமத்தையிலைச்சாறே ()

இச்சாறென்றுமும்மூன்றுவியன்றநாளுந்தானரைத்து
வைச்சகுன்றிப்பிரமாணமருவுமிஞ்சிச்சாற்றிலிட
அச்சமில்லாச்சேத்துமமுமானகுலைசுரமனைத்தும்
இச்சகமாயின்றன்னிலிடவியங்கும்வியாதியறுஞ்சுரமே. (௫௬௫)

நவக்கிரகம்-மனோகரம் - பஞ்சசயம்-பஞ்சகுன்மத்துக்கு.

சுரமதிசாரஞ்சூலையுடன் சுக்கிலமாகுமிந்திரியம்
இரவிக்குரியகிராணிக்குயிலுப்பைப்பட்டைநாற்கழஞ்சு
அரவங்குழலாய்சுக்குரண்டுஆனவிருநாழிநீருழக்காய்
பரவுங்கியாழங்குளிகையிடப்பறக்குங்கிராணிவகைநெல்லி (௫௬௬)

நெல்லிமுள்ளிக்கியாழத்தில்நிகழுந்தயிருமதனுலும்
வல்லதிசாரசுரத்துக்குமருவுங்குளிகைதானிடவே
நல்லாய்க்கியாழநாம்சொன்னேநயந்தவியாதிக்கனுபானம்
எல்லாந்தீரும்வச்சிரமாமேதுமானந்தவைரவனே (௫௬௭)

வயிரமானவெண்காரம்வளருநாபிரசமிளகு
சயிருஞ்சுக்குதிப்பிலியுங்கனத்தலோகசெந்தூரம்
பயிராமுமத்தைவிளையுடனேபாங்காய்ரண்டும்பங்கிட்டு
உயருங்கெந்தகமொருபங்குஊமத்தஞ்சாற்றிலரைக்குன்றி (௫௬௮)

குன்றிபோலவுண்டையதுகொம்புத்தேனிற்கவளமிட
நன்றுஞ்சுவாசகாசமுடன்நயந்தமந்தாரஞ்சேட்டுமமும்
என்றேயறியபயித்தியமுமியன்றவாதமதுவெல்லாம்
சென்றதிசாரகிராணியுடன்தீர்க்குங்குளிகைநவக்கிரகம் (௫௬௯)

கிரகதாம்பரமெட்டுடனேகெந்திரண்டுரசமொன்று
அரகமனேசிலைமூன்றுகுஞ்சொல்லரிதாரநாலாகும்

விரகநாபிரண்டுடனேமேவியதனைநிறைகொண்டு
உரகங்லகயான்சாறுகும்மோங்குநொச்சிச்சாறதனால்; (௯௭௰)

நாலுநாளாய்த்தானரைக்கநன்றாய்க்குன்றிப்பிரமாணம்
மேலாந்திரிகடுபொடியுடனே விளங்குந்தேனிற்றுனிடவே
பாலாமகோதரம்பஞ்சசயப்பருத்தகவிலைசபஞ்சகுன்மம்
சேலாம்பறதிவினைமாறுஞ்சிதழுஞ்சூதராட்சதகுளிகை. (௯௭௧)

சகலரோகத்துக்குதுத்தமாத்திரை.

குளிகையிரதங்கெந்தகமுங்கூட்டியிருவிவெண்காரம்
அளவாநாபியரிதாரமானதிரிபலைதிரிகடுகு
புளவாந்துத்தம்பெருங்காயம்போற்றும்விடையஞ்சாதிக்காய்
தளமாங்கிராம்புபெட்டிவிலாதாக்குங்காரநந்தச்சாரம் (௯௭௨)

சாரத்துருசுவாளமுடன்சமனுபிதனைச்சரிகொண்டு
சோரவிடித்துத்தூளாக்கித்துலங்கச்சீலைவடிகொண்டு
தீரக்கற்றாழஞ்சாறொருநாள்திகைக்கக்கையானுள்பத்து
மீரப்பழுத்துமிளகளவுமேவியதனைநிழலுலர்த்தே. (௯௭௩)

எழுவகைக்குளிகை

உலர்த்துங்குளிகையோமப்பொடியுடனுஞ் சீதக்கழிச்சலுக்கு
குலர்த்துநாபிபொசித்தாக்கால்கொள்ளேயாமணக்கெண்ணெதனி
நலத்துச்சர்ப்பம்வேப்பெண்ணெநின்றவாய்வுக்கிஞ் சிரசம் [ல்
பெலத்தசொரியுஞ்சிரக்குக்குப்பின்னும்பசுவினெய்யேழே, ( )

எழுநாட்கொள்ளச்சொறிபறங்கியிலைகையாந்தகரைச்சாற்
வாழும்பிரமியமெட்டுக்குப் வளருங்குமிஞ்சாணி ச்சாற்றில்
தாழும்பித்தஞ்சீனிதனில்தாக்கப்போகுமதுவல்லால்
மீளுமேகமனைத்திலுக்கும்வெண்ணெயாவினெய்தயிரோ (௯௭௫)

தயிராம்போடுபசுவின்மோர்தாங்காப்பித்தம்வெல்லமுடன்
அயிராமேழநாட்கொள்ளவாகாதிருமலகீழ்நெல்லி
மூயிராஞ்சீனம்பெருங்காயமூற்றும்வசுவாசிவசம்புடனே
துயிராம்பாண்டுகாக்கணவேர்துலங்கக்குடிக்கச்சுகமாமே. (௯௭௬

சுகமாமூத்திரக்கிரிச்சிக்குத்துலங்குங்கோமயமொருமோதம்
தகமாமருந்தயலாயாண்டுசயமுங்குன்மந்தான்தீரும்

அகமாபித்தந்தான்கழியவாமணக்கெண்ணெயதிற்றீரும்
பகமாமாதாக்கினிக்குப்பகருங்கடுக்காயிளநீரே. (௬௱௭)

நீராஞ்சருவவிஷம்போகநிச்சயமாணிநெய்யாகும்
பாராய்கண்டசொரிசிறங்குபகருமாவின்பாலாகும்
தீராப்பித்தகற்பூராஞ்சேருங்காலசுவாசத்துக்கு [ற்·()
கூராய்திப்பிலிப்பொடியாகுங் கொள்ளுமூஷிணஞ்சண்பகச்சா

சார்தனைசூரிவருவதுமுன்தாக்குங்குளிகைதேனிலிட
வார்தம்பலபலவியாதிகட்குவையேவெற்றிலைச்சாற்றனில்
போர்ததலையின்வலிதனக்குப்புகட்டுமெணித்தக்காளிச்சாற்
சோர்தசூலைதான்போகத்தேடுமாவினெய்யாமே (௬௱௯)

ஆமேகுன்மமிந்துப்புஆகாவாய்வுவாதசன்னி
போமேயூமத்திலைச்சாறுபொல்லாவிஷம்போநறுந்தாழி
தாமேயிரழியமாவின்பால்தாக்குங்கண்ணோயதுவாகும்
காமேமூலவியாதிபோங்கரணைபிரண்டைபொடியிடவே. (௬௱௰)

இடவேசரக்கினிடாக்கினிபோ லேகுஞ்சோற்றிற்றுனிடவே
தொடுமேவாய்வுமூதிரனிலை துலங்கும்வாய்வுபலமனைத்தும்
விடுமேநொச்சிச்சாற்றிலிட விளங்குமந்திரவாய்வதுவாம்
கடுகுத்திபனமாமோதங் கழறுமுள்ளங்கிவாய்தாற்றம் (௬௱௰௧)

நாற்றமிருமலிளையோம் நன்றுச்சாஸ்திரபேதியினில்
கூற்றனுதிரந்தான்சாயற் கொல்லுஞ்சன்னிபசுவினெய்
ஏற்றமானவாய்வுக்கு மேகுஞ்சயத்தின்வாய்வுக்கு
நீற்றஞ்சிறுகீரைச்சாற்றருந்த நீயனுபானமானதுகேள். (௬௱௰௨)

ஆனவாவின்பால்நெய்யா மாகாப்புளிப்புகைப்புவிடு
போனகாசசுவாசமுடன் பொருந்துங்கரந்தைச்சாறுகும்
ஏனம்பாங்கிகாற்பிடிப்பு எடுக்குஞ்சூலைபெரும்பாடு
தானுமாவின்சாறுகஞ் சந்தனநீருந்தானுகும் (௬௱௰௩)

ஆகுஞ்சருவவியாதிகட்கு வானபசுவினெய்மதினும்
போகுங்கொத்தமல்லியுடன் பொருந்துமாங்காய் கூட்டியுண்ணு
வேகஞ்சண்பகப்பட்டைச்சாற் விளங்குமாத்தப்பிரமியம்போம்
தாகம்பார்வைகுறைந்திருந்தால் தாக்குமெள்ளுத்தோல்போக்கி

போக்குங்காதுசீய்வடிந்தால் புகட்டுசிறுநீர்குளிகையுடன்
தாக்குகண்ணின்படலத்துக்குத் தாங்குகதலிச்சாற்றிலங்கு
ஏக்குலைவசூரிதான்வந்தா லேலகுந்திரிபலைச்சாற்றிலிட
ஆக்குங்குளிகையனைத்தினுக்கு மடவாமெழுவா குளிகையிதே ()

முருக்கிலைகோடாசுளிமாத்திரை.

இதுவாமலிங்கம்வெண்கார மேவுங்கெந்திநாபியுடன்
அதுவேதிரிபலைதிரிகடுகு ஆகப்பதின்கழஞ்சடவாக
பொதுவாந்தாரம்பதின்கழஞ்சு புகழும்வாளம்பதின்கழஞ்சு
மெதுவாமருந்துபன்னிரண்டு விளங்குங்கழஞ்சுமுப்பதும்வ ()

முப்பதுகழஞ்சுமுடவாக முருக்கிலைபூவரசினிலைச்சாற்றில்
தப்பாதோரொருநாட்சாமந் தானேஐந்துநாளரைத்து
மிப்பார்புகழுமிளகளவாம் மீறுங்குளிகைநிழலுலர்த்தி
ஒப்பாம்வியாதிக்கனுபான முறைப்போமிஞ்சிச்சாற்றிலிடே ()

இஞ்சிச்சாற்றிற்சீதசுர மியன்றதாபசுரம்பசும்பால்
மிஞ்சும்வெள்ளுள்ளித்தயிலமதில் மேவும்பழஞ்சுரமதுக்காகும்
வஞ்சசயத்துக்காய்ச்சலுக்கு மகிழுஞ்சுக்குவிடை நீராம்
அஞ்சாவிஷமாஞ்சுரத்துக்கு ஆகுமுலைப்பால்சர்க்கரையே(௫௮

சர்க்கரைப்பசும்பால்காமாலை தானேபாம்புகடித்தாக்கால்
மிக்கதேசிப்பழச்சாற்றில் விரையவுரைத்துக்கலிக்கமிடு
தக்கதிரிபுரச்சாறரைத்து தானேதேட்கொட்டுவாயிலிடு
ஒக்குமாம்பட்டைச்சாற்றிலிடவொடுக்குங்கிராணியது கொள்ளே

கொள்ளுத்தண்ணீர்தாணிடவே கூசாதோடும்வாதமெல்லா
மெள்ளபத்தியம்பாற்சோறு மிளகுநீருந்தானாகும்
உள்ளவாதக்காய்ச்சலுக்கு வுகந்தகஞ்சிதானாகும்
கொள்ளுங்கிராணிதயிருடனே கொண்டேசோறும்வெந்நீராம்

வென்னீர்நீக்கிச்சாதிக்காய் விளங்கநறுக்கித்தான்வெதுப்பி
தின்னீர்பொடியைத்தேன்கலந்துதியக்கும்வயிற்றில்நோயதுமே
பின்னீர்வெள்ளைக்கழிச்சலுக்குப் பெருத்தகளர்ச்சிப்பொடியுட
னே, மன்னீர்வெண்ணைதான்கலந்து மதித்துத்தின்னமாறிடுமே()

மாறுங்கறுத்தசீரகத்தை வாகாய்க்கியாழந்தேன்கூட்டி
கூறுயிரத்தக்கிராணிக்கு கொடுக்கத்தீருமதுவல்லால்

எருந்தாபசுரத்துக்கு யிடுகீழ்நெல்லிச்சாறதனில்
மாறுநாலாமுறைக்காய்ச்சல்வாங்குங்கையார்ந்தகலாச்சாற் (௫௧௨

சாருங்காலாச்சாறதனில் தாக்கவசீரணந்தான்போகும்
பாராய்த்தயிர்வடிதண்ணீரிற் பருத்தவயிற்றுக்கழிச்சல்போம்
தீராசெவ்வட்டைகடிதனக்குத் தேசிப்பழச்சாற்மேற்பூசி
நோராங்கற்றாழஞ்சாறதனில்நெகிழப்பூசிப்பாள்முழுங்கு (௫௧௩)

முழுங்கழுத்திரக்கிறிச்சிமஞ்சள் முனிந்தசாற்றில்வெண்காரம்
பிளங்கப்பொரித்துக்குளிகையுடன் பேணியுண்ணவதுதீரும்
களங்கமானவிருமலறுங் காட்டுத்துளசிச்சாற்றிலிட
விளங்குப்பித்தமதுதனக்கு மீறுழுமத்தைச்சார்நசியம் (௫௧௪)

நசியம்பண்ணவெறிபித்தம் நன்றாழுமத்தையிலைச்சார்றில்
இசையவெள்ளாட்டுப்பாலதனி லிடுமோர்குளிகைதலைதனக்கு
அசையாம்வெள்ளாட்டுப்பாலரைத்து அதுவுந்தலையிறப்பிடவே
நிசமாம்பிரமிகியாழத்தில் நிச்சயபித்தந்தீர்ந்திடுமே (௫௧௫)

தீர்ந்திடும்வேப்பிலைச்சாறதனால் தெளியுங்குட்டமனைத்தினுக்கும்
ஆர்ந்திடுமெருக்கின்பாலதனா லானசீலைதானூட்டி
வார்ந்தகுளிகைதானரைத்து மடித்துத்திரியுந்தானுருட்டி
போர்ந்தநெருப்பிற்றன்கொளுத்திப் புகையையநாசிதனிலேற்றே

வேறு.

ஏற்றியதோர்புகையதனை நாசிக்கேற்ற எழுந்தோடுந்தலை நோய்வுயெங்கேயென்று, கோற்றிடுமே கோவையிலைச் சாற்றினாலே கூறுபடக்கஞ்சனமாய் நோய்கடீரும்,தேற்றியதோர்சலகல நோய்கள்தீரும்பாருதிறமானசிலவிஷமும்தீரும்தீரும், போற்றியதோர்மருந்திட்டுப் போகவுண்ணு புகழாக வின்னமொரு மருந்துபுகலக்கேளே. (௫௧௭)

வேறு.

கேளுந்திப்பிலிதேனுடனே கேட்குமிக்கல்சத்திபல
வாளுந்தேள்கள்கொட்டினுக்கால் மதித்துயிஞ்சிச்சாற்றிலிடு
தாழுமகோதரஞ்சிறுநீரில் தாக்குமணித்தக்காளிச்சாற்
றிழும்பூரநட்டுவக்காலி யதுவுமிஞ்சிச்சாற்நசியம் (௫௧௮)

நகையாமகோதரமணைத்தக்காளி நாட்டும்வயிற்றிற்பூசவிடும்
வகையாங்கண்ணோய்க்கேசிப்பழ மனிதர் முலைப்பாலஞ்சனமாம்
மகையாதிருமல்தான்றீரு மானகொள்ளுந்திரிபலையும்
சைகொன்றில்லாசூரணத்தில் பேணிக்குளிகையொடித் துண்ணே

உண்ணும்வாய்வுமணலிச்சா றுரைத்துக்குளிகைதானுண்ண
திண்ணம்வாய்வுடன்றீருந் தெளியாக்குன்மம்பலதுக்கம்
நண்ணுநொச்சிச்சாற்றிலிடு நாட்டுங்கண்ணீர்சூட்டுக்கு
எண்ணுமெள்ளிலைச்சாற்றிலிட வேகஞ்சூடுதாங்களையும் (சா)

கரைக்குமமுக்குருச்சூரணத்திற் கலந்துகுளிகைவெந்நீரும்
உரைத்துக்குடிக்கச்சந்து நோயுடனேவாதம்பலதீரும்
இரைக்கும்வயிற்றுவாய்வுக்குத் தீரும்வீழியிலைச்சாற்றில்
குறித்துச்சொன்னேம்பலதீருங் குணமாமின்னந்திரிபலையே ()

திரிபலைசூரணம்வெந்நீரிற் றிறக்கலைவத்துவுண்டையிட
குறியாமுப்பிசந்தான்போகுங் கொண்டேதாதுவிர்த்திக்கும்
நிறையாந்தழுதாழைவெண்குன்றி நிச்சயஞ்சாற்றிற்றுணிடவே
குறியாஞ்சயரோகந்தனக்குக் கொண்டேபுசிக்கத்தீர்ந்திடுமே. ()

தீர்ந்திடுமேமாமம்வெந்நீருந் தெளியுங்காசுக்கட்டியுடன்
பாந்தமாகக்கலக்கியுண்ணப் பறக்குஞ்சயகாசநோயெல்லாம்
வார்ந்திடுவயிற்றினோய்கட்கு மகிழமாவின்றயிரிலிட [ய்()
ஏந்துங்கிராணிக்காவின்மோரியன்றவிரோசனம்விளக்கெண்ணெ

## சுரக்குளிகை.

எண்ணும்பசுவினெய்யிலிட விருக்காதோடும்வாயுவெல்லாம்
நண்ணும்பிரமியம்வெள்ளாட்டுப்பால்நாட்டமுடம்பெரிவுக்கு
உண்ணும்பச்சைசக்கழுநீரி லுரைத்துக்குடிக்கத்தான்றீரும்
திண்ணம்நரைதிரைமாறலுக்குத் தீரும்ஆட்டுப்பாலாகும்(சாச)

---

ஆகுங்கற்சுண்ணந்தெளிப்பள மலையும்பல்லுந்தானிறுக்கும்
போகுஞ்சன்னியூமத்திலைச்சாற் புகட்டுதீப்பட்டபுண்ணுக்கு
ஏகும்வெல்லத்துடன்கொள்ள விதமாம்வல்லாரைச்சாறதனால்
வாகுபெறவேயனுபானம் மருவிக்குடிக்கத்தீர்ந்திடுமே (சா௫

திருஞ்சூதரோகணியுஞ் சிலையோரிடையுமொன்றாக
வாருந்தான்றிரிகடுகு வகைக்குரண்டியிடையாகும்
சேரும்வாளஞ்சுத்தியிடை சேர்த்துமூன்றுகழஞ்சாக
பாரும்பாகலிலைச்சாற்றாற் பருத்திவிணாபோற்றானுருட்டே ()

உருட்டுங்குளிகைசீதசுர மோமமிஞ்சிச்சாற்றிலிட
திருட்டுப்பித்தந்தீருதற்குத் தெளியாத்தேசிப்பழச்சாற்றில்
விரட்டுவாதந்தான்றீரவெள்ளெருச்சிச்சாற்றிலிடவாகும்
பிரட்டுகுன்மமாவின்பால் பேசாதோடும்வாய்வெல்லாம்! (௨௱௭)

வெள்வெருக்குகஸ்தூரியுண்டை.

எல்லாந்திரும்லிங்கமுட னேகுநாபிவெண்காரம்
நல்லதிப்பிலியெவச்சார நாட்டுமிளகுகாந்தம்கெந்தி
சொல்லுதிமிலைதற்சமனுய்த் துலங்கவிஞ்சிச்சாறரைத்து
மெல்லக்குன்றிப்பிரமாணம் விளங்குமிஞ்சிமறுளாறுமே. (௨௱௮)

அறுமேகஸ்தூரிபணவிடையைந்து ஆகுமரோசினைபண்மணையு-
ம், பெறுமேகிராம்பு மரைப்பணமும்பின்னுங்குங்குமமப்படி.
இறுகஞ்சாதிப்பத்திரியு மிதுவும்பணவிடையனையாகும் [ர்ய
குறுகுங்காட்டுமிருகாத்தங் குறையாதந்தவெடைசேர் (௨௱௯)

வேறு.

சேருநீவெள்ளறுகு படிச்சார்கூட்டி தெளிவாக மேனியி
ன்சாற்றின்னுப்பாலை, வாருநீபொடுதலையுங் கரிசலாங்கண்ணி வ
லகையானைசரந்தைகோட்டான்சாறுங்கூட்டி, பேரானவேழுவகை
ச்சாறுங்கூட்டி பிசகாம லரைத்திடுவா யேழுநாளும், கூறாகத்தா
னரைத்துக்கடுகுபோலக் குவியவேநிழலுலர்த்தி வைத்துக்கொ
ள்ளே. (௨௱௰)

தோஷாமூர்தம்வாய்வு சன்னிவிஷத்துக்கு.

கொள்ளுவாய் குளிகைதனைப்பதனம்பண்ணிக் கூறறிந்து
கொடுத்திடுவாய்கூற்றன்போல, தள்ளாதசன்னி வலகையனைத்தினு
க்கும் தாங்காதசுரங்குளிர்காய்ச்சலெல்லாம், மெள்ளவேதிரிதோ
ஷிபிணதோஷம் போகவிளங்கவேயனைத்தினுக்கும்விருப்பமாக,
உள்ளபடிதேனிலேகுளிகையொன்றுவுரைத்துநீகொடுத்திடவொ
ழிந்துபோமே. (௨௱௰௧)

ஒளிவானமனோசிலைசலாசத்து வுதவுகின்றகுங்கிலியகர்ப்பூர ங்கூட்டி, தெளிவானயிருவிகெந்திதாளந்தாரந் தெகட்டும்படிகா ரமித்துருசுகூட்டி, வளியாகவகைமொன்றுவிராகனென்று வா ளஞ்சுபலமொன்று வகையாய்க்கூட்டி, களியாக வரைத்திடுவா ய்சாமமட்டுங் கறுத்தநிறக்கம்பிளிபோற்காணும்பாரே (சாயஉ)

பார்த்துநீவெல்லமொருபலமும்போடு பாங்கானகொட்ட வச்சிக்கரியும்பலமாகும், சேர்த்திடுவாய்தேங்காய்ப்பால்விட்டுஆ ட்டி சிமிழ்மாட்டுக்கொம்பதனி லடைத்துக்கொண்டு, கூத்தறிந் துவெற்றிலையில்பயறதாகக் கொடுத்திடவெண்பதுவாதம் வாய்வு தீரும், வீற்றிருந்தசன்னிபதின்மூன்றுந்தீரும் விஷமெல்லாம்ப றந்துவிடுமேன்மைகாணே. (சாயங)

இரசலோகசெந்தூரம்விஷபாகத்துக்கு:

காணவேவெள்ளையாஞ்சீலையூட்டிக்கயிறுக்கித்திரியுருட்டிப் புகையுங்காட்டி, தோணவே பலவிஷமுஞ் சில் விஷங்களெல் லாஞ் சுருக்கானபுகைகாணவோடிப்போகும், பூணவே காமாலை பாண்டுதீரும் புகழானகுதகவாய்வுபின்னிட்டோடும், வேணதொ ருவியாதியெல்லாம் விட்டேபோகும் விதமானதினமுறையைவி ளைந்துசெய்யே: (சாயச)

செய்யவேயரப்பொடிபன்னீர்கழஞ்சுசெயமானபலமொ ன்றுயிரதங்கூட்டி, பையவேகெந்திதான் கழஞ்சியேழு பருத்த தொருவெண்காரம்நாலுகழஞ்சு, துய்யவே குமரிச்சாற்நாலுசா மந் துலங்கவேயரைத்திடுவாய் சாந்துபோல, ஐயமுடன்கம்பிளி போல்நிறமதாகுமதையெடுத்து அடைதட்டி சட்டிவையே ()

வேறு.

வைக்குஞ்சட்டியதற்குள்ளே மருவிக்குமரிச்சோற்றையிட்டு மெய்க்கவதன்மேலடையைவைத்து மேவிப்பின்னுஞ்சோறுவை த்து, தக்கசட்டியுடனேகொண்டு தானேசீலைமண்செய்து ஒக்கவடுப்பினுலுநா ளுநாக்கவெரிக்கச்செந்தூரமதே (சாயகூ)

வேறு:

செந்தூரம்பணவிடையுந் தேனிற்கொண்டால் திருநோய் சொல்லுகிறேஞ்செப்பக்கேளு, வந்ததொருவிஷபாக சுரங்கடீ

ரு மகத்தானமேல்வீக்கம் வாடிப்போகும், எந்தெந்த பயித்திய
முஞ்சோகைதீரும் மிதமானகாமாலையிடறிப்போகும், உந்தியுள்
ளமம்காதரமும்பாண்டுந் தீகமுருந்திடவேயின்னவெள்ளையுள்ளி
கேளே. (சாயன)

வேறு.

வெள்ளையுள்ளிதயிலமதில் மிகுத்தசெந்தூரம்பணவிடைகொள்
உள்ள அகுவைமிலிகையு முகந்தநீருமூவைநீராமை
மெள்ளசத்திகுன்மமுடன் மிகுத்தகுன்மமெரிகுன்மங்
கொள்ளுநட்வியாதிதான்றீருங் குறித்துயிதனைக்கொள்வீரே ()

லோகசெந்தூரம்.

ஈரவெங்காயம்வெள்ளிரிக்கா யிலைசந்ததன்னீர்முக்கழஞ்சு
பாராய் செந்தூரம்பணவிடைகொள் பரிந்தசலதையுநீரடைட்பு
மாரத்திருங்கல்லடைப்பன் மதுக்குமிந்தவனுபானம்
தீரச்சொன்னேஞ்சம்போகஞ் செய்யுங்குணங்களிதுபகரே ()

பகராயரப்பொடிகழஞ்சுபத்துபன்னுமேதினப்பொடிபத்து
மிகராய்க்காந்தம்பத்துடனே விளங்குமிரதமிரண்டனையாம்
தகருங்கெந்தகந்தானைந்து தகர்த்துயிவைகள்பொடிசெய்து
புகருமனைவாசிசட்டியிட்டுப் பொருந்துஞ்சட்டிமேல்மூட ()

மூடியஞ்சுசீலைமண்ணு முடுகியெட்டுச்சாமமெரி
நீடுங்காமாலை பெருவயிறு நிகழ்ந்தசோகைசலக்கழிச்சல்
வாடுமீளையிருமலுக்கு மகிழ்ந்துதேனிற்பணவிடைகொள்
நாடும்வியாதியிவையெல்லாம் நடுங்கியோடுநலமறியே (சாஉக)

அரிதாரச்செந்தூரம்

அரிதாரசுத்திமுக்கழஞ்சு ஆனகொன்றை யிலைமேலே, நெரிதா
னயெண்ணைதனைத்தடவிநேர்ந்தவரிதாரமிலையில்வைத்து, குரிதா
ஞ்சட்டிதன்னில்வைத்துக் கொண்டோ சீலைமண்செய்து, பரி
வாய்பெறத்தான்வைத்துப்பின்பண்பாய்த்தீயெரியோர்விறகே.

ஒருநாழிகைதானெரித்தபின்பு வுகந்தகெந்தநாற்றமதாய்
வருமேயப்பதானெடுத்து மழவாற்றிப்பொடியாக்கி

தருமேசங்கம்வேர்ப்பட்டை தானேபொடியாயினழத்தூத
திருவேரனையாய்ச்சாற்றினிலேலிருந்தவெற்றிலைச்சாற்றில்வையே

வைத்தவெற்றிலைச்சாறுடனேமருவுஞ்செந்தூரம்பணவிடைகொ
இத்தனையீளையிருமலுட னியல்றமந்தாரகாசமுடன் [ள்
உத்தக்காய்ச்சுவாசமுட னுகந்ததாலழவிப்புருதி
இத்தனைவகையுந்தீருமென்று இயலாயகத்தியர்தாமுரைத்தார் ()

உரைத்துளமார்ந்தகோழைபல வுகந்தவிப்புருதிரண்டாகு
மரைத்தயீளைமூசைக்கு மன துயிராப்புசயமைந்தே
இரைத்தசேத்துமமேகமொன்று யிதுவும்பக்கமந்தாரம்
கரைக்கும்பொருமைதிரட்சியுடன் காணுஞ்சலமும்ரத்தசயம் ()

சயமாம்பத்துவகைதனக்குந் தானேபிரமியமுள்ளதெல்லாம்
நயமேசெய்யுருந்துகொண்டால்நாரணன்பாதம்மிகப்போற்றி
பயமேயுற்றுமிகத்திரிவார் பாதஞ்சுமக்குமாருதிதான்
அயமேபாரில்மிகவுலகுக் கனுமானந்தமருந்திதுவே (சஉசு)

இதுவாம்பத்தியம்பெரியவிரா லேல்குஞ்சுறவுநெய்த்தொலியு
மெதுவாமிறைச்சிமாங்கிஷமு மீறமுடும்புகாடைமுதல்
அதுவாங்கோழிமுட்டையுட னுகுமுருங்கைத்தூதுவளை [ம்.()
பொதுவாமுள்ளிகொடுக்கையுடன் புகருமுள்ளான்கூட்டியின்ன

இன்னமொன்றுசொல்லக்கே ளிருளேதோன்றுமுதலாக
சின்னபேய்கள்பூதம்பல் சேர்ந்தநெருப்புமிகமாயம்
நன்மைபலவாக்களுக்காணும் நாடாதுலகில்வேறுகொள்ளு
மன்னவிழியாய்க்குளமார்ந்தைக்கதிலேகுணங்களாயிடுமே (சஉஎ)

இடுமேயிரதமூன்றுசீலை யேகமாண்டுகெந்திரண்டு
தொடுமேதாளகமரிதாரந் துலங்கும்லிங்கம்வெள்ளியம்
விடவேயிவையொன்றிருகழஞ்சு வேண்டுமேகம்பதின்கழஞ்சு
நடுவாங்குமரிச்சாறரைத்து நன்றாய்க்கலத்தில் நடுவில்வையே ()

## குன்மத்துக்குச்சுயமாக்கினி.

வைத்தகலத்திற்பற்பமதைமகிழவொருகிண்ணிதான்மூட்டி
இத்தைச்சூரியபுடப்போட விதுவாம்பற்பமிருகுன்றி

உத்தேதேனிற்றான்கொள்ளு வோடும்பஞ்சகுலமெல்லாம்
அத்தரருளால்வியாசமுனி யருளும்படியேதான்செய்யே ()

செய்யுங்கெந்தகமரிதாரஞ் சீறமிரதமனோசிலையும்
உய்யுங்காந்தமிவைசமனா யுகந்துவரைத்துயிருபலமாய்
அய்யமாவாரையரைப்பலமு மாகுமொசுக்கலைச்சாறரைத்து
ஐபய்யரண்டுசாமமரை பரிந்தேயுருக்குகாரீயம் (௨௱௯௧)

காரீயமுருக்குமுகந்தனிலே கதித்தபொடியுமதிற்கூட்டி
பாராய்கிராம்புசாதிக்காய் பரிந்ததிப்பிலிவசுவாசி
நேரோசமனாயொருகூறு நிகழுஞ்செந்தூரமிருகூறும்
வாராய்முலையாள்கூட்டிவைத்த மருந்துசீனிபணவெடையே ()

## காரீயச்செந்தூரம்.

விடையாங்காரீயம்பலம்நானு மிகுத்தசட்டிதனிலிட்டுத்
திடமாநாயுருவியோர்கட்டு தீர்க்கநறுக்கிச்சட்டிக்குள்
பிடமாய்வறுக்கக்கரண்டியினாற் பின்னுமதனை நறுக்கியிட்டு
அடவாய்ச்சட்டியடிபோனால் மைப்பாய்சட்டியிப்படியே ()

இப்படியேழுபரிகாரமேழுகட்டுநாயுருவி
தப்பாநறுக்கித்தானெரிக்கச்சட்டியேழுமிகவுண்டாம்
ஒப்பாப்பருத்திப்பூச்சிக்கப்பாமுகந்தநிறமேயானுக்கால்
தப்பில்லாதவியாதிகட்குத்தானேயனுபானமாவாரையே(௨௱௯௪)

ஆவாரைசமூலந்தானுலர்த்தி அப்பாலிடித்துவடிகொண்டு, மாவா
ரைகழஞ்சிப்பொடியுடனேமருவுஞ் செந்தூரம்பணவிடையாம்
மேவித்தேனிலொன்பது நாள்மிகுத்துக்கொடுக்கத்தான்றீரும்
நாவாலுலாத்தாரகத்தியமுனிநன்றாயிம்முறைசெப்பிடவே. ()

இடவேநெல்லித்தான்றியுடனெரிக்குங்கிராம்புசாதிக்காய்
திடமாம்வகைக்குமுக்கழஞ்சுசேரவிடித்துப்பொடிசெய்து
விடவேகழஞ்சுப்பொடியுடனே மேவுஞ்செந்தூரம் பணவிடை
கொள், அடவாமந்தேனிற்கொண்டிடவே அகலுஞ்செந்தூரம்ப
[ணவிடையே

## இரசபற்பம்.

பணமாநாழிக்கொள்ளதனைப் பாங்காயரைத்துக்குகைபிடித்துக்
குணமாமிரதமிருபலமுங்குகைக்குள்விட்டுத்துளசிச்சாற்

மணமாம்வெற்றிலைச்சார்கூட்டிமகிழச்சமனாய்க்குகைக்குள் விட்
டு, தனலாஞ்சட்டியதுக்குள்ளேதாங்காச்சிறுகீளாவேகலவையே()

வைத்துச்சட்டியதனுள்ளேமருவுஞ்செங்கல்லுப்புடனே
ஒத்தச்சமனாய்த்தானிடித்து வொடுங்கச்சட்டிதனிலிட்டு
வெத்தகுகையையதனுள்வைத்துமேலைச்சட்டிமணஞ்செய்து
சித்தமுடனேமண்ணேழுதிறமாஞ்சீலைசுத்தியிட்ட (௬௯௮)

சுத்துஞ்சட்டியடுப்பேற்றித்துலங்குநாலுசாமமட்டு
மெத்தவனலைத்தானெரிக்கவெளுத்துநன்றாயாறுமட்டும்
இத்தையெடுத்துமறுபடியுமிந்தப்படியேகுகைபண்ணி
வைத்தசட்டிவிட்டுஅப்பால்மறுத்துஞ்சட்டிவைத்தெரியே. ()

எரித்தபற்பம்மொண்டாநாளெடுக்கச்சுத்தப்பற்பமதாம்
மரிக்குமண்டைவியாதிகட்குமறலிதனக்கும்பயம்பிறக்கும்
விரிக்குஞ் சடையோன்மலர்ப்பாதம் வேண்டிவினையைநிவர்த்தி
செய்யே, அரிக்குமருகன்கரிமுகவன்னந்தசயனம்போற்றியதே()

## சகலகழிச்சலுக்குலேகியம்.

போற்றுஞ்சாதிக்காய்பின்னும்புகழுங்குருசாணிசுத்திகஞ்சா
ஏற்றுங்கிராம்புலவங்கப்பட்டையேறுங்குளிகைநீராகும்
மாற்றுங்கருவேம்புசமனாகவறுத்துஇடித்துநிறைகொண்டு
ஆற்றும்வெல்லம்அந்திடைக்குஆவாரப்போடியுஞ்சேர்த்திடியே

இடிக்கும்லேகியந்தனையெடுத்துயிதவாய்ச்சுண்டைக்காயளவு
மடிக்கவுருட்டியிருநேரமருவிக்கொள்ளவல்லீராய்
நொடிக்குமுன்னேசலக்கழிச்சல் நுறுங்கவடித்துப்பின்னுங்கேள்
வடிக்குங்கிருணிவகையேழுமாறிப்போகுங்கண்டீரோ (௬௪௨)

## வேறு.

கண்டீரோசர்க்கரைப்புல்கொண்டுவெந்து கடுகவேநீர்ச்சோற்
றுத்தண்ணீர்விட்டு, பண்டுள்ளவுப்புவுள்ளி கூடச்சேர்த்துபதமு
மலிடித்துநன்றாய் வடிநீகொண்டு, மிண்டியதோர்நெஞ்சுகட்டு
வயிற்றுவுப்பல் மீறுகின்றதலைகனப்பு சேதமெல்லாம், அண்டா
மலோடிவிடுங் குழந்தைநோய்களாச்சரிய மிம்மருந்துஅறிந்து
பண்ணே (௬௯௫)

## அரிதாரசெந்தூரம்

பண்ணவேயரிதாரம் பொடியாய்ச்செய்து பண்புடனேபூசணிக்காய்ச்சாறுதன்னில், நிண்ணயமாய்வையவித்துப் பின்னுமயப்பா நேரானகற்சுண்ணாந்தண்ணீர்வார்த்து, உண்ணவேசர்சமனாய் நல்லெண்ணைகூட்டி யுடன்வித்துப்பின்னு நல்லெண்ணைதன்னில், கண்ணவேயவித்திடுவாமுக்காலப்பா கசடறுமேயரிதாரஞ்சுத்தியாச்சே. (௪௪௫)

ஆச்சப்பா மூக்கனாச்சா றெண்ணைதன்னை அனாத்திரண்டடையாகத்தட்டியப்பால், வாச்சந்தசட்டிக்கு ளடையைவைத்து மாசற்றவரிதாரம்மேலேவைத்து தாட்சியில்லாமறு அடையையுமேலேவைத்து தள்ம்பாமல்மேற்சட்டிகொண்டுமூட்டி, பாச்சிடுவாய்சீலைமண்தானேழுசெய்து பதறுமலடுப்பேற்றியனலைமூட்டே

மூட்டியேயெரித்திடுவாய்சாமமெட்டு முகிழ்விரியாமண்சீலைநன்றாய்ச்செய்து, நீட்டியதோர்பற்பத்தையெடுத்துக்கொண்டு நினைவாகவனுபானந்தன்னில்வைத்து, தாட்டிகமாய்த்தேனிலிடுமெண்டைசூலை தவறிவிடும்விஷங்களெல்லாந்தளர்ந்து போகும், வாட்டிவிடுங்கண்ணோய்வுமிகுந்துகண்டால் மாசற்றபழச்சாற்றில்மருவித்தாக்கே. (௪௪௬)

### வேறு.

தாக்கும்வாதமதுதனக்குத்தாங்காப்பலைவெட்டில்பணவிடைகொள், ஆக்குப்பிரமேகமதுகண்டாலதற்குப்பூசணிபழச்சாறு
போக்கில்லாதநீரடைப்பன்பொருந்தும்வெள்ளரிக்காய்தண்ணீர்
மாய்க்குஞ்சூதகவாய்வுக்குவாருபாவின்பால்குணமாம். (௪௪௭)

மலமுஞ்சலமுங்கட்டிவிட்டால் வறுத்துக்கோழிமுட்டையோடு
எலியின்புழுக்கைகோழிக்காரமியன்றகோழிக்கருவுடனே
நலமாயிவையெல்லாம்பொடிசெய்து நன்றாய்வெள்ளரிக்காய்
வெதுப்பி, அலமாந்தண்ணீர்தானிடவேயானகல்லுமகன்றிடுமே

## தாளகபற்பம்.

அசண்டசட்டியதற்குள்ளேயமூக்குச்சாறணைதானிடித்து
நெகண்டரிதாரமேல்வைத்துநிணாயாய்ச்சாரணைமேலிட்டு
துகண்டசட்டிமேல்மூடிதுலங்கவேழுமண்செய்து
புகண்டவடுப்பிற்றனேற்றிப்புகலாநாலுசாமமெரி (௪௪௯)

சாமம்நாலுதானெரித்துதாங்காதெடுத்துஆறவைத்து
வேமாமிலையையெடுத்தெறிந்து மிக்கமருந்தைப்பொடிசெய்து
காமம்பொடியைப்பரணிவைத்துகவரும்நாய்கட்கனுபானம்
ஆமாம்சொல்லவகைகேளீ ராகும்வெருகங்கிழங்காமே (௪௱௰)

வெருகங்கிழங்கும்விளாம்பொருக்குமிகுத்ததயிலமூண்டுபண்ணி
உருகுந்தயிலம்பணவிடையும்மாங்குந்தாரம்பணவிடையும்
இருக்காம்பொழுதுதானுண்ணவிபன்றகுட்டந்தான்போகும்
அருக்கும்புண்ணுக்கடுப்புக்குஆகுந்தேனுமனுபானம். (௪௱௧)

பானமுப்புப்புளிதவிர்த்துப்பால்நெய்வாழைப்பழமாகும்
ஆனகருப்புக்கட்டியுமாமதற்குச்சூத்திரம்வெள்ளாட்டு
தானுமுப்புக்கண்டமுமாந்தாங்கும்வெந்நீர்தானாகும்
கானமயிலேயரிதாரங்கருப்புக்கனுபானமதுவென்றே. (௪௱௨)

இரசலோகபற்பம்,

ஒன்றேரசமுமொருபலமாமுகந்தவரப் பொடிபலமொன்றனை
யாம், நன்றேகெந்தகம்பலமொன்று நல்லவெண்காரமரைப்பல
மும்,இன்றேகாந்தமுக்கழஞ்சுமேயகுமேனிச்சாறரைத்து
அன்றேசட்டிதனிலிட்டுஅப்பாற்சட்டிமேல்மூடே (௪௱௩)

மூடிச்சட்டிச்சந்துவாய்முசித்துவேழுமண்சீலை
நீடியிரண்டுசாமமதுநிகண்டாயெரித்துப்பொடிசெய்து
கூடியவாந்திவெடிசூலைகொள்ளீர்பணவிடைமும்மூன்றாய்
தேடித்தேனில்வெல்லத்தில்திறமாய்த்தீரும்வியாதியைப்பார். ()

பாண்டுகாமாலைவிஷபாகம்பண்ணிமகோதரஞ்சத்திகுன்மம்
மீண்டுவலிகுன்மமுளைமூலமிகுத்தவாய்வுதிரட்டியுடன்
தாண்டவர்பாதமலர்போற்றித்தானேதீரும்வறுமைகள்போல்
மாண்டுபோமேவியாதியெல்லாமகிழ்ந்துகொள்ளீர்பத்தியமாம்

பத்தியமாவின்பாலாகும்பருத்தமுருங்கைக்காயிலையு
மூத்தசுத்திவெள்ளாடுமுகிந்தவுப்புக்கண்டமதா
மெத்தனாக்கினைதானுமேவுமிருபதுநாள்மருந்தே
அத்தமருந்துவகத்தியனு ரடவாய்ச்சொன்னார்சுத்தமுடன் ()

வெள்ளியபற்பம்:

சுத்தவெள்ளியமிருபலமுந்தாலந்துகெந்தகம்ரசமுடனே
வைத்தரண்டுமைங்கழஞ்சு மருவுந்தேசிப்பழச்சாற்றில்;

இத்தழமென்னத்தானரைத்து யிலங்குந்தகட்டிற்றூன்பூசி
அத்தையொருநாள்சட்டிவைத்து ஆதித்தன்வெய்யிற்புடமிடவே

புடமிட்டரசம்பட்டைதானே பெரியசட்டிக்குள்ளேவைத்து
திடமாந்தகடேமதற்குள்வைத்து திருந்தவோடுதான்மூடி
அடவாஞ்சீலைமண்ணேமூ ஆனகுழிதான்வெட்டவகை
இடமேயாழமுள்ளவாயியன்ற குழியிடுயெருமுட்டையே ( )

உமூரிகெந்திசூரணம்.

எருமுட்டைமேலேசட்டிவைத்து யிதின்மேலொருமுழமுட்டை கொட்டி,திருவேரணையாய்த்திருபடவேத்திருந்த நெருப்பைபத்தா விட்டு மெருவேயெடுத்துக் குழிக்கல்லில் மிகவே யரைத்துப் பொடிபண்ணி, பொருவேலனையாய னுமானம் பொருந்தவகை தான்சிறுகையைக்கேள். (௪௫௫)

கேளாய்சிறுமூதிர்வேருடனே கிளர்ந்ததிப்பிலியேலங்கெந்தி
சூளக்கழஞ்சிசூரணமாஞ்சுகித்தபற்பமஞ்சாடி
ஆளும்பச்சைக்கரூநீரிலதனைக்கொள்ளகரத்தநீர்
வாளுமூதிரநீரிழிவுவாங்கும்பிரமியமாய்ந்துபோம் (௪௫௬)

போகுமேவிளாம்பிசினும்நெருஞ்சிவேரும் பூனைக்காலிவி ரையுடனேசிறுபூளைவேரும், வாகுடனேசூரணந்தான்கழஞ்சிதன் னில் மஞ்சாடிப்பற்பமதை மருவிக்கொள்ள, ஆகுமேயுதயாதியு ண்டுவந்தா லப்பனேதாதுவிர்த்திமிகுதியுண்டாம், தாகமாயிம்ம ரூந்து ஆவின்பாலுந்தாக்குவாய்மேகமெல்லாந்தவறிப்போமே )

தவறியதோர்நீரிழிவு நாவற்பட்டை தாங்காதவாவாரைச்சூர ணங்கழஞ்சு, பவமானபற்பமது தேனிற்கொள்ளப் பணவெடை யாம்வங்கபற்பம்பரித்துக்கொள்ளு, நவமில்லாமேகமெல்லா நடு ங்கிப்போகும் நாட்டிலுள்ள வயிற்றுநோய் நாடாதோடும், அவ மில்லைசூரணமும்பற்பங்கொள்ளு அகன்றிடும்நாய்கமெல்லாமதி ரிட்டோடும். (௪௬௨)

வெள்வங்கபற்பம்.

வேறு.

ஓடுமேவெள்ளித்தகடுதட்டி வுற்றவரசம்புளிபொருக்கும்
நீடுஞ்சட்டியடுப்பில்வைத்து நீளவாய்த்தகடுமெபொருக்குத்தாள்

வாடாத்ததனையுள்ளிட்டு வறுக்கக்கறனிடவதனிலிட்டு
கூடும்பற்பந்தனையெடுத்துக் கொடுக்கவனுபானந்திரிகடுகே. ()

திரிகடுகுடனேசாதிக்காய் தேடும்லவங்கம்வசுவாசி
அரியசமனுய்க்கொண்டிடவே ஆனசூரணங்கழஞ்சுதனில்
நெறியாம்பற்பம்பணவிடைகொள் நிச்சயஞ்சீனியிருகழஞ்சு
குறியாமிருபதுநீரிழிவு கூசாதோடுங்குணங்களீர். (௪௬௪)

## வங்கசெந்தூரம்.

குணமாம்வங்கப்பொடியுடனே கூட்டுப்பூலாநிலாவாகை
மணமாங்குமரிவேர்ச்சாற்றில் மகிழவரைப்பாயிலையுவ்வங்கம், தி
ணமாமடைபோற்றட்டியதைதின்டாய்முழுப்புடந்தான்போட்
டு,பணப்போலதனைப்பார்த்தெடுக்கப்பற்பங்காணுங்கண்டமே.

கண்டதிரிபலைகியாழத்திற் கடிகிக்குடிக்கப்பிரமியமும்
உண்டோமற்றவாதமுடனுகலுங் காஷ்டந்தன்னுடனே
பண்டையிஞ்சிச்சாறுடனே பறசகுந்தேனிற்பரிந்துதின்ன
அண்டாவிடமூத்திரக்கிறிச்சி யானவிவையெல்லாம்வங்கம் ()

வங்கஞ்செந்தூரந்தான்பண்ண மகிழவெள்ளியம்பலம்ரண்டு
இங்கிதமானவாட்டுப்பா லிலங்குமெண்ணெய்காடியுடன்
அங்கந்திரிபலைகியாழமுடனுவின்பாலுமதுசளிலே
தங்குமின்பம்வெள்ளியந் தணலைக்காய்ச்சித்தோய்த்திடவே ()

தோய்த்தேமும்மூன்றுதான்சிலவுஞ் சொல்லும் வெள்ளியங்காய்
ச்சித்தோய், மாய்க்கப்புளியஞ்சிறுயிடித்துமருவஞ்சட்டியில்தா
ன்வைத்து, நீக்குவ்வெள்ளியமதிலிட்டு நிம்பக்கொம்பால் மத்தித்
து,வாய்க்குந்தணலாய்த்தானெரித்து வர்ணங்குங்குமநிறமஞ்சள்

மஞ்சட்பொடியுமொருபலமு மருவுமோமமொருபலமு
மிஞ்சவெள்ளியமிருபலமு மேவியதனைத்தான்வறுக்க, மொஞ்
சுவங்கச்செந்தூர முசியாமல்நான்குபணவிடைகொள், அஞ்சி
யோடும்பிணிகளெல்லா மனுபானஞ்சொல்வேன்பிரப்புகேள் ()

பிறமேகமென்னுமிருபதுக்கும் பெருங்குமரிமணப்பாகாம்
மடயேயுதிரம்போர்கழிந்தால் மாறும்பசுவின்பாலிற்கொள்

ளறமேவெகுகழிச்சலுக்குஅனலாமெருமைமோர்தன்னில் [ம்
திறமேயாவாரங்கொழுந்தைத் துநிச்சயந்தின்னப்பிரமியம்போ

பிரமியமைந்துவகைதனக்குப்பேசமாவின்வெண்ணெயிற்கொள்
திரமியவாய்வுகிரந்திக்கு தினைவாம்பல ரிசியிற்கொள்
மறமேநோய்சரீரந்தான்பெருக்கமறவாதேனிற்கொண்டிடவே
விறமேவசலந்தான்மிகக்கழிந்தால்மிருத்தகியாழமதிமதுரம் (௪௭௧)

மதுரங்ககால்வயிறெரிந்தால் மாறுங்கற்பூரந்தன்னிலிட
அதிருஞ்சன்னிபலவுக்கு மானதெளக்குத்தேங்காயும்வரு
மெதுவாம்வயிற்றுக்கட்டும்போம் விளங்குமம்மான்பச்சரிசி
சுதயாஞ்சாறுஆழாக்கு துலங்கவுண்மீர்சுகமிதுவே (௪௭௨)

சுகமேமூத்திரமூத்திரமென்ற துலங்குசர்க்கரையதனிற்கொள்
தகமேமூக்கிலிரத்தம்வந்தால் தாக்குமமுக்குருச்சாற்றிலிட
அகமேகைகாலெரிப்புக்கு ஆகும்பூசனிச்சாற்றிலிட
வகையாநோய்கட்கனுபானமருவுமிஞ்சிச்சா.க்கனாதேன் (௪௭௩)

தேனேகாயும்வறண்டாக்கால்தேடுமெண்ணெய்வெண்ணெயிற்கொள்
கானம்வாழைப்பழமாகுங்கனத்தபிரமியம்பிருபதுக்கும்
மீனங்குகைகால்சயித்தியமா மிருவுந்தேனிற்கொண்டிடவே
பானகல்லுதானடைத்தாற் பகரக்கோழிமுட்டையதே. (௪௭௪)

முட்டையோடுமெலிப்புழுக்கைபூசியபாவெண்காரத்துடன்பொ
ரித்து, மட்டடாப்பொடியிற்றூன் கொள்வீர்மருவும் வெள்ளரிக்
காய்வெதுப்பி முட்டைச்சுனாயினறல் னீரு மூசிய வெள்ளாட்டுப்
பாலின்நீர், இட்டுப்பாரிற் கல்லடைப்ப விதுவேவாமின்னஞ்சதை

கருவங்கசெந்தூரம். [யடைப்பேன்

றதையேயடைப்பன்கிறிச்சிபலதயிலேயித்தவனுபானம்
விதமாங்கழிச்சலதனுக்கு மேவும்பலபலவியாதிகட்கும்
பதமாஞ்செந்தூரத்துடனே பலவகையுள்ளசெந்தூரம்
மதிநேருடையீரனுபானம் வகைநீயறிந்துசெய்வீரோ (௪௭௫)

செய்வீர்கருத்தபீய்க்கட்டி திறமாயிரண்டுபலம்வாங்கி
அய்வீர்மஞ்சளோமமுடன தவுவகைக்குப்பலமிரண்டு

எய்வீர்சட்டிதனில்வறுக்க பேறக்குங்குமநிறமாகு
மைவீர்விழியேசெந்தூரம் வகையாய்ச்கொள்ளமகிமையிதே ()

இதுவாஞ்சாத்தியமிசுக்காழிந்தா லிதற்குச்சர்க்கரைகற்கண்டு
பொதுவாங்கிராணிவகைக்கழிச்சல்புகட்டுமாவின்னெய்தேனு
மதுவாந்தேங்கினீரருந்த மறக்குஞ்சலத்துப்பிரமியமே
மெதுவாயுரைத்தாரகத்தியனூர் விளம்பக்சேளீர்வாதம்போம் ()

வாதமாகில்வேர்க்கொம்பு மருவுங்கியாழமதிற்கொள்ள
சீதமுடனேபித்தகுன்மஞ் சேருமேரிகுன்மவலிகுன்மம்
போதமுள்ளசத்திகுன்மம் பொருந்துந்திப்பிலிதேனிலிட
வேதமிகுச்சிச்சாறுடனே விளங்கும்வியாதிக்கனுபானம் (௨௱௪௯)

அனுபானமில்லாப்பானைதனி லாகுங்கொள்ளியதனிலிட்டு
இனிப்பாய்ப்படிரண்டுகல்லுப்பு யேகமொன்றுச்சமனாக
கனிவாய்க்கமலத்தீயெரிப்பாய் கடிகையாறுநாழியதாய்
மனுப்பானைநிறையவிட்டு மண்ணுமேமூசீலைசெய்யே (௨௱௫௰)

குன்மத்துக்குச்சதுரக்கள்ளிஅவியல்சூரணம்,

சீலைமண்செய்துகுருவெட்டி சேர்த்தவுமியுமாட்டெருவும்
கோலமானவெருமுட்டை கொண்டேமூன்றுநாளெரித்து
சாலவெடுத்துப்பொடித்துநன்றாய்த் தாங்காச்சீலைவடிகொண்டு
காலைவெந்நீர்வெருகடிகொள் சுதித்துவோடும்பஞ்சகுன்மம் ()

பஞ்சகுன்மம்பறந்திடவே பாகம்வெந்நீர்வெருகடிகொள்
மிஞ்சாதெரியும் பித்தன்னில் மேவும்பசுவின்பாலிலுண்ண
அஞ்சாதோடும்பாண்டுவுட னனதிரிகடுகுதேனிலிட
தஞ்சமென்றேயிதனையுண்ண சகலநோயின்சத்தியும்போம் ()

சத்திசாரணைசூரணம்.

சத்திசாரணைகிழங்குவெட்டித் தறித்துக்குறுணிபொடியாக்கி
மெத்தவாவின்பாலவித்து மேவுநிழலிற் சுக்கதுபோல், வைத்தே
யிடித்துப்பொடிசெய்து மருவும்வெருகடிரண்டதுதான், இத்த
தேனிற்குழைத்துநன்றாய்த்தீரும்வியாதிதெகிட்டக்கொள்ளே (

கொள்ளநாற்பதுநாளதுதான் கொலக்காயங்குறித்துநோய்தான்
உள்ளவியாதிக்கிதுவாகு முகந்தவுப்புப்புளியிடமேவ
மெள்ளவாவினெய்யாகு மிகுந்தமுருங்கை திருக்கைசுரு
தள்ளாதிதனைக்கொண்டாக்கால் தாங்கும்நோய்கண்மாண்டிடுமே()

## மண்டூரம்.

மண்டூரத்தைதக்கொண்டுவந்து மகிழவிடித்துப்பொடியாக்கி
கொண்டவெற்றிலைநொச்சியிலை கூறுஞ்சாற்றிலிம்மூன்று
மிண்டக்காய்ச்சியூறவிட்டு மிகுத்தவாட்டுக்கோமியத்தில்
ரண்டுமூன்றுநாளூறவிட்டு நயந்தேயனாகற்றாழஞ்சாற் (௫௮௫)

கற்றாழஞ்சார்றிலொரு சாமங்கெவளைத்துமடக்கல்வைத்து
அத்தவாலியையதன் மேலேயணைத்தமருந்தையதனிலிட்டு
உற்றமேவாடுதான் மூடி யொடுங்கச்சீலைமண்செய்து
அத்தராவில்புடமாக அறுபதுபுடமுமப்படியே (௫௮௬)

அப்பாலெடுத்துப்பரணிவைத்து ஆகுமிரண்டுபணவிடைதான்
மெய்ப்பாந்தேனிற்கொண்டிடவே விளங்குமிருமல்மகோதரமு
ம், ஒப்பாம்பாண்டுகாமாலை வுடம்புசோகைவீக்கமுடன்
எய்ப்பாமிளைட்புபெருவயிறு யேகன்கைகாலசதியும்போம் ()

போமேபத்தியமுருங்கைக்காயிலை புகழுங்கீரைத்தண்டுடனேற்
ஆமேபசுவினெய்பாலா மாகுமாடுகுருவிகொக்கு
நாமேபத்தியமிகவிருந்தால் நன்றாய்த்தீருநோய்களெல்லாம்
தாமேசொன்னாரகத்தியமுனி தவிரயின்னமீருள்ளி. (௫௮௮)

## தாரபற்பம்.

ஈரவெங்காயமருநாழியே றபின்னைடைதான்றுவைத்து
மீரவிருநாழிச்சாறதுதான்மிகுத்தபசரிச்சாற்சரியாய்
வாரோமூலையாயிச்சாறு மருவுங்குறுணிநாளுழி
தீரவிடித்துத்தான்பிழிந்து செலுத்துவகைகேளச்சாறே (௫௮௯)

அச்சாறதனுள்நாலுபல மரிதாரத்தைத்தானைத்து
வச்சசாறுவற்றவற்ற மகிழ்ந்துகுழிக்கல்தானாக்க
அச்சமிலலாச்சட்டிதனி லடைபோல்தட்டியதனில்வைத்து
இச்சையுடனேகுழிக்கல்லை யிந்தச்சாற்றால்கழுவியிடே (௫௯௦)

கழுவுஞ்சாறுமடைமேலே கலந்துசட்டிக்குழம்பாக்கி
வழுவில்லாதமறுசட்டி யகிழ்ந்துமூடிச்சீலைசெய்து
அழகாயேழுமண்செய்து அப்பால்புடமாக்குமண்ணைப்பி [லே
நழுவிப்புகைச்சார்போகாமல் நாற்பதுநாழிகை யெரித்தபி

னெடுத்துக்கரண்டிதனைக்காய்ச்சி யிதிலேபற்பம்பொடிபோட
மடுத்துயிருந்தால்நல்லபற்ப மறுகப்புகைந்தால்பற்பமில்லை
தொடுத்தசட்டிமண்செய்து துலங்கத்திரும்பவடுப்பேற்றி
கடுதமாகச்சாமமொன்றுகனலாய்த்திரும்பவெரியிடவே (சகஉ)

எரித்துவதனையெடுத்துவைத்து யிதவாய்ப்பற்பம்பதங்கண்டு
தரித்தவனுபானந்திரிகடுகு தந்தப்பொடிதான்பணவிடையு
முரித்தபற்பமதிற்பாதி முழுங்கவிருமல்தான்போகும்
கரித்தசயரோகந்தான்போகுங்கனத்துக்கொள்ளும்பிறநீர்போம்

பிறநீர்க்கோவைதேனுடனே பெருகும்பற்பம்பணவிடைகொள்
ளருமேநோய்தேசிப்பழச்சாறரும்பாந்தாமணாககதுபோகு
ம், வருமேபூதுகாமாலை மருவுங்கையாந்தகரயிலை
திருமேகுட்டம்வெண்குட்டந்தெறிக்கும்நிலப்பனைக்கிழங்காமே

ஆகுங்குட்டஞ்சீரகத்தி லானசந்நிபலவாதம்
போகுமக்கினிமாந்தமுடன் பொருமல்திருந்தேனிலிடத்
தாகமுடம்புசோகையெல்லாந் தவறிப்போகுங்கையாஞ்சாற்
ஏகவீக்கம்பொருமலுக்கு யிடுநீகடுக்காய்கையாஞ்சாற் (சகரு)

சாறுந்தெற்பைபுற்சாறு தளப்பக்காரசாமுடன்
நேமாகொண்டால்கருங்குட்டம் நெகிழ்ந்துபோகுமின்னம்நீ
பாருங்குமரகன்டனுக்குப் பண்ணும்துப்பிலிதேனிற்கொள்
வேருஞ்சிவந்தசெங்குட்டம் விட்டேபோகுங்குமரிச்சாற் சகசா

குமரனுடம்புமாப்போலே கொண்டேயுதிர்ந்துதானிருந்தால்
தமரமக்ராகாரமதைத் தகர்த்தேபொடியிற்பற்பங்கொள்
அமிர்தமானதியிர்வாத மடிக்கும்நிலப்பனைக்கிழங்கதனால்
எமர்க்குங்காயசுவாசத்துக்கு யேற்குந்திரிபலைச்சூரணமே ()

சூரணமுடனேஅரிதாரந் துலங்குபற்பம்தான்கொண்டால்
காரணமானபுளிபுகையுங் கத்திரிவெள்ளரிபூசனிக்காய்

வாரணங்கோழிபன்றியுடன் வழங்குஞ்சேமத்தண்டுமொச்சை
ஆரணங்கவளுமாகாது அப்பாதயிர்மோரகத்தியதே (௪௯௮)

### சாரணைச்சூரணம்வாய்வுக்கு.

### வேறு.

அகத்தியமாஞ் சாரணையின் கிழங்கு கொண்டு அதையிடி
த்து யிருகழஞ்சு நாழிப்பாலில், சுகத்துடனே நீர்ப்பாலுஞ்சு
ண்டைக்காய்ச்சி, துயிலதனில்வடிகொண்டு கொள்ளும் போது,
செகத்திலுற்ற வாயுவெல்லாந் தெறித்துப்போகும் தோசத்திலகு
ணமெல்லாந்தெளிந்துபோகும், நிகழ்த்திடவே பழம்புளியுமிஞ்
சிசுண்டி நினைவாககழற்கறியுமுனைந்துவெள்ளே. (௪௯௯)

### அளாயாப்புக்குபூசுமருந்து.

கொள்ளவே யளாயாப்புக்கட்டிப்போகக் கொடிகழஞ்சியி
ரதமென்றுபீயம்ரண்டு, தள்ளுரசகர்ப்பூரமொவேறுகூட்டித் தாங்
காதஅணடத்தோட துவநாலாம், விள்ளாமல் வெண்கருவா லாட்
டிப்பின்னு மிளகனவாய் வெள்ளையது கூடச்சேர்த்து, எள்ளள
வு யிடையில்லாக் கட்டிமேலே யிதவாகப் பூசிடவே யிகழ்ந்து
போமே. (௫௱)

இகழ்ந்துதான்கெர்ப்பம்விழின்னங்கேளு யிதமானசூடன்
ரண்டுகாயமூன்று, புகழ்ந்திடவே விராகனெடை நன்றாய்ச்சேர்
த்து பூடுமொரு பலமுரித்து கூடப்போட்டு, தகர்ந்திடமாவிலிங்
கைதுளிர் பிடிதானென்று தருகாம லிவ்வளவுமிலையாட்டி,
உகந்திடவே பின்னைக்காயளவுமூன்றுவுண்டையது தானருந்தவுந்
தியாமே (௫௱௧)

### குன்மத்துக்கு.

### வேறு.

முந்தின்சாரணைமூன்றுபல மூருகுவெல்லஞ்சரிகொண்டு
உத்தக்குழிக்கல்லிற்றனைத்து வுண்டுமாவிநெய்யிற்கொள்
மெத்தவுருட்டுநெல்லிக்காய் மேவும்பிரமாணந்தான் கொண்டு
குத்தமில்லாமற்றூன்கொள்ளக் குணமாம்வியாதிகுணங்களே()

குன்மந்தீருஞ்சுரோணிதம் போமகூறும் வியாதியெல்தீரும்
வன்மையிலேலக்ருமியுடன் வருத்துக்கிராணியறுவகையும்
துன்னிமலங்குன்மாமாலை சொல்லும்பாண்டுசயமோகம்
புண்மையாகுயவாதமெல்லாம்புகலுஞ்சாரணைப்பர்ப்பஞ்செந்தி

கெந்தகபிற்மெயச்சைக்கிரந்திசூலைக்கு.

கெந்தகசுத்திதான்கேளீர் கிளர்ந்தபசுவின்பால்மோரா
மலர்ந்தகரடிவெள்ளாடு மருவுநெய்தான்பூசணிக்காய்
விந்தைமாதளைசம்புரச மிகுந்தகருட்டஞ்சாறுதன்னில்
சந்தேகமில்லாமலிவ்வகையிலே தாம்சுத்திபண்ணுவதே (௫௱௪)

பண்ணுமந்தாதாமரையும் பசருஞ்சாலைநீர்முள்ளியும்
எண்ணும்பானையிலிதைப்போட்டு மேகம்வைத்தான்சட்டி
மூன்றுகெந்தகம்மேல்வைத்து சுகமாமூடியெரியிட்டு
நண்ணுநாலுநாழிகைதானெரித்துநலிவைமாறியபின் (௫௱௫)

எடுத்தேபார்க்கச்சுண்ணம்பா யேகவிரியுங்கெந்தகமு
மடித்துவாசனைதானுமில்லை வாசம்பனைவிடை தேனைச்சர்க்க
ரை,தொடுத்தமருந்துபாகமதாய்த்துலக்கும்வயிற்றுப்பிணிபோ
கு,வெடித்தவியாதிதான்போகயேறமறுக்குங்கெந்தகமே (௫௱௬)

கெந்தகத்தின்குணங்களாய்கிளர்ந்தவலியுந்தான்போகும்
வந்தகுன்மகுட்டமுடன் மருவுங்கிருமிப்பறவுடனே
சொந்தமானசுவாசகாசந் துலங்குசூலைவாய்வுசுரம்
விந்தையானவீரியமு மிகவுந்தாதுவுண்டாமே (௫௱௭)

கிரந்திசூலைக்குநாகசெந்தூரம்மேகத்துக்கு.

உண்டார்தண்டுவியாதியுமா மோடுமூலவியாதிகள்போம்
கண்டதப்பமுண்டாச்சு காந்திசரீரப்புளகிக்கும்
மண்டலத்தோர்கள்தானறிய மன்பதறுவார்கள்முமோ
பண்டேயுள்ளவியாதியெல்லாம் பற்பங்கண்டுநெகிழ்ந்திடுமே ( )

நெகிழ்ந்தநெல்லிக்கெந்தகத்தை நேமோநாலுபலம்வாங்கி
உகந்துவெங்காயச்சாறுவிட்டு வொருமூன்றுநாளுந்தானரைக்க
புகழ்ந்தமுள்ளங்கிச்சாறவிட்டுப் பின்னுமூன்றுநாளரைக்க
தகர்ந்தபற்பந்தேனிற்கொள் தாறுகிரந்திசூலையும்போம் ( )

போகுநாகப்பலமஞ்சு பொருந்துமிதுப்பையெண்ணதனை
வாகயிருட்புக்கரண்டிதனில் வளமாய்த்தடவிநாகமதை
ஏசமூருகிவெள்ளாட்டு யினியபாலிவிரண்டுபத்து
ஆகமுடனேதாஸ்சாய்க்க அதுவுஞ்சுத்தியானதுபின் (ரு௱ய)

பின்தான்ருண்டுசட்டிதனில் பிலத்தநாகமதைவைத்து
வன்தாஞ்சுக்குபலமொன்று மருவுமோமம்மனைப்பலமே
மின்பபஞ்சமளாருபலமு மேசவெடியுப்ப நாலுபலம்
முன்போவிடித்துப்பொடிசெய்து மோதநாகமேற்றூவே ()

தூவித்தூவித்தான்வறுக்கத் தூலக்சமாசவெந்துவரில்
மேவிச்சிவந்தநாயருவி மெத்தநறுக்கிப்போட்டுவறு
ஆவியந்தச்சட்டியிட்டு அப்பால்மறுசட்டியிட்டுவறு
கூவிச்செந்தூரமாதளப்பூ குறித்தநிறமாய்வந்தபின்பு (ரு௱யஉ)

வந்தசெந்தூரப்பணவிடை தான் வலுத்துப் பொடிசெய் திரிசடு
செந்தேனதனில்வெருகடியுந் திரட்டிக்கொள்ளத்தீருநோய் [கை
எந்தயினையிருமலுட னேகுமந்தாரகாய்ச்சுவாசம்
சொந்தசிலேற்பனமரிகுராலுந் துலங்குநெஞ்சுநோயும்போம் ()

போகுஞ்செர்ப்பலூஷிணரோகம்பொருந்துஞ்சுக்கிலபிரமியமும்
ஆகுமிந்திரியசட்டுக்கு ஆனகல்லுசலதயடைப்பன்
ஏகுங்குன்மஞ்சோகையுட னெரியுமவுத்திரிமுகவெரிவுந்
தாசங்கைகாலெரிவுடனே சகலநோய்கள்தீர்ந்துவிடும் (ரு௱யகூ)

விடுமோபாவாரம்வேர்ப்பொடியும் விளங்கும்பணவிடை செந்தூ
ரம், தொடுமோபாவாரைத்தயிலமதில் துணிந்தேகொள்ளச்சலக்க
ழிச்சல், படுமெயிருப தூவகைபள தும்பரிந்தேபோகுஞ்செந்தூ
ரம், அடவாய்பத்தியமாப்புளியானசோறுபன்றித்தல் ளுதள்ளே.

வெள்ளீயக்கட்டிசெந்தூரம்.

வேறு:

தள்ள மல்வெள்ளியக்கட்டிவாங்கி தகடாகப் புளியிலேபோ
ல்கத்திரித்து, மெள்ளவேசடட்டபங்கொட்டை மஞ்சளோமம் வி
தமாகச்சமன்கொண்டு தூளதாக்கி, கொள்ளவேம்காணிப்பட்டை
மேலேயேறுங்குறும்பொடியைப்பரப்பியதன்மேலேயீய, வள்
ளமெனுந்தசடதனைப்பரப்பிநன்றாய்மடித்துநீசுருட்டிடுவாய்திர
ணைபோலே (ரு௱யசு)

